# ஆராய்ச்சி மேடை.

## மாஜினி சரித்திரமும் மனிதர்கடமைகளும்

ஆசிரியர்:— எம். ஆர். ஜம்புநாதன்.

வெளியிட்டவர்:— சூடன் அண்டு கம்பெனி,

14, பள்ளியப்பன் தெரு, சௌகார் பேட்டை, சென்னை.

விலை ரூ. 2—0—0.

ரோம் ராஜ்யத்தின் பண்டைப் பெருமைக ளெல்லாம் அழிந்து அடிமையாய்க் கிடந்த இட்டலி தேசம் மறுபடியும் விடுதலை அடையும் பொருட்டு அரும் பெரும் தேச சேவை புரிந்து, அதன் பயனாகச் சிறைச்சாலையில் அடைபட்டும் அயல் நாடுகளில் வாழ்ந்தும் வந்த தேச பக்தர் ஜோசப் மாஜினியின் பெயரைச் சுதந்திர உலகம் நன்கறியும். இவரது பெயரே தேசாபிமானம் என்று அர்த்தம் கொள்ளக்கூடியதா யிருக்கிறது. தமிழில் கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்களால் எழுதப் பெற்ற மாஜினியின் சரித்திரம் பறிமுதல் செய்யப்பட்டது. இப் பொழுது ஸ்ரீமான். M. R. ஜம்புநாதன் "மாஜினி சரித்திரமும் மனிதர் கடமைகளும்" என்ற புஸ்தகத்தை எழுதி வெளியிட்டுத் தமிழுலகத் திற்குப் பெரிதும் உதவி செய்திருக்கிறார். தேச சுதந்திரத்திற்காக உழைக்கும் இக் காலத்தில், இந் நூல் தமிழ் மக்களுக்கு அவஸியமா யிருக்கிறது. இவ் விடுதலை வீரரின் தேச பக்தி தக தக வென்று கொதிக்கும் ஆவேச வாக்குகளைப் படித்துத் தமிழ் மக்கள் நவம் நவமான எழுச்சியைப் பெறுமாறு செய்த ஜம்புநாதரவர்களுக்கு எமது வந்தனங்கள். தேசபக்தி யற்றவர்கள்கூட இதைப் படித்தால், தேசாபிமானிகளாகி விடுவார்கள். இதைத் தமிழகம் தக்கபடி ஆதரித்து ஆசிரியருக்கு உற்சாகம் அளித்து, இம்மாதிரி அநேக புஸ்தகங்களை எழுதும்படி செய்ய வேண்டியது தமிழ் மக்கள் கடமை யாகும்.

எளிய நடையில், நல்ல முறையில் வியக்தமாக எழுதப்பெற் றிருக்கிறது. நல்ல காகிதம்; நல்ல எழுத்து. தேசாபி விருத்தியில் ஆசை கொண்ட ஒவ்வொருவரும் இதை அவஸியம் படிக்க வேண்டு மென விரும்புகிறோம்.

---

பெயர்:— அனுசக்தி யோகம்.
எழுதியவர்:— மகாத்மா காந்தி.
மொழிபெயர்த்தவர்:— க. சந்தானம்.
வெளியிட்டவர்:— எஸ். கணேசன், திருவல்லிக்கேணி, சென்னை.

**விலை அணு நான்கு.**

இதை எழுதியவர், மகாத்மா காந்தி அவர்கள். இவர் பகவத்கீதைக்கு நூதனமான வியாக்யானம் கொடுத்து எழுதியிருக்கிறார். சாதாரண மனிதர்கள் பகவத்கீதையைப் படிப்பதென்பது இலகுவானதன்று. பண்டிதர்களுக்கும் பாமரர்களுக்கும் விளங்கும் வண்ணம் இலகுவான நடையில் பகவத்கீதையை குஜராத்தில் இவரால் மொழி பெயர்க்கப்பட்டது. இதில் இவரது கீதா அனுபவம் விளங்குகிறது. புதிய வழியில் கீதையை மொழிபெயர்த்திருக்கிறார்.

இந்த மொழிபெயர்ப்பு நூலின் பெருமையை அறிந்து ஸ்ரீமான். க. சந்தானம் அவர்கள் இதைத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். இவர் வேலூர் சிறையிலிருக்கும்பொழுது இதை மொழிபெயர்த்துத் தமிழர்களுக்கு உதவி செய்திருக்கிறார். இலகுவான நடை; புஸ்தகம் குறைந்த விலையில் இதை விற்க முன்வந்த சென்னை ஸ்ரீமான். கணேசனைப் போற்றுகிறோம். வட நாட்டில் ஹிந்திப் புஸ்தகங்களை ஆயிரக் கணக்கில் வெளியிட்டு குறைந்த விலைக்கு விற்பதுபோல, தமிழ்ப் புஸ்தக வெளியீட்டில் ஸ்ரீமான். கணேசன் செய்து வரும் தொண்டைத் தமிழர் ஆதரிப்பார்களாக.

"சுவாமி"

---

## சுகுணவதி

எளிய நடையி லெழுதப் பெற்றிருக்கும் சுகுணவதி அல்லது மனம் போல மாங்கல்ய மென்னும் பெயரிய நவீன மொன்று வரப் பெற்றோம். இதன் ஆசிரியர் பல பத்திரிகைகட்கும் கட்டுரை நல்கி வரும் மாந்தை திரு. சா. கிருஷ்ணய்யராகும். பெயருக்கேற்ப விஷயம் பெற்றதா யிருக்கின்றது. பெதர்வெயிட் பேப்பரில் D. C. 16. mo. அளவில் 168 பக்கம் கொண்டு சித்திரப் படங்களைப் பெற்றறு அழகாகத் தோன்றுகிறது.

இதன் விலை ரூ 1—0—0. என்பதை யறிய அதிகமென்றே சொல்லலாம். இவ்வித நூற்களெல்லாம் மக்களுக்குச் சகாயமாகக் கிடைக்க வேண்டுவது அவஸ்யமாகும்.

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் கௌஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

R. S.

---

"பாரதி"யின் பம்பாய் ஏஜண்ட்.

# K. S. Naganathan,
## C/o. The Madura Knitting Co.,
## 47, Chackla Street,
## Bombay 3.

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!
குறைந்த விலே! நிறைந்த பொருள்!! சிறந்த நவீனம்!!!
பாவலர், நாவலர், மற்றியாவரும் பெரிதும் விரும்பும் பாச்சுவை
ததும்பப் புதுமை பெற்றிலங்கும் உயர்ந்த பதிப்பு!

## சுகுணவதி அல்லது மனம்போல மாங்கல்யம்.

விலே ரூபா ஒன்றே.
கொஞ்சம் பிரதிகளே மீத மிருப்பதால் முந்துவது நலம்.
ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹவுஸ், மைலாப்பூர், மதராஸ்.

## "இந்திய மித்திரன்"

சிறந்த தேசீய வாரப் பத்திரிகை.
ஆசிரியர்: B. வேணுகோபாலன் அவர்கள்.

மலேயா நாட்டிலே தமிழ்ப் பத்திரிகைகளில் தேசீயத்தையே பிரதானமாகக் கொண்டு வெளிவருவது எது? தொழிலாளர்களுக்குத் தொண்டனு யுழைப்பது எது? திக்கற்ற இந்தியக் கூலிகளுக்குச் சிறந்தவழிகளே எடுத்துக் காட்டி, மோசக்காரர்களின் படு மோசத்திற் காளாகாது தப்புவிப்பது எது? ஆயிரக் கணக்கான சந்தாதாரர்களைப் பெற்று எண் டிசை வர்த்தமானங்களேயும் கொண்டு வீரமுடன் தீரமாக உலாவி வருவது எது? "இந்திய மித்திரன்" ஒன்றேயாகும்.

வருட சந்தா: மலேயாவுக்கு வெள்ளி 4/–
இந்தியா, பர்மா, சிலோனுக்கு ,, 5/–
விலாசம்: மானேஜர், "இந்திய மித்திரன்,"
87, பெல்பீல்ட் தெரு, ஈப்போ., F. M. S.

## பிரிண்டிங் மெஷின்கள் தேவை.

சிங்கிள் ராயல், டெ. கிரௌண், டெ. டிம்மி மெஷின்கள்
பவர் பிட்டிங்குட னிருந்தால், முழு விபரத்துடன்
உடனே அறிவிக்கவும்.

மானேஜர்,
ஆனந்தா பிரஸ்,
உத்தமபாளையம்.

## "கலா நிலயம்"

இது ஓர் இலக்கிய வாரப் பத்திரிகை.

கலையுணர்வும், கலா ஞானமும் பெறுவதற்கு இது ஒரு நல்ல கருவி யென்றால் மிகையாகாது. இதில் இலக்கிய வளர்ச்சிக்குரிய கட்டுரைகளே மலிந்து வருகின்றன. கம்ப ராமாயணம், தமிழ்ப் பாடம், அகப்பொருள் வரலாறு, செந்தமிழ் நாவல், ஆங்கிலப் புலவர்களாகிய கார்லைல், ரஸ்கின், எமர்ஸன் முதலியோரின் கட்டுரை மொழி பெயர்ப்புகள், மற்றும் பல விஷயங்கள் அவ்வப்போது வெளிவரும்

சந்தா விபரம்.

சந்தா உள்நாட்டிற்கு ரூ 7—8—0 வெளிநாட்டிற்கு ரூ 9—0—0 தனிப்பிரதி அணு 3 ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—மானேஜர்,
11, வெள்ளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை.

## "பாரதி" ஏஜெண்டுகள்.

தமிழ் நாட்டிலே சுற்றுப் பிரயாணம் செய்யப்போகும் "பாரதி"யின் மானேஜர், ஏஜெண்டுக ளில்லாத ஊர்களில் ஏஜெண்டுகளை நியமிப்பார்.

அபேக்ஷையுள்ளவர்கள் தாமதியாது முன்னதாகவே ஆபீஸுக்குத் தெரிவிக்கவும்.

## சார்ஜ் குறைக்கப்பட்டு விட்டது.

என்றாலும்

நேர்த்திக்கும் உறுதிக்கும் உத்தரவாதம்.

இங்கு

பிரிண்டிங், ரூலிங், பைண்டிங் ஆகிய எல்லாவித வேலைகளும் விரும்பிய வண்ணம் குறித்த காலத்தில் செய்து தரப்படுகிறது. வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனிக்கப்படும்.

பரீக்ஷார்த்தமாகவேனும் உங்கள் ஆர்டர்களை ஒரு முறை கொடுத்துப் பாருங்கள்.

ஆனந்தா பிரஸ், உத்தமபாளையம்

## "லோகோபகாரி"

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினல் லோகோபகாரிக்குச் சந்தாதாரராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளி வருகிறது. முப்பத்தேழாவது ஆண்டு நடக்கிறது.

பத்திராதிபர்: பரலி— சு. நெல்லையப்ப பிள்ளை,
லோகோபகாரி பத்திரிகாலயம்,
சிந்தாத்ரிப்பேட்டை, சென்னை.

வருஷ சந்தா ரூபாய் நான்கு.

## 1930-ம் வருட வால்யம்

புதிய சந்தா நேயர்கட்கோர் நல் விருந்து.

---

இதில் இந்திய தேசாபிமானிகளின் படங்களும் பெரியோரின் படங்களும், அவர்தம் விரிவான சரிதைகளும் அடங்கியுளது. அன்றியும், சிறந்த ஆசிரியர்களாலும் பிரபல நியாயவர்திகளாலும் அறிவு தருவதாய், ஆனந்தம் நல்குவதாய், செல்வம் ஈவதாய் நவம் நவமாக எழுதப்பெற்ற அற்புதமான வியாசங்களை 800 பக்கங்களில் கொண்டதா யிருக்கின்றது. பத்திரிகையின் விஷயப் போக்குக்கும் அச்சுக்கும் ஏற்ற விதமாக நேர்த்தியான காலிகோவினல், அழகாகவும் உறுதியாகவும் பைண்ட் செய்யப்பெற்று, தங்க மசியில் காலிகோவின் மேற்புறத்திலும் அச்சிடப்பட் டிருக்கிறது.

பிரதி 1-க்கு விலை ரூ. 2—8—0

தபாற் செலவு பிரத்தியேகம்.

வெளி நாட்டிலுள்ளோர் தபாற் செலவு அணா 8 சேர்த்து ரூ. 3. அல்லது 5 ஷில்லிங் போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டும்.

## விளம்பர விகிதம்.

---

| | | | | |
|---|---|---|---|---|
| பாரதி பேரேடில் கட்டம் 1-க்கு | | | ரூ. | 1—0—0 |
| சாதாரண பக்கம் | 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, | ,, | ½-க்கு | ,, ,, | 5—8—0 |
| ,, | ,, | ¼-க்கு | ,, ,, | 3—0—0 |
| கவர் | ,, | 3 ல் | ,, ,, | 15—0—0 |
| ,, | ,, | 4 ல் | ,, ,, | 20—0—0 |

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன் பணம் அனுப்ப வேண்டும்.

நீண்ட கால விளம்பரஞ் செய்வோர் எழுதவும்.

# "பாரதி"

## ஒரு தேசீய மாதப் பத்திரிகை.

சுதந்திரம் பொங்கி சமத்வம் ததும்பி சகோதரத்வம் ஜ்வலித்து
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியரனைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான
கொள்கையுடன் தேசாபி
விருத்தியை முக்கிய
முதல்நோக்கமாகக்
கொண்டு

தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணங் கமழும்

**மாஸிகை இஃது ஒன்றே யாகும்.**

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள். உங்கள்
நண்பர்களுக்கும் இதனைப்பற்றி அறிமுகம்
செய்து சந்தாதாரர்களாய்ச் சேர்த்துக்
கொடுங்கள்.

சந்தா விபரம்

உள்நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ **2—0—0**
வெளி நாடுகளுக்கு ,, ரூ **2—8—0**
அல்லது **4** ஷிலிங்

தனிப் பிரதி விலை அணு 3. அயல் நாடு அணு 4.
ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஏஜெண்டுகளாக விரும்புவோர் எழுதவும்.

பொறுப்பாளர்,
"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

Edited and Published by R. NARAYANASWAMI.
Printed at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt., S. India.

# வாழ்க்கைத் துணை.

## ஸ்ரீமதி. P. V. சரோஜினி தேவி அவர்கள்.

நாம் சிறிது நேரம் ஓர் இடத்தில் உட்கார்ந்து இறைவனின் சிருஷ்டி அமைப்பைப் பற்றிச் சிந்திக்கப் புகுவோமானால் ஒவ்வொன்றும் நம் அறிவுக்கு எட்டா வண்ணம் அதி யற்புதமாகவே இருக்கும். ஆறறிவுள்ள மனித வர்க்கத்துள்ளும், மற்றும் சகல ஜீவராசிகளுள்ளும் ஆண், பெண் என இரு வகை ஏற்பட்டுள்ளது. ஆணும் பெண்ணும் ஒருவரை யொருவர் விரும்பும் தன்மையையும் அதன் மூலமாய் உலகம் விர்த்தி யடைந்து வருவதையும் காண்கிறோம். கடவுளின் படைப்பின் அதிசயம் தான் என்னே?

இனி இல்லறம் என்பதை எடுத்துக் கொள்வோம் இல்லறம் என்றால் என்ன? ஓர் ஆண் மகனும், ஓர் பெண் மகளும் ஒருவரை யொருவர் விரும்பி, விவாகம் செய்துகொண்டு ஒன்றாய் இருந்து குடும்பத்தை ஒழுங்காய் நடத்தி மக்களைப் பெற்று உலகில் தர்ம நெறியிலேயே வாழ்ந்து வருதலாம்

"இல்லற மல்லது நல்லற மன்று"

என்று ஔவைப் பிராட்டியார் கூறி யிருக்கிறார். இவ் வில்லறத்தில் புகுவதற்கு அடிப்படையாயுள்ள கலியாண விஷயத்தில் அதிக ஜாக்கிரதையாய் இருக்க வேண்டு மல்லவா? நம் பெரியோர்கள் விவாகம் என்பது சாதாரண காரியமல்ல, "ஆயிரங் காலத்துப் பயிர்" தீர யோசித்து இக் காரியத்தை நடத்த வேண்டும் என்று கூறி வருகிறார்கள். அம் மாதிரி பேசும் போது அழகாகப் பேசுகிறார்களே யொழிய வழக்கத்தில் சரியாய் அனுசரிப்பவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கிறது.

இவ் வாழ்க்கையை நடத்தப் போகும் தலைவனும், தலைவியும் அன்பு என்னும் கயிற்றினால் பிணைப்புண்டவர்களாய் இரு மனமின்றி ஒரு மனப் பட்டவர்களாய் இருந்தாலன்றோ அவர்கள் அவ் வில்வாழ்க்கையை ஒழுங்காய் நடத்த முடியும்?

"மருவிய காதன் மனையாளும் தானும்
இருவரும் பூண்டீர்ப்பி னல்லால்—ஒருவரால்
இல் வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று."

"இல்லறம் என்பதன் நல்லுயி ரேயாய்
நின்ற காதலின் நிலைமை நினையில்
இரும்பும் காந்தமும் பொருந்தும் தன்மைபோல்
இருவர் சிந்தையும் இயல்பாயுருகி, ஒன்றுந்தன்மை"

என்று ஸ்ரீமான். P. சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய "மனோன்மணீ"யத்தில் காதலின் தன்மையைப் பற்றி அழகாக எடுத்துக் கூறப்பட் டிருக்கிறது. இவ் வாக்கியங்களினால் இல்லறத் தலைவனுடைய மனமும், தலைவியினுடைய மனமும் எவ்வாறு பொருந்த வேண்டுமென்பது நன்கு விளங்குகின்றதல்லவா? முற்காலத்தில் நம் நாடு காதல் மணங்களால் சிறப்புற்றிருந்ததாகப் பண்டைத் தமிழ் நூல்களின் வாயிலாக அறிகிறோம்.

முற்காலத்தில் நடந்து வந்ததேபோல் காதல் மணங்கள் இக் காலத்தில் நடப்பது மிக்க அருமையாய் விட்டது. இப்போது முக்கால் பங்கு மணங்கள் பணத்திற்காகவே நடை பெறுகின்றது. அநேகமாய் ஓர் ஆடவன் ஓர் பெண்ணை மணம் புரிய விரும்பினால் அவளுடைய குணாதிசயங்களைப் பற்றியாவது, கல்வியைப் பற்றியாவது விசாரிக்கிறதே யில்லை. பெண்ணுக்கு எவ்வளவு நகை போடுவார்கள்? சீர் எவ்வளவு கிடைக்கும்? அவள் மூலமாக ஏதாவது சொத்து வருமா? என்பதையே முக்கியமாய் விசாரிக்கிறான். பணத்தின் மீதே கருத்தா யிருக்கும் அவன், மண முடிந்த பின்னர் மனைவியின் மீது அன்பா யிருப்பது வெகு அருமை யல்லவா?

"மடைத்தலையில் ஓடுமீன் ஓட உருமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு"

என்பதேபோல், மனைவியின் சொத்துத் தன் கைக்கு வருமளவும் மனைவியின் மீது காதலுள்ள புருஷன் போலவும், மாமி, மாமனிடத்தில் மிகுந்த பட்சமும், பணிவுமுள்ள மருமகன் போலவும் நடித்துப் பின்னர் அடியோடு மோசம் செய்யும் மாப்பிள்ளைகள் எத்தனை பேர்? மனைவியை அடித்தும், உதைத்தும் அவள் மீது கோபம் வந்த காலத்தில் மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பிட்டும், கிணற்றில் தள்ளியும், கத்தியால் குத்தியும் கொலை செய்யும் கணவர்கள் எத்தனை பேர்? தாசிகளையும் வேசிகளையும் வைத்துக் கொண்டு மனைவியைப் படாதபாடு படுத்தி அவள் வீட்டில் தனியே இருந்து அழும்படி விட்டுவிடும் புருஷர்கள் எத்தனை பேர்? தாசி வீடே கதியாய் இருக்கும் ஆண் மகன் ஒருவன், தான் சிறிதும் விரும்பாத தன் மனைவி ஓர் அன்னிய புருஷனோடு சகோதரப் பாவனையாகப் பேசிக்கொண் டிருக்கும் போது பார்த்தாலும் அவள் மீது பலமான சந்தேகம் கொண்டு அவளைப் படுத்தும் கொடுமைகள் கொஞ்சமா? அது போலவே கணவனுக்குத் துரோகம் செய்து அன்னிய புருஷனை நாடிச் செல்லும் துஷ்டைகள் எத்தனை பேர்? புருஷனை நஞ்சிட்டுக் கொல்லும் பாதகிகள் எத்தனை பேர்?

# ஆசிரியக் குறிப்புகள்.

## அறிக்கை

இந்தப் பத்திரிகைச் சற்று தாமதமாய், இரண்டு மாதங்களுக்கும் சேர்ந்து வருகிறது. கிராமத்தி விருப்பதால் பலவிதச் சங்கடங்களிருக்கின்றன. தயவு செய்து மன்னிக்க வேண்டுகிறோம். எழுதியிருந்த பிளாக்குகள் இனியும் எமது கைக்குக் கிடைக்க வில்லை. ஆகையால் இப் பத்திரிகையில் மகரிஷி, தயானந்தர் ஆகிய இருவரது படங்கள் வெளியிட முடியவில்லை யென்று வருந்துகிறோம்.

## 34-வது தமிழ் மாகாண மகா நாடு

மதுரை யம்பதியில் 5, 6, 7—6—1931ல் ஸ்ரீமான். S. சத்யமூர்த்தி அவர்கள் அக்ராசனாதிபத்தியத்தின் கீழ் தமிழ் மாகாண மகா நாடு வெகு விமரிசையுடன் நடந்தேறியது. காலத்திற்கேற்ற அநேக நல்ல தீர்மானங்கள் நிறைவேறி யிருக்கின்றன. அக்ராசனரின் வாக்குகள் உணர்ச்சி உண்டாக்கத்தக்கனவா யிருக்கின்றன. வரவேற்புத் தலைவருடைய வார்த்தைகளில் உண்மையும் உறுதியும் கமழ்கிறது. தமிழ் நாட்டு மகா நாட்டிலே இம் மதுரையில் கூடிய மகா நாடு மிகவும் முக்கியமானது. தேசியப் பெரும் போராட்டத்திற்குப் பிறகு இது நடை பெற்றதால், இந்த மகா நாட்டை இந்தியாவே கவனித்து நிற்கின்றது. தமிழர் வீரம் ஓங்குக; தமிழர் தீரம் வளர்க; தமிழர் வெற்றி பெறுக; தமிழர் வாழ்க வாழ்க!

## மாதர்களுக்குச் சொத்துரிமை

மாதர்களுக்கு ஆண்களைப் போன்று சொத்துரிமை இருந்தாலன்றி, பெண்கள் சமத்துவமாயும் சுதந்திரமாயும் வாழ முடியாது. இந்திய மாதர்களின் நிலை பரிதாபம்! தமிழப் பெண்களின் ஸ்திதியோ மகா பரிதாபம். மைசூர் சமஸ்தானம் மாதர்களுக்குச் சொத்துரிமை கொடுக்கத் தீர்மானித்திருக்கின்றது. மலையாள ஸ்திரீகளைப் பாருங்கள்; இலங்கைத் தமிழ் மாதர்களை நோக்குங்கள்; முகம்மதியப் பெண்களைக் கவனியுங்கள். இவர்களுக் கெல்லாம் சொத்துரிமை உண்டு. ஆண்கள் பெண்களை ஆளும் பரியந்தம், ஆண்கள் ஆளப்படுவார்கள், இந்தியப் பெண்களுக்குச் சொத்துரிமைகள் கிடைத்த வுடன் அவர்களுடைய அபிவிருத்தி அதி தீவிரமாக இருக்கும்.

## இராஜபாளையம் ராஜா

ஆந்திர நாட்டில் ராஜாக்கள் என்ற க்ஷத்திரிய வகுப்பார்கள் செல்வாக்கும் செல்வமும் படைத்தவர்கள். இவர்கள் தமிழ் நாட்டில் இராஜபாளையம் என்ற ஊரில் மட்டும் இருக்கிறார்கள். இவ்வூர் யுவர்கள் சென்ற தேசியப் போராட்டத்தில் நன்கு வேலை செய்திருக்கிறார்கள். இராஜபாளையம் கதர், தமிழ்த் தேசமெங்கும் பிரசித்தமாயிருக்கின்றது. இவ்வூருக்குத் திலகம் போல் விளங்கும் ஸ்ரீமான். P. S. குமாரசாமி ராஜா அவர்களை நாம் நன்கு அறிவோம். தேசாபிமானத்திலும் பொதுநலத் தொண்டிலும் இந்த இராஜபாளையம் ராஜா அவர்கள் அதிகமாக ஈடுபட்டவர். நமது "பாரதி"யின் நிலைமையை அறிந்து, "பாரதி"க்குப் போஷகராகச் சேர்ந்து, இப் பத்திரிகைக்கு ஒரு பெருந் தொகை கொடுக்க முன் வந்ததற்காக, அவருக்கு அநேக வந்தனங்கள் அளிக்கிறோம். இம் மாதிரியான பத்திரிகாபிமானிகள் ஊருக்கு ஒருவரேனும் இருப்பரேல், நமது நாட்டின் நிலை இப்படி இருக்காது. இராஜபாளையம் ராஜா வாழ்க! வாழ்க!

## "பாரதி"யின் அன்பர் கிருஷ்ணன்

"பாரதி"யில் அடிக்கடி உயர் வியாசங்களை எழுதிக் கொண்டு வரும் ஸ்ரீமான். K. G. கிருஷ்ணன் அவர்களின் பெயரை வாசகர்கள் நன்கு அறிந்திருக்கக் கூடும். இவர் சுய முயற்சியால்தான் இந் நன்னிலைக்கு வந்தார். இவர் இராமநாதபுரம் ஜில்லா, அபிராமம் கிராமத்தில் பிறந்தவர். ஐரோப்பா, இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா முதலியவை போன்ற சுயேச்சையான தேசங்களில் இவர் பிறந்திருந்தால், இவருடைய முன்னேற்றம் இன்று வேறுவிதமாயிருக்கும். இவர் இப்பொழுது ரங்கூன் சர்வ கலாசாலைக் கல்லூரியிலே உபந்நியாசகராக இருக்கிறார். இவர் பர்மாவிலிருப்பதால், தமிழ் நாடு இவருடைய சேவையை இழந்துகொண்டிருக்கிறது. தமிழ் நாட்டில் தமிழ் அபிவிருத்திக்காகத் தோன்றியிருக்கும் அண்ணாமலை சர்வ கலாசாலையார் இவரை வரவழைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுகிறோம்.

இவர் வாலிபர். தனது சொந்தக் கிராமத்தில் சென்ற மாதம் 4—5—'31வ யில் இவருக்கு விவாகம் நடந்தேறியது. தம்பதிகளை நேரில் கண்டுகளிக்கும் பொருட்டு நாம் அபிராமத்தைச் சேர்ந்த அகத்தாரிருப்பு என்ற கிராமத்திற்குப் போய் எமது அன்பைத் தெரிவித்துக் கொண்டோம். இச் சதிபதிகளுக்கு அரோக திடகாத்திரத்தையும், நீண்ட ஆயுளையும், சந்தோஷத்தையும், சாந்தியையும், வாழ்வில் வெற்றியையும் தந்தருளுமாறு எல்லாம் வல்ல கடவுளை முழு மனதுடன் பிரார்த்திக்கிறோம். இம் மணமானது மணமாகி மணக்க! மணக்க!!

வாலிபர் சங்கம்

வாலிப இயக்கம் இன்று உலகம் முற்றிலும் பரவி யுவர்களுக்கு அபார ஆற்றலையும், ஆவேசத்தையும் அளித்து அரிய பெரிய காரியங் களைச் செய்துகொண் டிருக்கிறது. இந்தியாவிலும் இந்த இயக்கம் நன்கு பரவி யிருக்கிறது. காங்கிரஸ் சபையை ஒவ்வொரு கிராமத்தி லும் ஏற்படுத்துவதில் எவ்வளவு வேலை செய்யப்படுகிறதோ அவ்வளவு சிரத்தை எடுத்து ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் வாலிப சங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும். காங்கிரஸ் நமது தேசத்திற்குச் சுதந்திரம் அளிக்கப் போகின்றது; வாலிபச் சங்கங்களோ கிராமங் களுக்கும் நகரங்களுக்கும் வேண்டிய தொண்டு செய்யப் போகின்றன. ஆகையால் எல்லாக் கிராமங்களிலும் பட்டினங்களிலும் யுவர் சபை களை நிறுவ வேண்டுகிறோம். வாலிப உலகம் வளர்வதாக.

தேசீயப் பள்ளிகள்

ஒத்துழையாமையின் வேகத்தால் எத்தனையோ தேசீயப் பள்ளிக் கூடங்கள் நம் நாடெங்கும் உண்டாயின. அவைகள் இப்பொழுது எங்கே? ஆதரிப்பாரற்று அப்படியே அவைகள் அழிந்தன. எங்கோ தப்பித் தவறி சில உயிருட னிருக்கின்றன. அவைகளையும் தேச மக்கள் காப்பதில்லை; கவனிப்பதில்லை. தேசீயப் பள்ளிக்கூடங்களை நம்பி ஆங்கிலப் பள்ளிகளை பகிஷ்கரித்து இப்பொழுது திண்டாடிக் கொண்டிருக்கும் மாணவர்களைப் பார்த்தால் பரிதாபம். தேசீயப் பள்ளிகளைத் தேசாபிமானிகளும் தலைவர்களுங் கூடக் கவனிக்காம லிருக் கும் பொழுது, தேச மக்கள் எப்படி ஆதரிப்பார்கள்? தேசீயக் கல் விக்காக என்ன திட்டங்களைத் தேசீயத் தலைவர்கள் இது வரையில் தயார் செய்திருக்கிறார்கள்? இரண்டு உதாரணங்கள் கூறுகின்றோம். வி. வி. எஸ். அய்யர் குரு குலம் எங்கே? சோழவந்தானில் ஒரு ஒரு தேசீயப் பள்ளியை ஸ்ரீமான்கள் முனகால பட்டாபிராமய்யர் அவர்கள், M. சுப்ரமண்ய முதலியாரவர்கள், வெங்கிடசாமி அய்ய ரவர்கள் முதலியோர் சேர்ந்து ஒரு தேசீயப் பள்ளியை ரயில் வண்டிகளில் உண்டியல் மூலமாய்ப் பணம் சேகரித்து எவ்வளவோ கஷ்டத்துடன் நடத்திக்கொண் டிருக்கிறார்கள். அவ் வூரார் இதை என்ன என்று கவனிப்பதில்லை. இதன் ஆசிரியர் திரு. சின்னச்சாமி பிள்ளை யவர்களுக்குச் சோழவந்தான் வாசிகள் போதிய உற்சாகம் கொடுக்கவில்லை என்று அறிய விசனப்படுகின்றோம்.

மதுரையில் பல தேசாபிமானிகளால் துவக்கப்பட்ட தேசீயப் பள்ளியானது இப்பொழுது திரு. சிதம்பர பாரதியாரது ஆதீனத்தின் கீழ் நடைபெறுகிறது. ஆசிரியர்களுக்கும் அதிபருக்கும் மதுரை வாசி கள் உதவி கொடுக்கிறதில்லை. ரெயில்வே உண்டியல் மூலமாகவே வசூ லித்த பணத்தைக் கொண்டு மதுரை தேசீயப் பள்ளி நடத்தப்படு கிறார்கள்.

இம் மாதிரியான பள்ளிகளுக்குத் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி அதிகமாக உதவி செய்ய வேண்டுகிறோம். தேசியக் கல்வித் திட்டத்தைச் சீக்கிரத்தில் காங்கிரஸ் கமிட்டி நல்ல நல்ல உயர்தர ஆசிரியர்களின் உதவியைக் கொண்டு வெளியிடுமாக. இந்தியாவில் ஹரித்துவார குருகுலத்திற்கும் சாந்தி நிகேதன குருகுலத்திற்கும் நாம் பெரிதும் வணக்கம் செலுத்துகிறோம். தலைவர்களும் தேசாபிமானிகளும் தங்களுடைய குழந்தைகளைத் தேசியப் பாடசாலைகளுக்கு அனுப்பாமலிருக்கிறார்கள், இப்படிச் செய்து கொண்டு இவர்களும் "தேசியக் கல்வி, தேசியக் கல்வி" என்று பிரசங்கங்கள் செய்கிறார்கள்.

### "பாரதி" மானேஜரின் சுற்றுப் பிரயாணம்

பொதுஜன சேவையில் என்று பிரவேசித்தோமோ, அன்று முதல் நமது பணியில் பங்கு கொண்டு தொண்டராயும், துணைவராயும், காரிய ஸ்தலங்களுக்கு மானேஜராயும் பொறுப்பேற்று உழைத்து வருபவர் நமது உடன் பிறந்த சகோதரர் ரா. சுப்ரமண்யம் என்பவராகும். இவர் ஆண்டில் இளைஞராக விருந்தும் தேசப் பணியில் ஆர்வமுடையவர்; சீர்திருத்தத்தில் ஊக்கங் கொண்டவர்; பத்திரிகாபி விருத்தியில் காதலுடையவர்; பத்திரிகைத் தொழிலில் சென்ற சில வருடங்களாக நமக்கு ஆயிரக் கணக்கான ரூபா நஷ்டம் நேரிட்டதையும் பொருட்படுத்தாது, ஊக்க மிகக் கொடுப்பவர்; நமது ஆனந்தா பிரஸின் முழுப் பொறுப்பையும் தாங்கி நன்குப் பணியாற்றி வருபவராகும். இவையன்றி "பாரதி"யின் தொண்டைப் பிரதான சேவையெனக் கொண்டு உழைத்து வருபவர். தேசியத்தால் நாமும் சிறை சென்ற போது, தேசத்தாருக்குப் "பாரதி" பற்றி விடுத்த நமது நம்பிக்கையான அறிவிப்பைக் கடைப்பிடித்து, மறுபடியும் "பாரதி" என்றும் போல் நடைபெற முயற்சி செய்து, அரசாங்கம் அனாவஸ்யமாக வீணான சாக்குப் போக்குகளைக் காட்டி காலகரணஞ் செய்வதைக் கண்டு, தளர்ச்சியுறாது, நாட்டில் "பாரதி"யினிடங் கொண்ட அன்புக்கு மாசின்றி, நல் லபிப்பிராயம் நாளும் வளர்ந்தோங்க தொண்டாற்ற முனைந்து நமதுவருகை பரியந்தம் "நவீன பாரதி" என்ற புதிய நாமஞ் சூட்டி, நடத்தி வந்தவர். இது சமயம் இவர் திடீரென நோயினால் கொடுமையாகப் பீடிக்கப்பட்டுப், படுக்கையி லிருந்து கொண்டே செம்மையாயும் விமரிசையாயும் வாசக நேயர்களின் மனதை மகிழ்வித்தது நன்கு தெரிந்ததே. இதிலிருந்து இவரது துணை நமக்கு மிகவும் உதவியாகவும் பத்திரிகைக்கு மிக மிக அவஸ்யமாகவு மிருந்து வருகிற தென்பதைத் தெரிவித்துக் கொள்ள வேண்டுமோ?

இவ்வாரெல்லாம் "பாரதி"யின் புனிதமான பணியைச் சிறமேற் கொண்டு உழைத்து வரும் சோதரரை, இதுபோது தமிழ் நாட்டிலெங்கும் "பாரதி"யின் தொண்டு பரிணமித்துச் செழிப்புற வேண்டி, ஆக்க மிகத் தேடி வருமாறு அனுப்பி யிருக்கின்றோம். இவரது

தமிழ் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின் பயனாக, "பாரதி" புதிய சக்தியையும் நிலையையும் பெற்று, முன்னிலும் தீரமாயும் வீரமாயும் விமரிசையாயும் வெளிவரச் செய்ய ஒவ்வொருவரும் ஊக்கமுடன் முயன்று உதவி செய்வது கடமையாகும். அன்பர்கள் ஆங்காங்கு அவர் தமக்கு வசதிகளீந்து வேணமட்டும் உதவி பல புரிந்து புதிய புதிய சந்தாநேயர்களை அதிக மதிகமாகச் சேர்த்துக் கொடுத்து நமது விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டுகின்றோம்.

சோதரர் ரா. சுப்ரமண்யம் அவர்களுக்குச் செய்யும் யாவும் நமக்கு உதவியதாகவே கருத வேண்டுகின்றோம். பின் அஃது நம்மிலிருந்து "பாரதி"யின் வடிவில் கலந்து அன்பர்களுக்கே அதிகம் அதிகமாக அமுதத்தையும் ஆனந்தத்தையும் கொடுக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

## சித்தையன்கோட்டையில் மக்கள் விடுதலைசேவை சங்கம்

மூட பழக்க வழக்கங்களை அகற்றும் பொருட்டு மதுரை ஜில்லா, சித்தையன்கோட்டையில் ஜூன்மீ 22உயில் மக்கள் விடுதலை சேவைச் சங்கத்தின் திறப்பு விழா எமது அக்ராசனாதிபத்தியத்தின் கீழ் நடைபெற்றது. இச் சங்கத்தார்கள் சமூகச் சீர்திருத்தங்களைச் செய்வதைப் போன்று தேச விடுதலை வேலையிலும் மகா தீவிரமாய் வேலை செய்ய வேண்டுகிறோம். தேசீயப் பெருஞ் சக்தியை அறிந்து இதன் அங்கத்தினர்கள் அதன்படி நடக்க வேண்டுகிறோம்.

## நாடக நடிகர் சங்கம், மதுரை

இப்பொழுது தமிழர் நாடக மேடை அநேக வழிகளில் சீர்பட வேண்டி யிருக்கிறது. நினைத்தபடி யெல்லாம் நாடகங்கள் நடித்து நாடகங்களின் பயனைக் கெடுத்து விடுகிறார்கள். பாமர்களுக்குப் புத்துணர்வும் புதிய படிப்பும் அளிப்பதற்கு நாடகங்கள் சிறந்த முறைகளா யிருக்கின்றன. கிரேக்கர்களும் ரோமர்களும் நாடகங்களை நல்ல வழியில் பயன்படுத்திக் கொண்டார்கள். காளிதாசரது நாடகங்கள் எவ்வளவு சுவை பொருந்தியவைகளா யிருக்கின்றன. இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியரது நாடகங்கள் எவ்வளவு சீர்திருத்தங்களை உண்டாக்கி யிருக்கின்றன. இன்று இங்கிலீஷ் உலகத்தில் பெர்னார்ட்ஷா நாடக உலகில் எவ்வளவோ மதிக்கப்படுகிறார். அவரது நாடகங்களால் எவ்வளவோ சீர்திருத்தங்கள் நடைபெற்று வருகின்றன.

தமிழ் நாடக நடிகர் சீர் கெட்ட போக்குகளையும், தாழ்மையான நிலைமையையும் அவர்களுடைய சமூக வாழ்வையும் நன்கு கவனித்து, தமிழ் நாட்டு நாடக நடிகர்களையும் நாடகத் தொழிலையும் நானாவழியில் அபிவிருத்தி செய்யக் கருதி, ஸ்ரீமான்கள் பாஸ்கரதாஸ், சிதம்பரநாதன், சாரங்கபாணி, தாமோதரன் முதலியவர்கள் ஒன்று கூடி மதுரையில் நாடக நடிகர் சங்கம் என்ற பெயருடன் ஒரு சபையை

31-3-67

நிறுவி யிருக்கிறார்கள். புதிய முறையில் புதிய சுவையில் புதிய விஷயங்களை நாடகங்களாக நடித்துக் காட்ட வேண்டுகிறோம். உப்புக் காய்ச்சுதல், வன இலாகாவை மீறுதல், மதுபானக் கடை, அயல் நாட்டுத் துணிக் கடை மறியல், விபசாரிகளின் நடத்தைகள், உயர் தரக் கல்வி கற்ற மாணவர்களின் வேலை யில்லாத் திண்டாட்டங்கள், புருஷர்கள் மனைவிகளுக்குச் செய்யும் கொடுமைகள், சமூகக் கொடுமைகள், தீண்டாமையின் கொடூரங்கள், பால்ய விவாகக் கொடுமைகள், விதவைகளின் பரிதாப நிலை, தேசீயப் போரினைப் பற்றிய விசாரணைகள், மகாத்மாவின் ஜீவிய சரித்திரம் இவை போன்ற அநேகம் துறை பற்றிய விஷயங்களை நாடக ரூபமாக நடத்திக் காட்டிப் பொது ஜனங்களைப் பண்படுத்துவார்களாக; நாடக நடிகர்களும் உயர்வார்களாக.

## தீண்டாமைக்கு என்ன பிரச்சாரம்?

மதுபானம், அயல் நாட்டுத் துணி முதலியவைகளைப் பகிஷ்கரிக்கத் தீவிரமாய்ப் பிரச்சாரம் நாட்டில் நடந்து கொண்டு வருகிறது. தீண்டாமை விலக்கு என்று அடிக்கடி தீர்மானங்களாக செய்து காகிதங்களில் எழுதி வைத்திருப்பதைத் தவிர்த்து தீண்டாமையைப் போக்குவதற்காக என்ன தீவிரமான காரியங்கள் செய்யப்படுகின்றன? தேசீய விடுதலைக்குப் பிறகு சமூக விடுதலையைப் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைப்பது சரியல்ல. தேசீய விடுதலைக்காக உழைக்கும் பொழுது சமூக சீர்திருத்தங்களுக்காகவும் வேலை செய்ய முற்பட வேண்டும். அநுபவ பூர்வமான செய்கைகளா லன்றி தீண்டாமையைப் பிரசங்களினுல்—எழுத்துக்களினுல் மட்டும் ஒழித்துவிட முடியாது.

## ஆசிரியர் ஸ்ரீநிவாசய்யங்கார் பிரிவு

ஸ்ரீமான் பி. டி. ஸ்ரீநிவாசய்யங்கார் உயர்தர ஆசிரியரென்பதைத் தமிழகம் நன்கறியும். ஆங்கிலத்தில் நல்லறிவும், இந்திய சரித்திரத்தில் ஆழ்ந்த ஆராய்ச்சியும், தமிழில் தக்க பயிற்சியும், போதனு முறையில் நல்ல திறனும் அவருக்குண்டு. பல கல்லூரிகளில் ஆசிரியராக யிருந்தவர். சென்னைச் சர்வ கலாசாலையில் சரித்திர உபந்நியாசகராக இருந்த பிறகு, சிதம்பரம் அண்ணமலை சர்வ கலாசாலையில் சரித்திரப் பேராசிரியராக அமர்ந்து நன்கு தொழில் நடத்திக் கொண்டிருக்கும் பொழுது, சமீபத்தில் அவர் காலஞ் சென்று விட்டாரென்ற செய்தியைக் கேட்டு அளவற்ற துக்கமடைகிறோம். வட நாட்டில் சரித்திர ஆராய்ச்சிக்கு ஆசிரியர் யாதவநாத சர்க்கார் இருக்கிறார். தமிழ் நாட்டில் யாதவநாதராய் விளங்கிய அய்யங்கா ரவர்களைத் தமிழர்கள் இழந்தது பெரும் நஷ்டமாகும். அவரது ஆராய்ச்சிகளும், நூற்களும், பிரசங்கங்களும், போதனைகளும் தென்னுட்டாருக்கு மிகவும் பயன்பட்டது. இவர் திருச்சி டாக்டர். ராஜன் அவர்களுக்குத் தாய் மாமனர். இவருடைய குடும்பத்தாருக்கு எமது அனுதாபம். இவருடைய ஆத்மா சாந்தி அடைவதாக.

---

108538

# பாரதி

ஒரு மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர். (பாரதி.)

ஆசிரியர் : ரா. நாராயணஸ்வாமி.

OFFICE OF THE REGISTRAR No. 22 OCT 1929 MADRAS


| மாலை 1 | உத்தமபாளையம் 1929-ஆம் செப்டெம்பர்மீ | மணி 9 |
| --- | --- | --- |


## இந்தியாவின் நிலை.

600 008 198516

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர், "பாரதி."



நமது இந்தியா பண்டைத் தேசம். இந்தியாவை ஒரு கண்டம் என்றே சொல்லல் வேண்டும். ஏனெனில் இது எல்லா வகைகளிலும் அவ்வளவு சிறப்பு வாய்ந்தது.

தாயகத்தின் புராதனப் பெருமைகளை அடிக்கடி "பாரதி"யில் எழுதி எழுதி அலுத்துவிட்டோமாகையால் இனி இதில் அதிகமாக ஒன்றும் எழுதப்போவதில்லை. நமது தாய் நாடு பல விஷயங்களில் உச்சம் பெற்

திருப்பினும், உள் நாட்டுக் குழப்பங்களுக்கும், மதப்பிரிவு-துவேஷங்களுக்கும், அன்னியர் படை யெடுப்புகளுக்கும் மத்தியகால இந்தியா இலக்காயிற்று. அன்னிய நாட்டினர் இங்கு வருகைக்கும் இவைகளே காரணங்களாயின.

புராதன காலம் போகட்டும்; மத்திய காலம் மறையட்டும்; இப்பொழுது நமது தேசத்தின் நிலையைச் சற்றுக் கவனிப்போம். மகமதியர்கள் இந்தியாவின்மீது படை யெடுத்து வந்து இந்தியாவின் சில பாகங்களை ஜெயித்தார்களென்றாலும், அவர்கள் இந் நாட்டிலேயே தங்கிவிட்டதால் இந் நாட்டின் பொருள் இங்கேயே தங்கலாயிற்று. அவர்களும் தங்கள் ஜெனன தேசத்தை மறந்து இந்தியாவை அபிமானித்து இந்தியாவையே தாயகமாகக் கொண்டு இன்று வரையில் வாழ்ந்து வருகிறார்கள். ஐரோப்பிய வியாபாரிகள் இங்கு வந்து வேரூன்றிய காலம் முதல் இந் நிமிஷம் வரை நாட்டின் செல்வத்தை யெல்லாம் வடிகட்டிக்கொண்டு போகிறார்கள். வியாபாரம் செய்து சம்பாதித்துக் கொண்டுபோக வந்த ஐரோப்பியர்களில் ஆங்கிலேய வியாபாரிகள், தேசமிருந்த பலவீன நிலைமையைக் கண்டு, உள் நாட்டுச் சிற்றரசர்களோடு சேர்ந்து யுத்தம் செய்து, அப்படியும் இப்படியுமாய்த் திரிந்து இந்தியாவைப் பிடித்துக் கடைசியில் அடிமைப்படுத்தி விட்டார்கள்.

பிறகு நாட்டில் அநேக பஞ்சங்கள் உண்டாகி, எத்தனையோ ஜனங்கள் மாண்டார்கள். நாட்டை வறுமை வாட்ட ஆரம்பித்தது. அது இன்னும் நின்றபாடில்லை. நாட்டின் கலைகளும் கைத்தொழில்களும் அழிந்தன. ஜனங்களுள் கல்வி பரவவில்லை. இந்திய மக்கள் சுதந்திர மின்றித் திண்டாடினார்கள். இதைக்கண்ட தேசாபிமானிகளில் சிலர் காங்கிரஸ் சபை ஏற்படுத்தி, நாட்டின் விடுதலைக்காக வேலை செய்தார்கள். இது மெல்லென அநேக நன்மைகளை உண்டாக்கிக்கொண்டே வந்தது. காங்கிரஸில் ஒற்றுமை யிருந்தபடியால் அது பலத்துடன் வேலை செய்தது. இச்சபை, இந்திய மக்களுக்குச் சுயராஜ்ய தாகத்தை உண்டாக்கிற்று. ஒத்துழையாமைக் காலத்தில் சுமார் 25,000 பேர்கள் சிறைக்குச் சென்றார்கள். அப்பொ

மூது காங்கிரஸ் எவ்வளவு ஒற்றுமை! காங்கிரஸுக்கு எவ்வளவு மரியாதை! ஒத்துழையாமைக் காலத்தில் காங்கிரஸ் இந்தியாவின் மா பெருஞ் சபையாக விளங்கிற்று.

சமீப காலத்திலிருந்து வேற்றுமை அதிலும் நுழைந்துவிட்டது. இந்தியாவின் துக்கங்களும் துன்பங்களும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகின்றன. சுயராஜ்யக் கட்சி, கிலாபத் சபை, மித வாதக் கட்சி, ஜஸ்டிஸ், சுய மரியாதை, இந்து மகாசபை ஆகிய பல கட்சிகள் பிரிந்து வேலை செய்ய ஆரம்பித்தன. தேசத்தில் காட்டுத்திப் போன்று பரவிக் கொண்டிருந்த தேசியம் தற்போது நாட்டில் வேற்றுமையினால் பலங் குன்றிவிட்டது. ஹிந்து முஸ்லீம் பிணக்குகளும் மதச் சண்டைகளும் பல் வேறு கட்சிகளும் பல அபிப்பிராய பேதங்களும் அடிக்கடி தோன்றிக்கொண்டேயிருக்கின்றன. நேரு யாதாஸ்தின் விவாதம் ஒருபக்கம்; பூரண சுயேச்சைக் கிளர்ச்சி இன்னொரு பக்கம். இதுவன்றி பிறப்பால் உயர்வு தாழ்வை அநியாயமாய் இடைக்காலத்தில் ஏற்படுத்தியிருப்பதை அநேகர் போற்றி அதை இன்றும் வளர்க்கிறார்கள். உயர்ந்த ஜாதியார் என்போர் ஜாதி இறுமாப்புக்கொண்டு தாழ்ந்த ஜாதியார்களுக்குச் செய்துவரும் இன்னல்களைச் சொல்லி முடியாது. இதற்குத் தாழ்ந்த வகுப்பார்கள் உயர்ந்த ஜாதியார்களின் மீது கண்டனங்கள் செய்துவருகிறார்கள். பழைய காலத்தில் அல்ல, இடையில் பாழும் ஜாதிப் பிரிவினை எப்படியோ ஏற்பட்டுவிட்டது. அதைப் பற்றி இப்பொழுது பேச்சில்லை. காலத்துக்குத் தக்கபடி அனாவசியமான கெட்ட பழக்கங்களை மாற்ற வேண்டும்.

நமது நாட்டிலுள்ள செல்வமெல்லாம் அயல்நாட்டிற்குப் போய் விட்டபடியால், போகிறபடியால், நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் உண்டாகி ஜனங்களை வதைக்கின்றது. படித்தவர்களிடையிலும் இத்திண்டாட்டம் ஆரம்பித்திருக்கிறது. பொதுவாகச் சொல்லுமிடத்து, பசிநோய் நமது நாட்டில் வெகு வேகமாய்ப் பரவிக்கொண்டு வருகிறது. கலாசாலைகளில் உயர்தர அடிமைக் கல்வி மாணவர்களுக்குப் புகட்டப் பெறுவதால், மாணவர்களுக்குச்

சுதந்திரமும், தன்னம்பிக்கையும், முயற்சியில் வல்லமையும் உண்டாகவில்லை. நாளுக்குநாள் ஜாதிகள் பெருத்துக்கொண்டு போகின்றன. "தாங்கள்தான் உயர்ந்த ஜாதி" என்று கர்வம் கொள்ளுகிறார்கள். சரி இப்படி ஒவ்வொருவரும் சொன்னால், யார் பெரிய குலம்? வைதீகக் கொடுமைகள் விருத்தியாகித் தேசாபிவிருத்தியைத் தடுக்கின்றன. பால்ய விவாகங்கள் பெருகி, விதவைகள் அதிகரித்து வருகின்றார்கள். பெண்ணுக்கேற்ற கணவன் கிடைக்காமலும் கணவனுக்கேற்ற பெண் கிடைக்காமலும் விவாகச் சிக்கல்கள் அதிகரித்துக்கொண்டு போவதால், சமீபத்தில் கல்யாணத்தில் சங்கடங்கள் உண்டாகப் போகின்றன. சுகாதாரம் கெட்டு நோய்கள் விருத்தியாகிக்கொண் டிருக்கின்றன.

மாதர்களுக்குச் சாதாரண சுதந்திரங்கூட மறுக்கப்படுகிறது. ஆகையால் பெண்கல்வி முதலியவைகள் தீவிரமாய்ப் பரவமுடியவில்லை. பொதுவாகக் கவனிக்குமிடத்துப் பெண்களது முன்னேற்றத்திற்கு வழி அடைக்கப்பட்டிருக்கிறது.

நாட்டில் கூட்டு வியாபாரக் கம்பெனிகள் போதியபடி விருத்தியாகவில்லை. இந்திய வியாபாரம் முன்னேற்றமடைய முடியவில்லை. சர்க்காரும் பிரபுக்களும் முன்வந்து உற்சாகிக்காததால், கைத்தொழிற்சாலைகள் கணக்கற்றுத் திறக்கப்படவில்லை. விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் வேண்டும் தருணங்களில் பணம் கொடுத்து உதவ, நாட்டுச் செல்வக் குறைவால் அநேகம் பாங்குகள் நம்மால் ஏற்படுத்த முடியவில்லை. இந்தியாவில் அடிமைத்தனம் பெருகிக்கொண்டு வருவதால், கூட்டுறவுக் குறைவு, அவநம்பிக்கை தைரியமின்மை, பிறர்மீது குற்றங்காணல், பிறர்மீது குற்றஞ்சாட்டல் முதலிய தீயகுணங்கள் பெருத்துக்கொண்டே வருகின்றன. இந்தியர் அனைவரும் சகோதரர் என்ற நல்லுணர்ச்சி குன்றிக்கொண்டு வருகிறது. வயது சென்றவர்களிடம் ராஜதந்திர சமயோஜித புத்தி மிகுந்து, சொந்தக் காரியங்களைச் சாதித்துக்கொள்வதில் கெட்டிக்காரர்களா யிருக்கிறார்கள்.

மதுவிலக்குப் பிரச்சாரத்தைப் பற்றிச் சிலர் யோசித்துக்கொண்டிருந்தாலும், பேசிக்கொண்டிருந்தாலும், சர்க்கார் தண்ணீர்ப்பந்தல் சரியாய் நடக்கிறது. தீண்டாதவர்களை வைதிகப் பாம்புகள் தீண்டுகிறபடியால், அவர்களுக்குப் பழையபடியேதான். சில உண்மைக் காங்கிரஸ் வாதிகளும் ஆசார சீர்திருத்தக்காரர்களும் தீண்டாமையை ஒழிப்பதற்கு வேண்டிய வேலைகள் செய்தார்கள். அதுவும் ஆற்றில் கரைத்த புளியாகிவிட்டது.

வேறு நாடுகளில் வசிக்கும் நமது இந்தியர் கேவலமாய் நடத்தப்படுகிறார்கள் நமக்குச் சமீபத்திலிருக்கும் இலங்கையில் வாழ் இந்திய மக்களுக்குத் துன்பங்கள் உண்டாகப் போகின்றன. பர்மாவில் வாழும் இந்தியர்களுக்கும் அப்படியே. இவ்விரு நாட்டாரும் இந்தியர்களை அவர்கள் நாட்டிலிருந்து துரத்துவதற்கு இப்பொழுது ஆரம்பித்து விட்டார்கள். தென்னாப்பிரிக்கா, பீஜி முதலிய விடங்களில் வசிக்கும் இந்தியர்களுக் குண்டாயிருக்கும் கஷ்டங்களை விவரித்தால் உண்மை இந்தியனுக்குக் கண்ணீர் வடியும்.

ஒத்துழையாமைக் காலத்திற்குப் பிறகு பல புதிய தலைவர்கள், பெரியவர்கள், போலித் தேசாபிமானிகள், பட்டே பட்டே பேர்வழிகள் தோன்றி யிருக்கிறார்கள். மூலை முடுக்குகளி லிருந்த எத்தனை சாதாரண வக்கீல்கள், சாதாரண டாக்டர்கள், பெயர் தெரியாத மனிதர்கள் இப்பொழுது பிரபலஸ்தர்களாகிப் பணம் ஏராளமாய்ச் சம்பாதிக்கிறார்கள்? இவர்கள் சம்பாதிக்கின்ற தன்றியும், பொது ஜனங்களை என் ஏமாற்றுகிறார்கள்? எத்தனையோ உண்மை யுள்ளவர்கள் தேசாபிமான ஆவேசத்தால் தாக்கப்பட்டு நாட்டு வேலையில் வெறிகொண்டு வீறா டெழுந்து கிராமங் கிராமங்களாய் அலைந்து வேலை செய்ததாலல்லவோ தலைவர்கள் உண்டாயிருக்கிறார்கள். உண்மைத்தலைவர்கள் விஷயம் வேறு. அவர்களைப்பற்றி இங்கு ஒன்றும் சொல்வதற்கில்லை. ஏழைகளை—கிராமத்தார்களை—ஒடுக்கப்பட்டவர்களைப் பற்றிய பேச்சுக்கள், பெரும் பேச்சுக்கள்! தேசியப் பிரச்சாரம் செய்து ஜனங்களுக்குப் போதித்துக்கொண்டே தன் மக்களுக்குச் சர்க்கார் உத்தியோகம் வாங்கிக் கொடுக்க வேலை செய்கிற

அநேகம் பேர்கள் இருக்கிறார்கள். தான்தோன்றிகளான, பல சுயநல த்தலைவர்கள் தங்களுக்குப் பொது விஷயங்களில் ஏதேனும் நன்மை கிடைப்பதா யிருந்தால் மட்டும், ஈடுபட்டு வேலை செய்வார்கள். தேசாபிமானம் என்ற போர்வையைப் போர்த்திக்கொண்டு இப் போலிகள் தப்பித்துக் கொள்கிறார்கள். தலைவர்களுக்குள் எவ் வளவு துவேஷம்! வீண் பிடிவாதம்! "மகன் செத்தாலும் சரியே; மருகமள் தாலி அறுக்கவேண்டும்" என்பது நமது அநேக தலைவர் களின் வீண் பிடிவாதத்திற்கு ஏற்ற பழமொழியா யிருக்கிறது. "கோட்டைக்குள் குத்தும் வெட்டும் என்றால் வெளியே இருக்கும் எதிரிகளை வெல்வதெப்படி?" அருத்தமற்ற, உபயோகமற்ற, அடிமையாகச் செய்கிற ஜாதிகள் எங் நாட்டில் நாட்டைக் கெடுத் துக்கொண்டு இப்படி இருக்கின்றன? அரசியல் கட்சிகள், பொது வான தேசாபி விருத்தியைத் தடுத்து இவ்வளவு வேற்றுமையுடன் எத்தேசத்தில் இப்படி வேலை செய்கின்றன? வேற்றுமை விருட் சம் எப்படியோ நம் நாட்டில் முளைத்துக் கன்றாகி மரமாகிப் பூத் துக் காய்த்துக் கனி கொடுக்க, அதை இந்தியர் உண்டு வேற்றுமை யில் மயங்கிக் கிடக்கின்றார்கள். வேற்றுமைக் கனியைத் தின்று ஆனந்திக்கும் பரியந்தம் சுயராஜ்யமடைய இந்தியர்கள் செய்யும் வேலைகள் பயன்படாது முடியும்.

## வேண்டுகோள்

தெய்வீகத் தன்மையான, இன்ப மயமான சுயராஜ்யம் நமக்கு வேண்டும். சுய ராஜ்யம் இந்தியாவிற்குக் கிடைத்துவிட்டால், இந்தியாவின் துன்பங்கள் அனைத்தும் சூரியனைக் கண்ட பனிபோல் ஓடிவிடும். காலதேச வர்த்தமானத்திற் கொவ்வாக் கேடு கெட்ட பழ க்க வழக்கங்களை ஒழிப்பதே—தேசாபிவிருத்தித் தடைகளை நாசம் செய்வதே தேச முன்னேற்றம். காலத்துக்குத் தக்கபடி நடக்க வேண்டும். அப்படிச் செய்வதுதான் நியாயம். ஒவ்வொரு தேச சரித்திரத்திலும் இவைகளைப் பாக்கக் காணலாம். தேசிய ஒற்று மைக்காக இந்தியர் அனைவரும் சகோதரர் என்று எண்ணிப் பரஸ் பர அன்புடனிருக்க வேலை செய்யுங்கள். பற்பல உபயோகமற்ற

# ஸ்வாமி விவேகாநந்தரது கடிதம்.

அமெரிக்கா,
***19—7—1894.***

எனது தைரியமுள்ள பையன்காள்!

ஏற்பாட்டை முன்னுக்குக் கொண்டுவாருங்கள்! அன்பு, உண்மை, பொறுமை இவற்றைத் தவிர வேறொன்றும் அவசியமில்லை. வளர்ச்சி அதாவது, அன்பு இதைத்தவிர ஜீவிதம் என்றால் வேறு என்ன? ஆதலால் அன்பே ஜீவன், அதுவே ஜீவிய காலநியதி; ஸ்வய நன்மையெல்லாம் மரணமே. இது எங்கும் எப்பொழுதும் உண்மை. நன்மை செய்தலே ஜீவிதம்; பிறர்க்கு நன்மை செய்யா கட்சிகளை விட்டொழியுங்கள். ஜாதி அகம்பாவத்தையும் பிறப்பால் உயர்வு தாழ்வு கருதும் மமதையையும் விட்டொழியுங்கள். நம்மில் வேறு வேறு கட்சிகள் உண்டாகாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். மேலும் மேலும் கட்சிகள் உண்டாகாதபடி நடந்து கொள்ளுங்கள். வேண்டாப் பழக்க வழக்கங்களை நிர்மூலப்படுத்துங்கள். இப்பொழுது இந்தியா அடிமைப்பட்டிருக்கிறது. ஆகையால் சுய ராஜ்யத்திற்குத் தடையாயிருக்கிற அனைத்தையும் நாசப்படுத்துங்கள். தேச விடுதலை அடைந்து, சமூக விடுதலையடைந்து, பொருளாதார விடுதலை அடைந்து இந்தியா எவ்வழிகளிலும் மேன்மை பெறட்டும். சுயராஜ்யத்தைச் சீக்கிரத்தில் அடைந்து சுக வாழ்வைப் பெறுங்கள்.

இந்தியா சுதந்திரத்துடன் வாழ்க.

வந்தேமாதரம்.

மல் இருப்பதே மரண மெனப்படும். நீங்கள் பார்க்கின்ற மானுட மிருகங்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் மரித்தவர்களே, பிரேதங்களே. ஏனென்றால், எனது புத்திரர்களே! அன்பு செலுத்துகிறவனைத் தவிர, வேறு எவனும் ஜீவிக்கிறதில்லை. உணருங்கள்! எனது குழந்தைகளே! உணருங்கள்! எளியவர்கள், அறிவீனர்கள், தாழ்த்தப்பட் டிருப்போர்கள் இவர்களுக்காக இரங்குங்கள்! 'ஹிருதயம் நின்றுபோய் மூளை மயங்கி உங்களுக்குப் பைத்தியம் பிடித்து விடும்' என்று நீங்கள் உணரும் மட்டும் இரங்குங்கள்! பின்னர் சர்வேஸ்வரனுடைய சரணாரவிந்தங்களில் ஆத்மாவை ஐக்கியப்படுத்துங்கள்! அப்பொழுது வல்லமை, உதவி, அடக்கவொண்ணாத சக்தி இவையெல்லாம் உண்டாகும். யாது நேரிடினும் பின் வாங்காதிருத்தலே சென்ற பத்து வருஷங்களாக எனது கொள்கை. 'யாது நேரிடினும் பின்வாங்காதே' என்று இன்னும் நான் சொல்லுகிறேன். எங்கும் இருண்டிருக்கும்பொழுது 'யாது நேரிடினும் பின் வாங்காதே' என்று நான் சொல்லுவது வழக்கம் பிரகாசம் உண்டாகின்றபொழுதும் 'யாது நேரிடினும் பின் வாங்காதே' என்று நான் இன்னும் சொல்லுகிறேன். எனது குழந்தைகளே! பயப்படாதிர்கள்!...பொறுங்கள்! பணம் பெரிதல்ல; கீர்த்தி பெரிதல்ல; கல்வியும் பெரிதல்ல; அன்பே பெரிது. கஷ்ட நிஷ்டூரங்களினிடையே பின்வாங்காது பெரு முயற்சி செய்து நிற்கின்ற குணமே பெரிது.

இப்பொழுது நம்முன் இருக்கிற கேள்வி இது. ஸ்வதந்திரம் இன்றி வளர்ச்சியே யில்லை. நமது முன்னோர்கள் மதக்கொள்கைகளை ஸ்வதந்திரப்படுத்தினார்கள்; நாம் ஒரு அற்புதமான மதத்தையுடையவர்களா யிருக்கிறோம். ஆனால், அவர்கள் ஜனசமுகத்தின் கால்களில் பெரிய விலங்கை யிட்டார்கள். நமது ஜனசமுகம், சுருக்கத்தில் பயங்கரமாயும் ஆபாசமாயும் இருக்கின்றது. மேல் நாடுகளில் எப்பொழுதும் ஜனசமுகத்திற்கு ஸ்வதந்திரம் உண்டு; அவர்களைப் பாருங்கள்!

வளர்ச்சிக்கு வேண்டியது ஸ்வதந்திரம். மனிதனுக்கு நினைப்பதற்கும் பேசுவதற்கும் ஸ்வதந்திரம் வேண்டியதுபோலவே அவன் பிறரை இம்சிக்காதவரையில் அவனுக்கு ஆகாரம் உடை விவாகம் முதலிய எல்லா விஷயங்களிலும் ஸ்வதந்திரம் வேண்டும்.

'ஜடசம்பந்தமான நாகரீகம் கூடாது' என்று நாம் மூடத்தனமாகப் பேசுகிறோம். திராட்சப் பழம் புளிக்கும் என்ற நரிக்கதைபோல அந்த மூடத்தனத்தை யெல்லாம் நாம் ஒப்புக்கொண்டாலும், இந்தியா முழுதிலும் ஒரு லட்சம் பேர் உண்மையான ஆத்மஞானிகள் இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். இப்பொழுது இவர்களுடைய ஆத்மஞானத்தின் பொருட்டு முப்பது கோடி ஜனங்கள் பாமரத்தனத்திலும் பட்டினியிலும் முழுகிக் கிடக்க வேண்டுமா? என் ஒருவன் பட்டினி கிடந்து பரதவிக்கவேண்டும்?...

ஜடசம்பந்தமான நாகரிகம்—ஆடம்பரங்கூட எளியவர்களுக்குத் தொழில் கொடுக்கும் பொருட்டு அவசியம் தான். ஆகாரம்! ஆகாரம்! இங்கு எனக்கு ஆகாரம் கொடுக்க முடியாத கடவுளால் மோட்சலோகத்தில் எனக்கு நித்தியாநந்தத்தைக் கொடுக்க முடியுமென்று நான் நம்பமாட்டேன்... இந்தியா தேசம் முன்னேற்றத்தில் வரவேண்டும். எளியவர்கள் போஷிக்கப்படவேண்டும். கல்வி பரப்பப்படவேண்டும். வைதீகக் கொடுமை நீக்கப்படவேண்டும். வைதீகக் கொடுமை கூடாது. ஜனசமூகத்தில் கொடுமை உதவாது. ஒவ்வொருவருக்கும் அதிக ஆகாரம், அநேக சந்தர்ப்பங்கள். * * * *

ஸ்வதந்திரத்தைக் கொடுப்பதற்குத் தயாராயில்லாத எவனும் ஸ்வதந்திரத்திற்கு அருகனல்லன். * *

அடிமைகள் அடிமைகளை யுண்டாக்குவதற்கு அதிகாரத்தை விரும்புகின்றனர். * * * *

இப்பொழுது நமது மதத்தை ஸ்தாபிதம் செய்தலினாலும், ஜனசமூகத்திற்கு ஸ்வதந்திரம் கொடுத்தலினாலும் மெல்ல மெல்ல மாறுதல்கள் உண்டாகவேண்டி யிருக்கின்றன. பழைய மதத்திலிருந்து வைதீகக் கொடுமையை யெடுத்துவிட்டால் உலகில் உயர்ந்த மதம் உங்களுடையதே. நான் சொல்லுகிறது தெரிகிறதா?......

ஸ்ரீ சங்கரர், இராமாநுஜர், சைதந்யர் முதலான பூர்வீக மஹான்களால் விதிக்கப்பட்டுள்ளபடி, சர்வஜன முக்தி, சமபாவனை முதலிய பழைய நியாயங்களின்படி, ஜனசமூகத்தைச் சீர்திருத்த முயற்சி செய்யுங்கள்!

ஆத்திரங் கொள்ளுங்கள்! ஆத்திரத்தைப் பரப்புங்கள்! வேலை செய்யுங்கள்! தலைமை வகிக்கும்பொழுதே, வேலையாளனாயிரு! ஸ்வய நன்மைபற்று இரு! தனிமைபாய் ஒரு சிநேகிதன் இன்னொரு சிநேகிதன் மீது குற்றங்கூற, ஒருபொழுதும் கேட்காதே! அளவற்ற பொறுமையை வகித்துக்கொள்! ஜயம் நின்னுடையதே......நான் என் கடிதங்களை எப்பொழுதும் உனக்கே எழுதுகிறதினால், என்னுடைய மற்ற ஸ்நேகிதர்களைப் பார்க்கிலும் நீ எனக்கு வேண்டியவன் என்று காட்டிக்கொள்ள முயற்சி செய்யாதே! நீ ஒரு பொழுதும் அத்தகைய முட்டாளா யிருக்கமாட்டா யென்று எனக்குத் தெரியும். ஆனாலும் உன்னை எச்சரிக்க வேண்டியதைக் கடமையாக நான் நினைக்கிறேன். வேலைசெய்! வேலைசெய்! ஏனென்றால், பிறருடைய நன்மையின்பொருட்டு வேலை செய்தலே ஜீவிதம்.

முகஸ்துதி, வெளிவேஷம், போக்கிரித்தனம் இவையெல்லாம் இருக்கக்கூடாதென்று நான் விரும்புகிறேன். எப்பொழுதும் ஈஸ்வரனிடத்தில், எப்பொழுதும் பகல் வெளிச்சம்போல் பரந்த சத்தியத்தினிடத்தில் நான் சார்ந்திருக்கிறேன். பெயரையாவது கீர்த்தியையாவது அடைவதற்கு அல்லது நன்மை செய்வதற்குக்கூட வெளிவேஷம் போட்டு அழுக்குப் படிந்த மனச்சாட்சியுடன் நான் மரிக்காமலிருப்பேனாக! அயோக்கியத்தனம் அணுவளவேனும் தீய எண்ணம் சிறிதேனும் இருத்தல் கூடாது.

ஆஷாடபூதி வேஷம் கூடாது; அந்தரங்கப் பித்தலாட்டம் கூடாது; இரகஸ்யப் புரட்டு உதவாது; ஒன்றையும் மூலையில் செய்யக்கூடாது. இவைகள் மகாத்மாவினுடைய பிரத்தியேகப் பிரீதியன்று. எனது தீர புத்திரர்களே! மேலே செல்லுங்கள்! பணம் இருந்தாலும் சரியே, இல்லாவிட்டாலும் சரியே—மனுஷிய சகாயம் இருந்தாலும் சரியே, இல்லாவிட்டாலும் சரியே—உங்களிடத்தில் அன்பு இருக்கிறதா? உங்களிடம் கடவுள் இருக்கிறாரா? மேலே செல்லுங்கள்! முன் செல்லுங்கள்! உங்களை எதிர்க்க முடியாது.

ஆ! உண்மை! ஜாக்கிரதை! உண்மையல்லாத ஒவ்வொன்றையும்பற்றி ஜாக்கிரதை! உண்மையைப் பிடித்துக்கொள்! நாம் ஜெயிப்போம்; ஜயம் கிடைக்கச் சிறிது தாமதிக்கும்; ஆனால் கிடைப்பது நிச்சயந்தான். நீங்கள் ஒவ்வொருவருக்கும், முழு வேலையும் செய்ய வேண்டியவர்களைப் போலவே, வேலை செய்யுங்கள்! ஐயாயிரம் வருஷங்கள் உங்களையே அடிமைகளாய் வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. இந்தியாவின் பிற்காலம் உங்களைப் பொறுத்ததாயிருக்கிறது. மேன்மேலும் வேலை செய்யுங்கள்! எனக்கு எப்பொழுது வரமுடியுமென்று தெரியாது. வேலை செய்வதற்கு இது ஒரு பெரிய பூமி. இந்தியாவில் அவர்கள், அதிகமானால், புகழ்வார்கள். ஆனால், அவர்கள் ஒன்றுக்கும் ஒரு பைசாவேனும் கொடார்கள். அவர்களே யாசகர்களாயிருக்கும்பொழுது, அவர்களுக்கு எங்கிருந்து (பணம்) கிடைக்கும்; இன்னும், சென்ற இரண்டாயிரம் வருஷங்களுக்கு மேலாகப் பொது நன்மை செய்யும்படியான தன்மையையையும், ஜனசமூகம், பொது ஜனங்கள் என்றால் இன்னவை யென்பதையும் அவர்கள் இப்பொழுதுதான் அறிந்துகொண்டு வருகிறார்கள். ஆகையால், நான் அவர்களைக் குற்றம் கூறவில்லை. மற்றவை பின்னர்.

உங்களை ஆசீர்வதிக்கின்ற,

விவேகாநந்தர்.

# பரீந்திர குமார கோஷ்.

## ஸ்ரீமான் N. வேங்கடரமணன் அவர்கள்.

பாரத மாதாவின் அருந் தவச் செல்வர்களாகப் பிறந்த புத்திர ரத்தினங்கள் பலபேர் அறிவிலும், ஆண்மையிலும், தேசாபிமானத்திலும், தியாகத்திலும் தலை சிறந்தவர்களாக விருந்தும் சுதந்தரமற்ற நமது இந்தியாவில் அவர்களுடைய ஆற்றல்களனைத்தும் நாட்டின் நன்மைக்கு உபயோகப் படுத்துவதற்கும், அவர்களுடைய அரும் பெரும்புகழ் உலகில் வெளிப்பட்டுப் பிரகாசிப்பதற்கும் எற்ற சந்தர்ப்பம் வாய்க்கப் பெறுமலேயே காலச் சக்கிரத்தின் சுழற்சியின் கீழ்ப் பட்டு அவர்கள் மறைந்துகொண் டிருக்கின்றனர். அவர்களில் ஒரு சிலர் தங்கள் உள்ளத்தில் எழும் தேசாபிமானத்தின் வேகத்தைப் பொறுக்க மாட்டாதவர்களாகித் தங்கள் அறிவாற்றல்களோடு கூடிய ஊழியத்தை நேர்மையான முறையில் பகிரங்கமாகப் பயன் படுத்தாமல், இரகசியமாக ஹிம்சையோடு கூடிய அராஜகப் புரட்சி இயக்கங்களிற் செலவிட்டுக் கடைசியில் அரசாங்கத்தின் கோபத்திற் காளாகிச் சிறைக் கோட்டத்தில் மறைந் துறைந்து மடிகின்றனர். இத் தகையோர்களுக்குத் தகுந்த சந்தர்ப்பங்களும், சௌகரியங்களும், சாதனங்களும், ஆதரிப்புகளும் ஏற்பட்டிருக்குமாயின் இந்தியாவில் எத்தனையோ நெப்போலியன்களும், எத்தனையோ ஷேக்ஸ் பியர்களும், எத்தனையோ கொலம்பஸ்களும், எத்தனையோ ஆப்பிரகாம் லிங்கன்களும், எத்தனையோ ராக்பெல்லர்களும், எத்தனையோ ஹென்ரி போர்டுகளும் தோன்றி யிருப்பார்களென்பதை யாரே மறுக்க வல்லார்? எனவே பாரத பூமியில் பரி

சுத்தமான தேசாபிமானமும், உற்சாகமும் படைத்த வாலிபர்கள் பலபேர் நேர்மையற்ற அராஜகக் கிளர்ச்சிகளில் சம்பந்தப்பட்டு, அரசாங்கத்தின் விருந்தினர்களாகி, வாணுள் முழுதும் பாரத ஜன சமூகத்திற்குப் புறம்பாகி நிற்பது பரிதபிக்கத் தக்கதாம்! அத்தகைய துர்ப் பாக்கியமான ஜீவியத்தைப் பெற்ற முக்கியஸ்தர்கள் சிலருள் பரீந்திர குமார கோஷும் ஒருவர். இவர் அரவிந்த யோகியின் தம்பி யாவர். இவரது வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தினை "யங் லிபரேடர்" பத்திரிகையில் வெளிவந்துள்ளதன் படியே "பாரதி"யின் வாசகர்களுக்குத் தருகின்றேம்.

பரீந்திர குமார கோஷ்! இவரது நற்பெயரை நினைத்த மாத்திரத்திலேயே எவ்வித எண்ணங்கள் உதயமாகின்றன! புரட்சிக்காரர்களில் தலைசிறந்தவராகிய இவர், இந்தியாவில் அரசாங்கத்தின் மீது தோன்றிய வெறுப்பென்னும் அனலைக் கிளப்பிவிட்டு, வாலிப வீரர்களின் சக்திகளனைத்தையும் ஒருமுகப் படுத்தி, பின்னேக்கிப் பாராத தைரியத்தையும், வீரா வேசத்தையும் நாட்டில் எழுப்பி அரசாங்கத்தை எதிர்க்க முனைந்த வீரர் ஆவர். ஆறு வருடகாலம் இந்திய தேசிய ஆகாயத்தில் மின்னற் கொடியென இவர் ஒளி வீசி நின்ருர்!

## பிறப்பும் வளர்ப்பும்

பரீந்திரர் 1880-ம் ஆண்டில் இங்கிலாந்தில் பிறந்தார். ஆறு மாதக் குழந்தையாக இருக்கையில் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டார். இவரது தந்தையார் டாக்டர் கே. டி கோஷ் அவர்கள், கோல்னு என்ற விடத்தில் சிவில் சர்ஜனு யிருந்தார். ஆங்கிலேயர்களின் சமூக வாழ்க்கையிலும், அவர்களுடைய ஆசாரங்களிலும் அவருக்குப் பிரியமதிகம். பரீந்திரரின் 12-வது வயதில் அவரது தந்தையார் காலஞ் சென்ருர். பிறகு இவர் தமது அன்னையைப் பெற்ற பாட்டனுராகிய பாபு ராஜ நாராயண வசு அவர்களின் வீட்டில் வளர்ந்தார். நாராயண வசு அவர்கள் ஒரு புரட்சிக்காரர். எனவே பரீந்திரருக்குச் சிறு வயதினின்றே புரட்சி இயக்கத்தின்

சம்பந்தமான தத்துவங்கள் பிடிபடுவதற்கு அவரது பாட்டனுரே காரணமாவர். சுதந்திரத்தில் விருப்பமும், பிரிட்டிஷாரின்மீது வெறுப்பும் இவருக்கு இயல்பான குணங்களாயின. இவர் பள்ளி மாணவரா யிருக்கையிலேயே கை யெழுத்துப் பத்திரிகை யொன்றை நடத்தி வந்தார். கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளிலும், குஸ்தி போன்ற உடற் பயிற்சிகளிலும் பழகி வந்தார். (தேச சரித்திரத்தில்) சிவாஜியின் சேனைகள் செய்த யுத்தங்களைப்போல் மாணவர்களைக் கூட்டிக்கொண்டு மலைகளில் போலி யுத்த விளையாட்டுகளை நடத்திக் கொண்டிருந்தார். யுத்த வீரனுக்குரிய இலக்கணங்கள் அனைத்தும் இவருக்கு அமைந்திருந்தன. டக்கா, பாட்னு காலேஜ்களில் இவர் படித்த இரண்டு ஆண்டுகளிலும் தேசீய கீதங்கள் எழுதியும், எதிர் காலச் சுதந்திர இந்தியாவைப் பற்றிய கனவுகளைக் கண்டும் காலங் கடத்தினர்.

## புரட்சிக்கார ராதல்

படிப்பை முடித்துக் கொண்டவுடன் பரீந்திர குமாரர் முதலில் வர்த்தகம் ஆரம்பித்தார். ஸ்டேஷனரி சாமான்களின் கடையும், காப்பி ஹோட்டலும் வைத்து நடத்தினர். ஆயினும் விரைவில் பெரு நஷ்டமடைந்தார். கையில் ஒருபைசா இல்லை கடைசியில் உண்ணா உணவுக்கும் வழியில்லாமற் போயிற்று. எனவே பரோடாவி லிருந்த தமது தமயனுராகிய அரவிந்த கோஷ் அவர்களிடம் போய்ச் சேர்ந்தார். அப்பொழுது அரவிந்தர் பரோடாக் கலாசாலையின் உப தலைவராக இருந்தார். அவ்விடம் சென்றவுடன் பரீந்திரருக்குத் தமது வாழ்க்கையின் நோக்கம் புலனுயிற்று. இரகசிய சங்கத்தைச் சேர்ந்த இருவருடன் இவருக்குச் சிநேகமுண்டாயிற்று. அவ் வங்கத்தினர்களின் தலைமையிடம் புனு. சின்னுட்களில் பரீந்திரர் புரட்சிக்காரராக மாறினர். ஒரு கையில் பகவத் கீதையும், மற்றொரு கையில் கத்தியுந் தாங்கி ''ஆயுளுள்ளளவும் தாய் நாட்டுக்கே உழைக்கின்றேன்'' என்று சபதஞ் செய்து இரகசிய சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்தார்.

## வங்காளத்தில் புரட்சி இயக்கம்

1902-ம் ஆண்டில் இவர் இரகசிய சங்கத்தின் பிரதிநிதியாக வங்காளத்திற்குச் சென்றார். அங்கு விரைவில் இரண்டு இரகசிய சங்கங்களை ஸ்தாபித்தார். அச் சங்கங்களுக்குப் பல கிளை ஸ்தாபனங்கள் ஏற்பட்டன. சங்கத்திற்கு அங்கத்தினர்களைச் சேர்த்தல், வேவுகாரர்களைக் கொண்டு செய்திகளை யறிதல், பணம் வசூலித்தல், யுத்த ஆயுதங்களைச் சேகரித்தல், பிரசுரங்களை வெளியிடுதல் முதலிய காரியங்களைச் செய்வதற்குப் பல கிளைகள் ஸ்தாபிக்கப் பட்டிருந்தன. சங்க அங்கத்தினர்களுக்குக் குதிரைச் சவாரி செய்தல், சைக்கிள் ஏறிச் செல்லுதல, நீந்துதல் முதலிய பல கருமங்கள் கற்பிக்கப்பட்டு வந்தன. ஆயினும் எதிர் பார்த்த படி போதிய உதவி கிடைக்காமையால் பரீந்திரர் ஒரு வருடத்திற்குள் மீண்டும் பரோடாவுக்குத் திரும்பிச் சென்றார். பரோடாவில் இவருக்கு ஒரு யோகியினுடைய நட்பு கிடைத்தது. அந்த யோகியின் பெயர் விஷ்ணு பாஸ்கரர். அவரே இவருக்குக் குருவாயினர் அவரிடத்தில் உபதேசங்களைப் பெற்றும் பல உண்மைகளை யறிந்தார். வங்காள மாகாணம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு அதனால் தேசத்தில் பெருங் கிளர்ச்சி தோன்றலாகியது. அந்த நல்ல சந்தர்ப்பத்தில் பரீந்திர குமாரர் மீண்டும் கல்கத்தா சென்றார். வங்காளம் அச் சமயத்தில் அல்லோல கல்லோலமா யிருந்தது. அதுவே பரீந்திரருக்கு ஏற்றசமயமாயிற்று. உற்சாகம்வாய்ந்த வாலிபர்கள் பலரைக் கூட்டிப் பிரசித்தமான இரகசியப் புரட்சி இயக்கச் சங்கத்தைக் கல்கத்தா, டக்கா நகரங்களில் ஸ்தாபித்தார். அச் சங்கமானது விரைவில் தேசம் முழுவதும் பரவலாயிற்று. அதற்கு ஒரு காலத்தில் வங்காளத்தில் மாத்திரம் 500 கிளை ஸ்தாபனங்கள் ஏற்பட் டிருந்தன. பட்டணங்களிலும், கிராமங்களிலும் கூட அச் சங்கத்தின் கிளைகள் காணப்பட்டன. இதைப் போன்ற மற்றும் பல சங்கங்களும் தேசத்தில் தோன்றின. புரட்சி இயக்கத்திற் கனுகூலமான சந்தர்ப்பங்களை உண்டாக்க வேண்டியிருந்தது. அதற்குப் பொது மக்களிடையில் அனுகூலமான

அபிப்பிராயங்களைப் பிரபலப் படுத்தவேண்டும். ஆகவே பத்திரிகைப் பிரசுரங்கள், தேச பக்தியூட்டும் பாட்டுகள், கீதங்கள், துண்டுப் பிரசுரங்கள், இரகசியச் சங்கங்கள், சபைகள் முதலியவைகளின் மூலமாக அதி தீவிரமாகப் பிரசாரங்கள் நடைபெற்றன. இராஜாங்கத் துவேஷம் பிரபல மாயிற்று. புரட்சி நடைபெற வேண்டுமானால் மக்களின் மனம் கொதிப்படைய வேண்டும். அவ்வாறு மனம் கொதிப்படைவதற் கேற்ற தேச கீதங்கள் வாலிபர்களின் உள்ளத்தினின்று பீறிட்டுக் கொண்டு வெளி வந்து கொண்டிருந்தன.

## அரவிந்தரின் கூட்டுறவு

அச் சமயத்தில் அரவிந்தரும் தமது சகோதரரோடு வந்து சேர்ந்தார். 1906-ம் ஆண்டில் பிரசித்தியான "யுகாந்தர்" (புதிய சகாப்தம்) என்ற பத்திரிகையின் பிரசாரத்திற்கு நாட்டில் அளவில்லாமலிருந்தது. துரைத்தனத்தாருக்கு அப் பத்திரிகையின் எழுத்துக்கள் அச்சம் விளைவித்தன. 1908-ம் ஆண்டில் அப்பத்திரிகை அரசாங்கத்தாரால் அடக்கிவிடப் பட்டது. அப் பத்திரிகை அக்கினி ஜ்வாலைகளைக் கக்கிக்கொண் டிருந்தது. ஆலிபூர் செஷன் ஜட்ஜி யவர்கள் அப் பத்திரிகையின் எழுத்துகளைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"பிரிட்டிஷ் ஜாதியாரின் மீது இப்பத்திரிகையின் வியாசங்கள் தீவிரமான துவேஷத்தைக் கிளப்பத் தக்கன. ஒவ்வொரு வரியும், ஒவ்வொரு எழுத்தும் புரட்சியைக் கிளப்புவதாகும். அராஜகப் புரட்சியை எவ்வாறு நடத்துவ தென்பதைப் பற்றி விவரமாக அதில் கூறப்படுகின்றன. இப் புரட்சிக் கொள்கைகளை வாலிபர்களின் உள்ளங்களில் நிலை நாட்டுவதற்கு இப் பத்திரிகையின் அதிபர் எத்தனை வழிகளை—யுக்திகளை யறிவாரோ அவை யனைத்தும் இப் பத்திரிகையில் காணப்படுகின்றன" "யுகாந்தர்" என்ற ஒரு பத்திரிகையே யன்றி "சந்தியா" என்ற மற்றொரு வங்காளிப் பத்திரிகை கூட அப்படியே அரசாங்கத்தாரின் மீது அனலைக்

கக்கிக்கொண் டிருந்தது. அதன் எழுத்துக்களைக் கவனியுங்கள். "எனக்கு முழுச் சுதந்திரம் வேண்டும். பரங்கிகளின் அதிகாரம் அணுவளவாவது மீந்திருந்தாலும் இந்நாட்டுக்கு விடுதலை யென்பது கிடையாது. எங்களுக்கு முழுச் சுதந்திரத்தைச் சம்பாதித்துக் கொள்ள முடியாமற் போகுமானால், சுதேசியம், பகிஷ்காரம் என்பன வீண் வார்த்தைகளே யாகும். தயவு தாக்ஷண்யமாகப் பிரிட்டிஷார் எங்களுக்குக் கொடுக்கப் புகும் உரிமைகளை நாங்கள் உமிழ்ந்து விடுவோம். எங்கள் சுய பலத்தாலேயே எங்கள் விடுதலையை நாங்கள் காத்துக் கொள்ளுகின்றோம்."

ஒரு வங்காளத்தில் மட்டுமன்று. இமயம் முதல் கன்னியா குமரி வரையில் இந்தியா முழுவதிலும் இத்தகைய வீர முழக்கம் ஒலி செய்தது. அதே சமயத்தில் ருஷ்ய ஜப்பான் யுத்தத்தில் ஜப்பான் அடைந்த வெற்றிச்செய்தியானது இந்திய வாலிபர்களின் உள்ளத்தில் உற்சாகத்தை மிகுதிப் படுத்தியது. எரியும் நெருப்பில் நெய்யை வார்த்ததைப்போல் வாலிபர்களின் தேசாபிமானம் கொளுந்து விட்டெரிய ஆரம்பித்தது. இந்தியப் புரட்சிக்காரர்கள் உடனே முன்வந்து "இந்தியர்களே! ஜப்பானின் வழியைப் பின்பற்றுங்கள்" "பற்றுங்கள்" என்று கூக்குரலிட ஆரம்பித்தனர். வங்காளப் பிரிவினையால் கொதிப்படைந்திருந்த இத் தேசத்தில் அக் கூக்குரல்கள் உற்சாகத்தைக் கிளப்பி விட்டன. பரீந்திர குமார கோஷின் சார்பாக நாட்டில் ஆயிரக் கணக்கான வாலிபர்கள் நின்றனர்.

## வெடி குண்டுகளும் கொள்ளைகளும்

பொது மக்களின் தேசியக் கொள்கைகளுக்கு விரோதமாயிருப்பவர்களைக் கொன்று தேசத்தில் பயத்தை யுண்டாக்குவது புரட்சி இயக்கத்தின் காரியக் கிரமங்களில் ஒன்று. எனவே உல்லாசகரதத் என்பவர் பாம்ப் என்ற வெடி குண்டுகளைத் தயார் செய்வதற்குக் கற்றுக்கொண்டார். ஹேம சந்த்ர தாஸ் என்பவர் தமது

ஆஸ்தியில் ஒரு பங்கை விற்றுப் பாரிசுக்குச் சென்று வெடி குண்டு களைச் செய்யும் முறைகளைக் கற்று வந்து, புரட்சிக்காரரோடு சேர்ந்தார். அப்பொழுது தேசியக் கொள்கைகளுக்கு விரோதமாயிருந்த பலர் மீது வெடி குண்டுகள் எறியப்பட்டன. இரகசிய சங்கச் செலவுகளுக்குப் பணம் மென்மேலும் கிடைப்பது கஷ்டமாயிருந்தது. அதனால் தேசாபிமான மில்லாதவர்களாகக் காணப்பட்ட தனவந்தர்களின் வீடுகளிற் புகுந்து கொள்ளையிடத் தலைப்பட்டனர். அடிக்கடி போலீஸ் உடைகளை யணிந்து அவர்கள் தங்கள் காரியங்களை நிறைவேற்றி வந்தனர். மானிக்டொலா என்ற ஒரு தோட்டத்தில் புரட்சிக்காரர்கள் வெடி குண்டு செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஸ்தாபித்தனர். ஆயினும் அந்த ரகசியம் போலீசாருக்கு எப்படியோ தெரிந்து விட்டது. பரீந்திர குமாரர், உல்லாச கரதத்தர் முதலியோர் துரைத்தனத்தாரால் அரெஸ்டு செய்யப்பட்டார்கள். விசாரணையில் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆயினும், ஹைகோர்ட்டார் அந்தத் தண்டனையைத் தீவாந்தர சிக்ஷையாக மாற்றினர். அக் கேஸ் நடந்து கொண்டிருக்கையில் அப்புரூவராக மாறி, புரட்சிக்காரர்களின் இரகசியச் செய்திகள் அனைத்தையும் போலீசாருக்குத் தெரிவிக்க நிச்சயித்துக் கொண்டிருந்த நரேஸ் கோஸ்வாமி என்பவர் புரட்சிக்காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## வேதாந்தியாக மாறியது

பரீந்திர குமார கோஷ் அவர்கள், மேற் கூறியவாறு தீவாந்தர சிட்சையை யேற்றுப் பனிரெண்டு ஆண்டுகள் அதை யனுபவித்த தன் பிறகு 1920-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் விடுதலை செய்யப்பட்டார். என்றாலும் இப் பனிரெண்டு வருடங்களில் அவர் முற்றிலும் வேறாக மாறி விட்டார். அரசியல் விஷயங்களில் அவருக்கு அருவருப்புண்டாகி விட்டது. வேதாந்த தத்துவ சாஸ்திரக் கருத்துக்கள் அவரது உள்ளத்தைக் கவர்ந்து விட்டன. ஆகவே அவர் இன்று புதுச்சேரியில் தமது சகோதரராகிய அரவிந்தரின் ஆச்சிரமத்தில் தவ மியற்றிக் கொண்டிருக்கிறார்.

# நூல் நிலைய இயக்கம்.

ஸ்ரீமாந் **S. K.** வேம்பு அவர்கள்.

இன்று மக்களிடை நூல்நிலைய (புத்தகசாலை) இயக்கம் வெகுவாய்ப் பரவியிருக்கிறது. இவ்வியக்கத்தால் கற்றோரும் மற்றோரும் அடையும் பயனுக் களவில்லை. நூல் நிலையம், இவ்வியக்கத்தின் முக்கிய தத்துவம், இயக்கத் தலைவர்களின் கடன் இவைகளைப் பற்றிச் சுருக்கமாய் மேனாட்டு அறிஞரின் கருத்துக்களைத் தழுவிச் சில சொல்லுவாம்.

'சுவடிகளின் தொகுதியே உண்மையான பல் கலைக் கழகம்'' என்றார் கார்லைல். ஓர் சிறிய அறையிலுள்ள எல்லையில்லா நிதியே நூல் நிலையம். இந் நிதியைப் பயன்படுத்த வேண்டுவது நம் தனிப் பெருங்கடன். ஒரு வெள்ளிக் காசுக்காக மனிதன் ஓடி ஓடி உழல்கிறான். பண்டைய அறிஞர்களின் பொன் மொழிகளை ஓடித் தேடி உணர்கிறானா? "அம் மொழிகள் பல நூற்றாண்டுகளாகப் பெருகிய மதிப்புடன் மிளிருகின்றனவே'' என்று அழுகிறார், தோரோ. கையில் கோலின்றியும், கடுமுகம் சுடுசொல்லின்றியும் நமக்குக் கல்வி புகட்டும் போதகாசிரியர்களே கிரந்தங்கள். கல்வியைக் கற்க அவைகளிடம் போனால் அவைகள் தூங்கிக்கொண்டிருப்பதில்லை. ஆராய்ச்சி செய்தால், அவைகள் ஒன்றையும் ஒளிப்பதில்லை. திரிபாய்ப் பொருள் கொண்டுவிட்டால் அதற்காக அவைகள் கோபிப்பதில்லை. நம் அறியாமையை நோக்கிச் சிரிப்பதில்லை. இத் தன்மை வாய்ந்த நூற்கள் நிறைந்த நிலையத்தைப் பெற்றிருக்கும் நம் விலையில்லா உரிமையை என்னென்றியம்புவது!

காலஞ்சென்ற மேதாவிகளை யெல்லாம் தட்டி யெழுப்பி உரையாடும் வன்மை நமக்குண்டு. கண்ணகியைப் பற்றியும்,

சேரன் செங்குட்டுவனின் வட நாட்டுப் படையெடுப்பைப் பற்றியும் இளங்கோவடிகளிடம் வினவலாம். கம்பனைத் திறந்து காவிய இன்பத்தைப் பருகலாம். குடும்பப் பிணக்கா, அறநெறியில் ஐயமா, அரசியற் சிக்கலா—எந்த வழக்கையும் வள்ளுவன் என்னும் நீதிபதியிடம் கொண்டு போகலாம். நடுக்கண்ட நியாயம் கைமேல் கிடைக்கும். நூல் நிலையத்துள், பல காலத்தினரையும், பல நாட்டாரையும் காணலாம். சிலர் அரசியலுலகில் தலைசிறந்தவர்கள். போர்க்களத்தில் பெரும் புகழ் படைத்தோர் சிலர். நுண்ணறிவால் கண்ணியம் வாய்ந்தோர் சிலர். பண்டைய செய்திகளையும், சான்றோரின் வாழ்க்கை வரலாறுகளையும் அடுக்கடுக்காய்ப் பிழையின்றிச் சிலர் கூறுவர். சிலர் இயற்கைத் தேவியின் நுணுக்கங்களைத் தெள்ளத் தெளியக் காண்பிப்பர். சீரான வாழ்வை நடாத்தும் வழியைப் புலப்படுத்துவர் சிலர். சிலர் அமைதியான மரணம் அடையும் மார்க்கத்தைக் காட்டுவர். சிலர் தங்களுடைய குதூகலத் தன்மையால் நமது கவலைகளை நீக்கி மகிழ்ச்சியை ஆக்குவார்கள். புண்பட்ட மனத்திற்கு ஆறுதல் அளிப்பார் சிலர். 'ஐந்தையடக்கு,' 'தனக்கு பருத்துவன் தான்' என்று இன்னோர் அன்ன போதனைகளைச் செய்வார் சிலர். சுருங்கச்சொல்லுமிடத்துக் கலைத் துறைகளின் கதவுகளையெல்லாம் நமக்காகத் திறந்து விடுவார்கள். இவ்வளவு அருமை பெருமை வாய்ந்த நூல் நிலையங்களை நாடுதோறும் வீடுதோறும் போற்றி வளர்க்க வேண்டும். புதிதாகத் தமிழ் நாட்டில் இப்பொழுதுதான் இவ்வியக்கம் தோன்றியிருக்கிறது. நூல்நிலையததுக்கான கிரந்தங்களைப் பொறுக்குவதில் பிரத்தியேகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். உயர் நூற்களைப் பொருள் செய்யும் வன்மை அறிவோர்களுக்கே யுண்டு. பொது மக்களுக்கு என்செய்வது? அல்லும் பகலும் தொல்லைப்பட்டு இல்லம் சேரும் மூளைகளுக்கு உயர் நூற்களைப் பொருள் செய்யும் வன்மை கிடையாது. சேயின் உடல் நலம் தெரிந்து பால் ஊட்டும் தாய்போல், மக்கள் மூளைத்திற னறிந்து நூல்களை வழங்க வேண்டும். அரிய கருத்துக்கள், உயர் கொள்கைகள் நிரம்பிய நூல்கள் தாய் மொழியில் இனிய எளிய நடையில் ஆக்கப்பட வேண்டும்.

# வில்லியம் டெல்
## சுவிட்ஜர்லாந்தின் சுதந்திர வீரன்.

திரு. எம். பொன்னுஸ்வாமி அவர்கள்.

சுவிட்ஜர்லாந்தென்பது ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஓர் தேசமாகும். பச்சைப் பசேலெனப் பசுந்தா ளாடை கட்டிய பல குன்றுகளும், வானுறவோங்கி நிற்கும் மரங்களின் வரிசையும், கானாறுகளின் நீர்ப் பெருக்கும், மலையருவிகளின் வளமும் அந்நாட்டை அலங்கரிக்கின்றன. வாவிகளும், தடாகங்களும் அந்நாட்டைச் சுற்றியிருக்கும். வனப்புமிக்க அவ் வாவிக் கரைகளில் மழலை பழகும்

---

ஆக்குவோரை ஊக்கவும் வேண்டும். அறிவுத் தெய்வம் வதியும் கோயிலின் பாதை யாவரும் முயற்சியின்றி நடக்கும்படி செப்பனிடப்பட வேண்டும். ஆகலால் பொது மக்களுக்கு அறிவைப் பரப்பும் நூல்களையே பெருக்க வேண்டும்.

நூல் நிலைய இயக்கம், மிகுந்த ஜன நாயகம் வாய்ந்தது. குடியாட்சியிலுள்ள குற்றங்குறைகளை அறவே நீக்கவல்லது இவ் வியக்கமே. பல்கலைக்கழக மாணவனுக்கு வழங்கும் உயர் அறிவைப், பண்ணையில் வாடும் தொழிலாளிக்குக் கொடுக்க முயற்சிக்கும் இயக்கத்தைக் காட்டிலும் மிகுந்த ஜனநாயகம் வாய்ந்த இயக்கம் எது?

ஆகலால் இந்த நூல் நிலைய இயக்கத்தில் நாம் ஒவ்வொருவரும் ஈடுபட்டு, நாடுதோறும், வீடுதோறும், வீதிதோறும் கலையைப் பரப்புவோமாக.

———

கிளிகளொரு புறமாயும், நடை பழகும் மயிலினங்கள் ஒரு வரிசையாயும், இனிய ஓசையால் இசைத்துப் பாடும் குயிற்கூட்டங்களொரு மருங்காயும். மலர்களிலுள்ள தேனைக் குடித்து மதிமயங்கி ரீங்கார மிட்டுக்கொண்டுலவும் வண்டினங்கள் மற்றொரு பக்கமாயும் நிரப்பியிருக்கும் அதிசய அற்புதக் காட்சிகளை அங்கே காணலாம். இத்தகைய வனப்புவாய்ந்த அச் சுவிட்ஜர்லாந்து தேசத்தைப், பதினான்காம் நூற்றாண்டில் ஆஸ்ட்ரிய நாட்டாராண்டுவந்தனர். கொடுங்கோன்மை நிறைந்துள்ள அவ் வாஸ்ட்ரிய நாட்டுப் பிரதிநிதிகள் பலர், சுவிட்ஜர்லாந்து நாட்டில் அநீதச் சட்டங்களையும் அடக்கு முறைகளையுங் கையாண்டு மக்களை மிருகங்களினும் கீழாக அவமதித்து நடத்திவந்தனர் சுவிட்ஜர்லாந்தின் குடிமக்களோ தம் வலிமையிழந்து, சுதந்திரம் போய்ச் சுகமிழந்து ஆஸ்ட்ரியர்களுக்கு அடிமைகளாய் நின்று தவித்தனர். நிற்க

யூரி யென்பது சுவிட்ஜர்லாந்து தேசத்திலுள்ள ஒரு சிறிய கிராமம். அதன் அண்மையில் ரூசஸ்நதி, தெளிப்பளிங்கன்ன தீப்புனல் நிறையப்பெற்று வெகு அழகாக ஓடிக்கொண்டிருக்கிறது.

அவ் வாற்றின் கரை ஓரத்தில் ஒரு சிறிய குடில் இருந்தது. அதைச்சுற்றி ஆடுகள் நிறைந்திருக்கும். அச்சிறு குடிலில் வதியும் புருடனே நமது கதாநாயகனாகும். ஆஹா! நமது சுதந்திர அன்னையின் இருப்பிடமெங்கே? மானத்தையே ஆபரணமாகப் பூண்டு சுதந்திரத்திற்காக உயிரை விடக் குதித்துக்கொண்டிருக்கும் தியாகிகளின் குடிலல்லவோ எழில்பெறும் எம் அன்னைக்கு இருப்பிடம். இதுகாறும் உலகில் தனக்கென வாழாப் பிறர்க்கென வாழும் தியாகிகள் பிறந்தவிடம் பெரும்பாலும் கூரைகளால் வேய்ந்த சிறுமண் வீடுகளே! ஆஹா! அச்சிறு குடில்களின் பெருமையை என்னென் றியம்புவது? சுவிட்ஜர்லாந்தின் சுதந்திர வெற்றிக்குக் காரணமாயிருந்த நமது கதாநாயகன் பெயரை வில்லியம்டெல் என்று எல்லோரும் அழைப்பார்கள்.

அவன் ஆடுகளை மேய்க்கும் இடை மகனாகும். நாள்தோறும் ஆடுகளை மேய்த்து ஜீவனோபாயம் பண்ணிவந்தான். அவனுடைய ஆஸ்திகளெல்லாம் அவனுக்குள்ள சில ஆடுகள்தான். எல்லாவற்றையும் விட அவன் நேசித்த பொருள் ஒன்று உண்டு. அதுதான் அவனுடைய புத்திர ரத்தினம். மழலை பேசிக் கொஞ்சும் குழவிகள் அவனுக்கு வேறு இல்லாதபடியால் தன்னுடைய ஒரே மகனிடத்தில் அதிக வாஞ்சையைக் காட்டினான். அந்த யௌவன குமரன் பத்தாண்டுப் பிராய முள்ளவனாக இருந்தான். நமது வில்லியம்டேல் என்னும் வீரனும் அவன் மகனும் ஆடுகளைப் புலங்களில் ஓட்டி மேய்த்துச் சுகமே காலம் கழித்து வந்தனர். நமது வில்லியம்டெல்லினுடைய ஒப்பற்ற அரும் புதல்வனின் எழில் முகத்தில் எப்பொழுதும் புன்முறுவல் தவழ்ந்தவண்ணமா யிருக்கும். ஊக்கமும் உற்சாகமும் நிறைந்த உள்ளமுடையவன். ஆட்டுக்குட்டிகளைத் தனக்கேற்ற இனிய நண்பர்களாகக் கொண்டு அவைகளுடன் ஓடி ஆடி விளையாடுவான்.

நமது சுதந்திரத் தியாகியாகிய வில்லியம்டெல் வில்வித்தையில் பேர்போன மகா அதி சமர்த்தன். குறி தப்பாமல் எய்வதில் குவலயத்தில் ஒப்பாருமில்லான். அன்பு, அடக்கம் நிரம்பிய அஞ்சா நெஞ்சன். மானமே பெரிதெனக் கொள்ளும் மாண்பு மிக்கான். அவனது புகழ் அந்நாடெங்கும் இன்றளவும் பரவியிருக்கின்றது.

*　　*　　*　　*　　*

ஒருநாள் மாலை ஐந்து மணி இருக்கும். சுவிட்ஜர்லாந்திலுள்ள ஆல்டார் நகரத்தில் எங்கும் ஜனங்கள் கும்பல் கும்பலாகக் கூடியிருந்தனர். துக்க முகத்தோடு ஒருவருக் கொருவர் மெதுவாகப் பேசிக்கொண் டிருந்தனர். “அந்தோ! இந்த ஆஸ்ட்ரியரின் கொடுமை பொறுக்க முடியவில்லையே” என்று சொல்லிக் கண்ணீர் வடித்தனர் சிலர். “ஐயோ! நம்மை ஆளும் இந்தக் கவர்னர் மிகக் கொடியவன்” என்று கையை நெறித்துக்

கொண்டு அழுதனர் பலர். இவற்றிற்கெல்லாம் காரணமென்ன வென்பதைப் பின்வரும் சம்பவங்களால் அறிவோம். கடைத் தெருவின் மத்தியில் ஓர் கம்பம் நாட்டப்பட்டிருந்தது. அதன் மேல் முனையில் ஓர் ஆஸ்டிரிய தொப்பி தொங்கவிடப் பட்டிருந்தது. அதன் பக்கவில் ஜெஸ்லர்............என்ற ஆஸ்டிரிய கவர்னர் ஓர் அழகிய புரவியில் அமர்ந்திருந்தான். அவனைச் சுற்றிலும் ஈட்டிகள் பிடித்த போர் வீரர்கள் பலர் நின்றுகொண்டிருந்தனர். கடைவீதி வழியாகச் செல்லும் ஜனங்கள் அக் கம்பத்தின் அண்மையில் நெருங்கி ஆஸ்டிரிய தொப்பிக்கு மண்டியிட்டுச் சலாம் செய்து சென்றனர். அதுவே அக் கொடிய கவர்னரின் ஆக்கினையாகும். மானமுள்ள மக்கள் அவ் விழிதொழிலுக்கு ஒருப்படாராயின் போர் வீரர்களின் ஈட்டி முனைக்கு இரைதான். இவ்விதமாக நாழிகை பல செல்ல, வில்லியம் தன்னருமை மகனைக் கையில் பிடித்துக்கொண்டு அவ் வீதிவழியாக வந்தான். கம்பத்தையும் அருகில் நிற்கும் கவர்னரையுங் கண்டான். அவைகளை லக்ஷியம் செய்யாமல் சென்றான். அதைக் கண்ட கவர்னருக்கு அடக்கமுடியாத கோபம் பிறந்தது. அவன் தனது உரத்த குரலில் "அடே சுவிட்ஜர்லாந்தின் அடிமை நாயே" எனது கட்டளை என்ன வென்பது உனக்குத் தெரியாதா? அங்ஙனமாயின் "கம்பத்தின் முன் பணிந்து வேண்டிக்கொள்" என்றான். அப்போது வில்லியம் தனது விரிந்த மார்பையும் திரண்ட தோளையும் திருப்பிக் காட்டி, அசையாது நின்றுகொண்டு "ஆண்டவனொருவனுக்கே என் முடி இறைஞ்சும்" என்று அஞ்சாது கூறினன். கவர்னராகிய ஜெஸ்லர் என்பவன் வெகுண்டெழுந்து "அடிமை நாயைப் பிடியுங்கள்" என்று தன் போர் வீரர்களுக்குக் கட்டளையிட்டான். அப்பொழுது வில்லியம் தன்பாலணுகும் வீரரைக் கையமர்த்தி, ஜெஸ்லரை நோக்கிக் கவர்னரே! சற்றுப் பொறுங்கள் என்று சமாதானம் கூறினன். ஆஹா! அவன் கூறிய வீர மொழிகளைப் போன்று எமது "பாரதி"யார் அழகாகப் பாடுவதை ஈண்டெடுத்துத் தருகிறேன்.

# ஆசிரியர் குறிப்புகள்.

## தமிழ் மாகாண மகாநாடு

"நமது தமிழ் நாட்டுத் தேசிய விழா, சமீபத்தில் நடக்கப் போகிறது; இதோ நாளைக்கு நடக்கப் போகிறது; நாளை மறு நாள் நடக்கப் போகிறது; தலைவரவர்களுடைய வருகைக்காக மகாநாட்டை ஒத்தி வைத்திருக்கிறார்கள்" என்று பல விதமான பேச்சுக்கள் நடந்துகொண்டிருந்தன. தமிழ் நாட்டுத் தலைவர்களை வாட்டிக்கொண்டிருக்கும் துவேஷம் கொழுந்துவிட்டெரிய ஆரம்பித்தது. தமிழ் நாட்டிலுள்ள தலைவர்களில் எவர் தலைமை வகித்தாலும் பிடிக்காத நிலைமையில் அவ்வளவு வேற்றுமை ஜ்வாலை தலைவர்களிடம் வீசிக்கொண் டிருந்தபடியால் இருக்கிறபடியால், வேறு மாகாணத்திலிருந்து ஒரு தலைவரை அழைக்கவேண்டிய அவஸியம் ஏற்பட்டு விட்டது. என்னே தமிழ் நாட்டுத் தலைவர்களின் உடும்புப் பிடிவாதம்! நாடு கெட்டழிந்தாலும் தங்களுடைய கௌரவம் உயர்ந்தால் சரி என்ற கேவலமான மனப் போக்கு நம் தலைவர்களைப் பிடித்துக்கொண்டு ஆட்டி வருகிறது. அயல் மாகாணங்களிலிருந்து வரும் தலைவர்களை நாம் மறுக்கவில்லை, ஆனால் அவரை அன்புடன் வரவேற்கிறோம். ஒற்றுமையால் அன்பால் அழைப்பதை எவர் தடுக்கப்போகிறார்? வேற்றுமை விஷத்தால் மனமே மாறுபட்டுக் கசந்து சீர்கெட்ட நிலைமையிலிருக்கும் பொழுது வேறொருவரை அழைப்பது தமிழருக்கு எவ்வளவு அவமானம்!

இந்தியச்சட்டசபைத் தலைவரின் சகோதரரும் பார்டோலி வீரருமான சர்தார் படேலைத் தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொள்ளவே அவரும் ஒப்புக்கொண்டுவிட்டார். அப்பால் அவர் தமிழ்

நாட்டின் நிலைமையைச் சற்று அறிந்துகொண்ட பிறகு, தலைமைப் பதவியைத் தான் தாங்கி நடத்த முடியாதென்று உதறித் தள்ளி விட்டார். பின்பு எப்படியோ பலவிதமாய்க் கூறியதால், அவரும் தேசத்தின் அடிமை நிலையை உணர்ந்து கடைசியில் இணங்கி விட்டார்.

ஆகவே சர்தார் வல்லபாய் படேல் தமிழ் நாட்டிற்கு வந்தார்; வேதாரண்யம் சென்றார். சென்ற மீ 31-ம் உ யன்றும் இம் மீ 1-உ யன்றும் 33-வது தமிழ் மாகாண மகாநாட்டில் அக்ராசனம் வகித்து நடத்தினர். பல உயரிய தீர்மானங்கள் எப்பொழுதும்போல் நிறைவேற்றப்பட்டன. பூரண சுயேச்சைத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. காகிதக் தீர்மானங்கள் வழக்கம்போல் வெகு அழகாய் வர்ணிக்கப்பட்டுத் தீர்மானிக்கப் பெற்றன. ஆனல் காரியத்தில் செய்ய வேண்டுமல்லவா? தலைவர் சர்தார் படேலும் தமிழ் நாட்டிலுள்ள சில முக்கிய பட்டினங்களுக்குச் சென்று, அருமைப் பிரசங்கங்களை ஆவேசத்துடன் புரிந்து நாட்டுக்குச் செய்யவேண்டிய தன் கடமையை அவர் செய்துவிட்டுச் சென்றார். அவர் உறுதியான தொண்டர், உண்மைத் தேசாபிமானி; காரியக்காரர். பார்டோலியைப் பக்குவமாய்ப் பண்படுத்தி அரசாங்கத்துடன் சத்தியாக்கிரகப் போர் தொடுக்கச் செய்த தீரர். தமிழ் நாட்டுத் தலைவர்களுடைய பாழுங் குறைகளால் துவேஷத்தால் ஒற்றுமை யின்மையால் தமிழ் நாட்டில் ஏற்பட்ட சச்சரவுகளுக்கு ஒற்றுமையைத் தவிர்த்து அவர் வேறு என்ன சொல்லுவார்?

1921, 1922-ம் வருடங்களில் தேசியத்தைத் தெய்வமாகக் கொண்டாடிய காலத்தில் காங்கிரஸுக்கு இருந்த கௌரவத்தை, தேசிய ஒற்றுமையை, தேசிய வன்மையை இனி நாம் எப்பொழுது காணப்போகிறோம் என்று மிக, வருந்துகிறோம். "மலடி அறிவாளோ பிரசவ வேதனையை?" அந் நன்னாட்களில் ஊர் ஊராய்ச் சுற்றித் திரிந்து தேசியப் பிரச்சாரம் செய்து நாட்டுத் தொண்டு செய்தவர்களுக்கல்லவோ வருத்தம் தெரியும்?

அயல் மாகாணங்களைப் பற்றிப் பேச வரவில்லை. தமிழ் நாட்டில் தேசீயம் எந்நிலையில் இருக்கிறது? தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியின் நாடியை அறிந்தவர்களுக் கல்லவோ தெரியும் உண்மை நிலை? காகிதத் தீர்மானங்களைக்கொண்டு இனி என்ன செய்யப் போகிறார்கள்? கிராமக் காங்கிரஸ் சபைகள் எங்கே? தாலுகா சபைகள் எங்கே? ஜில்லாச் சபைகள் எங்கே? ஊக்கமும் உற்சாகமும் உண்மையும் உள்ள தேசாபிமானிகளும் தொண்டர்களும் முன்வந்து நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டுகிறோம். தேச வாலிபர்கள் முன்வந்தாலல்லாது இனி எக்காரியமும் செம்மையாய் நடக்காதென்று எச்சரிக்கிறோம். இதற்கு இன்று உலகத்தில் நடைபெறும் பல சம்பவங்களை ஒட்டிய பற்பல உதாரணங்கள் கூறலாம். இந்திய வாலிபர்களே, பாரத தேசத்தின் விடுதலை உங்கள் வசமே இருக்கிறதென்பதை உணர்ந்து எழுந்துவந்து ஒற்றுமையுடன் நாட்டிற்காக உழையுங்கள்.

## ஸ்ரீமாந் யதீந்திரநாத் தாஸரது அரும் பெருந் தியாகம்

திருவாளர் யதீந்திர தாஸரை நினைக்க நினைக்க மெய் சிலிர்க்கின்றது; கண்ணீர் வடிகின்றது; உள்ளம் உருகுகின்றது; மூளை கலங்குகின்றது; ஊனையும் எலும்பையும் தாண்டி அப்பாலிருக்கும் மூளையே உருகுகின்றது; என்ன எப்படி எழுதுவதென்று தோன்றவில்லை; எழுதுகோல் எதையும் எழுதாது அப்படியே அசைவற்று நிற்கின்றது. யதீந்திர தாஸரது ஒப்பு உயர்வு அற்ற தியாகத்தைப் பற்றி எழும்பும் உணர்ச்சிகளைக் கேவலம் வார்த்தைகளால் உள்ளபடி மொழி பெயர்த்து அற்பமான எழுத்துக்களால் எவ்விதம் எழுதுவது! முடியாது, முடியாது!

அரும் பெருந் தியாகி—வாலிப வயிரம்—சுதந்திர சுத்த வீரர்—உயரிய அரிய தேசாபிமான சிரோன்மணி—ஊக்கமும் உறுதியும் கொண்ட உத்தமத் தொண்டர்தொண்டன்—இந்தியாவின் உயரிய பூஷணம்—தேவி பாரதியின் உண்மைப் புதல்வர்—யதீந்திர நாத் தாஸ், 63 நாட்கள் அன்ன ஆகாரம் அருந்

தாது சுதந்திரத்திற்காக உயிர் நீத்த சங்கதி, இமயம் முதல் குமரியீருகவும், பெலுஜிஸ்தானம் முதல் அஸ்ஸாமின் அந்தம் வரையும் நமது நாட்டில் மட்டுமன்று, கடல் கடந்து அன்னிய அயல் நாடுகளிலுங் கூடப் பேராச்சரியத்தையும், பெரும் பேரு ணர்ச்சியையும், இந்திய சர்க்கார்மீது பெருந் துவேஷத்தையும் உண்டாக்கி யிருக்கிறது. கனவிலேயுங்கூடக் காணவொண்ணுத, நினைக்கவொண்ணுத அவரது அவ்வளவு அரிய பெரிய தியாகத் தால் இந்தியாவுக்குப் புத்துணர்ச்சியும் புத்துயிரும் உண்டாகித் ததும்பிக்கொண் டிருக்கிறது. எங்கும் யதீந்திரருக்குப் புகழுரை கள், சர்க்காருக்கு இகழுரைகள். இந்தியாவெங்கும் யதீந்திர ருக்காக அனுதாபக் கூட்டங்களும், சர்க்கார் மீது கண்டனக் கூட் டங்களும் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்று இவரைத் தேசம் போற்றுகின்றது; உலகமே போற்றுகி ன்றது.

சிறையில் நடக்கும் அநியாயங்களைக் கண்டிப்பதற்காகவே— உண்மையாகச் சொன்னல் இந்தியரது சமத்துவத்திற்காகவும் சுதந்திரத்திற்காகவுமே சத்தியாக்கிரகத்தைக் கைக்கொண்டு, ஹட விரதம் பூண்டு, அன்ன ஆகாரமின்றி, ஐம்புலன்களையும் அடக்கி யொடுக்கி உயர் தபோதனர் போன்று தவங்கிடந்தார். அதிகாரிகள் சிறைச்சாலையில் அச்சம் உண்டாக்கிப் படாதபாடு களைப் படுத்தித் துன்புறுத்தினர்கள். கடைசியில் அவர்கள் சிறையில் பலாத்காரத்துடன் அன்னம் புகட்டினதையும் தைரி யமாய் ஏற்காது மூச்சைப் பிடித்து எதிர்த்து நின்று அவ ர்களின் அகங்காரத்தையும் அடக்கினர். அன்ன பானதிகளி ன்றி உடலில் உயிர் எத்தனை நாளைக்குத்தான் நிலைத்திருக் கும்? அவரது நெடுநாட் பட்டினி விரதத்தால் கண்கள் பார் வையற்றுக், காதுகள் கேள்வியற்று, உடல் மெலிவுற்றுச், சொர்ப் பனத்திலும் கண்டறியா அவ்வளவு அகோர அவஸ்தைகள் அடைந் தனுபவித்துப் பேச்சற்று, உடலிலுள்ள கருவிகள் அனைத் தும் பலமற்று, உடம்பு வாடி வதங்கி மரண்டு அசைவற்றுப், பாரதமாதாவின் விடுதலைக்காக உயிர் நீத்துப், புண்ணியவான்கள்

அடையும் இடமாம் எல்லாம் வல்ல இறைவனது பாதார விந்தங்களை அடைந்துவிட்டார். அவரது தியாகத்தின் பெருமையை எவ்வாறு கூறுவது! அவரைப்பற்றிச் சரியாய் எண்ண எண்ணங்கள் கிடைக்கவில்லையே! எழுத வார்த்தைகள் கிடைக்கவில்லையே!!

சமீபகாலத்திற்கு முன் அயர்லாந்து தேச சுதந்திரத்திற்காகக் கார்க் நகரின் தலைவரான (Lord Mayor) மாக்ஸ்வினி என்பார் 80 நாட்களுக்கு மேலாக உண்ணு நோன்பிருந்து, தன் தாய் நாட்டிற்காக உயிர் துறந்தார்! இப்பொழுது அயர்லாந்து, சுயராஜ்யம் பெற்றுச் சந்தோஷத்துடன் விளங்குகிறது. சத்தியாக்கிரக மேற்கொண்டு ஸ்ரீமாந் மாக்ஸ்வினியைப் பின்பற்றி நடந்த இந்தியாவின் மாக்ஸ்வினியான யதீந்திரரது ஜீவ அர்ப்பணத்தால் இந்தியாவுக்குச் சுதந்திரம் சமீபத்தில் கிட்டிவிடுமென்பதற் கையமில்லை. தன் தேசத்துக்காக உயிர் நீத்த அந்த மாக்ஸ்வினியின் சகோதரியான மேரி மாக்ஸ்வினி, யதீந்திரரது குடும்பத்திற்குக் கல்கத்தா மேயர் சென்குப்தா மூலம் அடியிற் கண்ட அனுதாபச் செய்தியை அனுப்பியிருக்கிறார்.

> தேச பக்தி வாய்ந்த இந்தியா, ஸ்ரீமாந் யதீந்திர தாஸரது மரணத்தால் அடைந்திருக்கும் துக்கத்திலும் பெருமையிலும் மாக்ஸ்வினியின் குடும்பமும் கலந்து கொள்ளுகிறது. இந்தியாவுக்குச் சுதந்திரம் வந்துவிடும்.

அயர்லாந்திலிருந்து பல சுதந்திரச் சங்கங்களும் அனுதாபத்தை அறிவித்திருக்கின்றன.

உலகத்தில் அரசாங்கங்கள் செய்த, செய்கிற அட்டூழியங்களுக்குக் கணக்குகள் வழக்குகள் இல்லை. அன்பு மதத்தை நிலைநிறுத்திய ஏசுநாதரைத் துன்புறுத்திக் கொன்றதைக் கேட்டு வருந்தாதவர் உலகத்தில் இருக்கிறார்களா? வையகமே உச்சிமேற்கொள்ளவேண்டிய அவ்வளவு பெரிய அறிஞரான சாக்ரட்டீஸ் என்பவரை விஷம் கொடுத்து அநியாயமாய்க் கட்டாயப்படுத்திக்

குடிக்கச்செய்து கொன்றஅரசாங்கத்தின் முட்டாள் தனத்தை என்னென்போம்! இதுபோல் பற்பல பெரியார்களைப் பல அரசாங்கங்கள் படுத்திய பெரும் பாடுகளையும், புரிந்த குரூரச் செய்கைகளையும் சொல்லி முடியாது.

ஸ்ரீமாந் பங்கிம் பீஹாரி தாஸரின் புதல்வரும், வங்காளத்தில் முன்ஸீப்பாயிருந்து காலஞ்சென்ற ஸ்ரீமாந் மஹேந்திரநாத் தாஸரின் பேரனுமாவர் நமது யதீந்திர நாதர். 1904-ம் ஹூத்திலே பிறந்து, 1920-ம் ஹூத்திலே மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறி, 1921-ம் ஹூத்திலே ஒத்துழையாமை யியக்கம் காட்டுத்திப்போன்று தேசமெங்கும் பற்றிப் பரவிக்கொண்டிருந்தபொழுது, நாட்டுப் பற்றில் நாட்டமிகக் கொண்டு குதித்தெழுந்து, தான் படித்துக்கொண்டு வந்த கல்லூரியை உடனே விட்டு விலகி, வங்காளத்தில் அப்பொழுது வெள்ளத்தால் உண்டான கஷ்டங்களுக்குப் பற்பல இடங்களுக்குச் சென்று வெள்ளக் கஷ்ட நிவாரண வேலைகளைச் செய்தார். பின்பு சாத்வீகச் சட்ட மறுப்பில் ஈடுபட்டு வேலை செய்யவே அதுமுதல் அரசாங்கத்தின் தண்டனைக்கு ஆளானர். சிறைக்குச் செல்லச் செல்ல, தேசத்தொண்டு செய்யச் செய்ய இவருள்ளே அடங்கிக் கிடந்த தேசபக்தி ஜ்வலிக்க ஆரம்பித்தது. 1925-ம் ஹூத்தில 23 தினங்கள் உண்ணாவிரதமிருந்து தனது சாத்வீகப் போரால் சிறைச்சாலைத் தலைவரது கர்வத்தை அடக்கினர். பல தருணங்களில் தேசப்பணி ஆற்றியிருக்கிறார். லாகூர்ச் சதிவழக்குச் சம்பந்தமாய்ச் சென்ற ஜூன்மீ 14-ம்வ இவரைக் கைது செய்து விசாரணைக்காக லாகூருக்குக் கொண்டுபோய் லாகூர்ச் சிறைச்சாலையில் வைத்திருந்தார்கள். அப்பால் அங்கிருந்துதான் இம் மஹா தியாக விரதத்தைத் துவக்கிப் பரிபூரண தசையை அடைந்திருக்கிறார்.

யதீந்திர நாத் தாஸர் தேசத் தொண்டிற்காகவே பிறந்தார்; தேசத் தொண்டு செய்துகொண்டே இருந்தார்; இப்பொழுது தேசத் தொண்டு செய்துகொண்டே இறந்தார். இவரது நினைப்புகளும், பேச்சுகளும், செய்கைகளும் தேசத்தைப் பற்றியதே.

இவர், தியாக வாழ்வால்—வீரச் செய்கையால், வாலிபர்களுக்கு ஒரு பெரிய பாடமாகவும், ஒப்புயர்வற்ற உதாரணமாகவும், முன்னேடியாகவும், தேசாபிமானிகளுக்கு வழிகாட்டியாகவும், தொண்டர்களுக்குக் குருவாகவும், சத்தியாக்கிரகிகளுக்குச் சத்தியாக்கிரக தளகர்த்தராகவும், இந்திய மக்கள் அனைவருக்கும் ஒரு மேலான தனிப் பெருந் தொண்டராகவும், மூவாசை யற்ற தியாகியாகவும், உலகத்திற்கே ஒரு விடுதலை வீரராகவும் விளங்குகிறார். ஆனால் இந்திய ஏகாதிபத்திய ஆட்சிக்கோ குற்றவாளியாகவும் விளங்கினார். "காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் நிறம்" என்பதைப்போன்று நமது அரசாங்கத்திற்குத் தெரிகிறது. வாத நோய்க்கு மருந்துண்டு, பிடிவாத நோய்க்கு மருந்துண்டோ? நமது அரசாங்கத்தின் முதலைப் பிடிவாத நோய்க்கு எந்த மருந்து எவர் கொடுக்கப்போகிறார்? இந்திய அரசாங்கம், தனது குருட்டுத்தனமான போக்கால் ஓர் உயிரைப் போக்காமல் போக்கினதற்கு, அரசாங்கங்களுக்கும், அரசர்களுக்கும், சக்கிரவர்த்திகளுக்கும் விசாரித்துத் தக்கபடி தண்டனை கொடுக்கும் அறப் பெருங் கடவுள், என்ன தண்டனைதான் கொடுக்கப் போகிறாரோ?

இவரது ஸ்தூல சரீரம் மறைந்தாலும் இவரது ஆத்ம சக்தி இன்று ஒவ்வொரு இந்தியனுடைய உள்ளத்திலும் மின்சார வேகத்துடன் புகுந்து ஊக்கத்தையும், தேச பக்தியையும், தியாக உணர்ச்சியையும், தொண்டில் வெறியையும் வேகமாய் உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. முக்கியமாய் இந்திய வாலிபர்களுக்கு ஒருவகைப் புத்துணர்ச்சியைக் கிளப்பிக் கொண்டிருக்கிறது. இக் காலத்தில் இந்தியாவுக்கு உபயோகமற்ற வெறும் பேச்சுத் தலைவர்கள் வேண்டியதில்லையென்பதற்கு யதீந்திர நாதரது ஜீவியம் இன்று உதாரணமாய் இலங்குகின்றது. போலித் தலைவர்களையும், சுயநலப் பேய்பிடித்த தலைவர்களையும், வேஷத் தலைவர்களையும் இவரது ஒப்பற்ற தியாகம் பண்படுத்துமாக. ஆனால், உண்மையான தேசத் தொண்டர்களுக்கும், உறுதியான இச்சா சேவகர்களுக்கும், சேவையையே ஜீவித நோக்கமாகக் கொண்டவர்களுக்கும் நவ நவசக்தியை மென்மேலும் உண்டாக்குமாக.

198516

பாரதப் போருக்காக—அறப் போருக்காக அரவான் என்பவனை உயிருடன் பலியாக அன்று பாரத நாடு அளித்தது. 25 வயதுள்ள ஒரு வாலிபரை—பல இன்பங்களை அனுபவிக்க வேண்டியவரை—யதீந்திர நாத் தாஸரை நாட்டின் விடுதலைக்காக வங்காளமோ இன்று அளித்திருக்கிறது. இந்திய தேச உரிமைப் போராட்டத்தில், சத்தியாக்கிரகக் கொடியில் அரும்பிய யதீந்திர நாத் தாஸ் என்னும் தியாக நறு மலரைச், சுதந்திர தேவியின் முடியில் வங்காளம் இப்பொழுது சூட்டியிருக்கிறது.

இந்திய சகோதரர்களே! இன்று ஒருவருடைய அபார அருஞ் செய்கையால் நாட்டில் எவ்வாறு நவீன உணர்ச்சி உண்டாகி யிருக்கிறது? ஒருவருடைய தியாகம், அடக்கு முறைகளால் அட்டகாசம் செய்து கொண்டிருக்கும் அரசாங்கத்தை எவ்வாறு ஆட்டிக் கொண்டிருக்கிறது? தளரா அரசாங்க அடிமைச் சங்கிலிகளை அறுத்தெறிந்து நம் நாடு சுதந்திரமும், சமத்துவமும், சகோதரத்துவமும், செல்வாக்கும், செல்வமும் ஏனைய நன்மைகளும் அடைந்து வேறு பல அயல நாட்டாருடன் கௌரவமாய் இருக்க எத்தனையோ பேர் தியாகம் செய்ய முன்வரல் வேண்டும். யதீந்திரர் யார் பொருட்டுத் தனது ஜீவியத்தையே வெறுத்துத் தனது உயிரையே துறந்தார்? இந்தியாவின் பொருட்டென்பதையே ஒவ்வொரு இந்தியரும் உன்னி உன்னி உளம் குழைந்து உருகி உழைத்து உழைத்துச் சுதந்திரம் பெறுங்கள். எதன் பொருட்டு யதீந்திரர், தன் ஆவியைக் கொடுத்தாரோ, அதை நாம் அடைவதற்கு அரும் பாடுபடுவதே நமது கடமையாகும். சகோதர சகோதரிகளே! எழுங்கள்; முன் வாருங்கள்; ஒற்றுமையுடன் ஒன்று கூடுங்கள்; வேலை செய்யுங்கள்; சாத்வீகமாய்ப் போராடுங்கள்; நாட்டின் விடுதலையைச் சீக்கிரத்தில் பெறுங்கள்.

பிரிய மிக்க இந்திய இளைஞர்களே! இந்திய சரித்திரம் ஆதியிலிருந்து சரியாய் எழுதப்படவில்லை யென்று சிலர் குறை சொல்லுகிறார்கள். உண்மைதான். புராதன காலத்தில் எந்தத் தேசம் யுத்த தர்மத்தைக் கைக்கொண்டிருந்தது? போரில்

நிராயுதபாணிகளுக்கு இம்சையுண்டா? ஆ! அவர்களை எவ்வாறு எதிரிகள் காப்பாற்றினார்கள்? ஒவ்வொரு தேச சரித்திரத்திலும் கொள்ளைகளும், கொலைகளும், சச்சரவுகளும், சண்டைகளும் தவிர்த்து வேறென்ன இருக்கிறது? நமது பண்டைச் சரித்திரம், ஞான சரித்திரங்களைப் பற்றியும், தர்ம அரசர்களைப் பற்றியும், தியாக மூர்த்திகளைப் பற்றியும் மட்டுமே கூறுகின்றது. பழந் தமிழ் மக்களது மறா வீரத்தைப்பற்றி விவரிக்கத் தேவையில்லை. மத்திய காலத்தில் ராணு பிரதாப ஸிம்ஹன், கும்ப மகா ராணு முதலிய ரஜபுத்திரர்கள் எவ்வாறு வீரத்துடன் இருந்தார்கள். ரஜபுத்திர கோமளங்கள் எவ்வளவு தீரத்துடன் வாழ்ந்து வந்தார்கள் என்பதை அறிகிறோம்.

இப்பொழுது இந்தியா அடிமையாகிவிட்டது. பாரத மக்களின் சமத்துவத்திற்காகவும் சுதந்திரத்திற்காகவும் யதீந்திரநாத் தாஸ், தனது உயிரையே சுதந்திர தேவதைக்குச் சமர்ப்பித்தார். யதீந்திரரது ஆத்ம சக்தி உங்களுக்குப் பாய்ந்திருக்கிறது. யதீந்திரரது நாட்டுப் பற்று, தியாகம், அவரது அருங்குணங்கள் அனைத்தையும் அடைந்து அவரது ஆவேசம் பெற்று இந்தியாவை அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்க, எத்தனையோ கோடிக் கணக்கான யதீந்திரர்கள் உண்டாகி முன்வந்து தீவிரமாய் வேலை செய்ய ஓடிவாருங்கள்.

இன்று இளந் துருக்கியர்கள், சைனாவின் வாலிபர்கள், ஜப்பானிய யுவர்கள், ஜெர்மன் யௌவனர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்? இக்கால வாலிபர்களே உலகத்தின் ஒவ்வொரு தேசத்திலும் அரிய தியாகங்களைச் செய்து நாட்டு முன்னேற்றத்திற்காக நன்கு உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தியாவின் விடுதலை உங்கள் வேலையிலேயே அடங்கி யிருக்கிறது. இந்தியா இந்தியர்களுடையது. இந்தியர்களுக்காக ஆளப்படவேண்டும். இந்தியர்களால் ஆளப்படவேண்டும். ஆகையால் இந்தியா இந்தியர்களுக்காக இந்தியர்களால் ஆளப்படவேண்டும் என்பதை உணர்ந்து உறுதியுடன் உழையுங்கள். உலகம் உள்ளளவும் இந்தியா உள்ள

ளவும் யதீந்திரரது திருநாமம் பிரகாசித்துக்கொண்டேயிருக்கும். இந்தியாவின் விடுதலைச் சரித்திரம் எழுதப்படுங் காலத்தில், இவரது வரலாறு ஓர் அத்தியாயமாகவே அமையும். உலகத்தின் சுதந்திர சரித்திரத்தில் இவரது வாழ்வும் தியாகமும் உயரிய இடம்பெறும். யதீந்திரநாத் தாஸ் என்ற பெயருக்கு வீரம், தீரம், தியாகம் என்ற அருத்தங்கள் இனிமேல் அகராதிகளிலும், அபிதான சிந்தாமணிகளிலும் சமீபகாலத்தில் காணப்படும்.

தேசீயம் தீவிரமாய்த் தோன்றிய காலமுதல், மஹாத்மாவால் அடிகோலப்பட்ட ஒத்துழையாமையில் இறங்கித் தனது சுய நலம் அனைத்தையும் விடுத்து, அல்லும் பகலும் தனது தாய் நாட்டின் நன்மைக்காகவே உழைத்து, தனக்காகவல்லாது பிறர்க்காகவே வாழ்ந்து கடைசியில் சுதந்திரத்திற்காகத் தனது இனிய அரிய உயிரையே சந்தோஷத்துடன் தியாகம் செய்த பாரத மணிக்குத் தேச மக்கள் என்ன செய்யப் போகிறார்களென்று தெரியவில்லை அவர் உயிர் துறந்த செப்டம்பர்மீ 13உ-யை இந்திய தேசமெங்கும் இந்தியர்கள், உலகத்தின் எப் பாகங்களி லிருப்பினும் அப் பாகங்களிலெல்லாம் அவருடைய ஞாபகத் திருநாளாக—தேசீயச் சின்னமாக—பெருநாளாகக் கொண்டாட வேண்டும். பல பிரதான பட்டினங்களிலுள்ள முக்கிய இடங்களில் இவரது உருவச்சிலைகள் நிறுவப்பட வேண்டும். நாடெங்கும் அவர் பெயரால் புஸ்தக சாலைகள் திறக்கப்பட வேண்டும். பல பொதுஸ்தாபனங்களுக்கு அவரது பெயரையே இட வேண்டும். பல நகரங்களில் உத்தியான வனங்கள், வீதிகள், பொதுக் கட்டிடங்கள் முதலியவைகளுக்கு அவரது பெயரையே நாட்ட வேண்டும். பல தேசீய ஸ்தாபனங்களுக்கு அவர் பெயர் என்றும் நிலவும் பொருட்டும், நமது பின்னோர்களுக்குத் தியாகத்தில் ஆவேசம் உண்டாகும் பொருட்டும் அவர் பெயரையே கொடுத்து வழங்கலாம் ஹிந்துஸ்தான் தொண்டர்படைக்கு அவர் பெயரைச் சூட்டலாமல்லவா? அவரது படங்கள் நகரசபை மண்டபங்களிலும், மற்றும் பல பொது ஸ்தாபனங்களிலும் வைக்கப்பட வேண்டும். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலுமட்டுமல்ல ஒவ்வொரு மாகாணக் கமிட்டியிலும் அவருக்கு ஏதே

னும் தக்கபடி ஞாபகச் சின்னங்கள் உண்டாக்கி அவர் பெயரை—தியாகத்தை நாட்டில் மறவாதிருக்கும்படி செய்யலாம். இங்கு ஒவ்வொன்றாய்ச் சொல்லமுடியாத எத்தனையோ புதிய வகைகளில் அவர் திருநாமதேயத்தைப் பெருமைப்படுத்தி நாட்டில் தேசபக்தியை வளர்க்கலாம்.

ஆ! இந்தியாவின் அருந்தவப் புத்திரரே, நாட்டின் செல்வமே, இந்தியாவின் மாக்ஸ்வினியே, தியாக ரத்தினமே, சாத்வீக சாகரமே, வீரக் குன்றமே, கர்ம தீர திலகமே. சத்தியாக்கிரக சிரேஷ்டரே, தாங்கள் இங்கு ஸ்தூல உலகில் மறைந்துவிட்டாலும் சூக்கும உலகிலிருந்துகூடத் தேசத்துக்கு நன்மைகள் செய்து கொண்டிருப்பீர்களென்றே நம்புகிறோம்.

தன் நாட்டின் மீட்சிக்காக மகிழ்ச்சியுடன் தனது பிரிய உயிரையே கொடுத்த தியாகியை—உத்தம புத்திர சிகாமணியை ததீசி முனிவர் போன்ற யதீந்திர மகரிஷியைப் பெற்று அன்பாக வளர்த்து நாட்டின் பணிக்காகத் தத்தம் செய்த தாய் தந்தையர்களின் பாக்கியமே பெரும் பாக்கியம்; அவருடன் உடன் பிறந்தவர்களின் சிலாக்கியமே பெரும் சிலாக்கியம்; அவர் தோன்றிய குடும்பத்தின் பெருமையே பெருமை. யதீந்திரரது தந்தையார் ஸ்ரீமான் பங்கிம் பிஹாரி தாஸ், தனது மகனது சவம் மயானத்தில் தீ மூட்டப்படும் பொழுது, அவர் பரிதவித்து உருக்கத்துடன் தாரை தாரையாய்க் கண்ணீரைத் துளித்து அனுப்பிய செய்தி, தேசத் துரோகம் செய்து அயல் நாட்டாருக்கு நமது தாய் நாட்டைக் காட்டிக் கொடுத்த நமது முன்னோர்களுக்கு ஒரு பெரிய கண்டனமாகவும், நமக்கும் நமது பின்னோர்களுக்கும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றி—அகில இந்தியாவின் ஒற்றுமையைப் பற்றி ஒரு நல்லுபதேசமாகவும் இருக்கிறது. நமது அனுதாபத்தை யதீந்திர நாத் தாஸரது குடும்பத்தாரனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

யதீந்திரரது தியாக உணர்ச்சி, ஆத்ம சக்தி உலகமுள்ளளவும் நிலைத்து நின்று பெருகி வளர்வதாக. அவருடைய ஆத்மாவுக்குச் சாந்தி உண்டாக முழுமுதலை முழு மனதுடன் பிரார்த்திக்கிறோம்.

## சாரதாவின் பால்ய விவாகத்தடை மசோதா.

வெள்ளைக்காரர், ஜாதி அகங்காரமும், ராணுவத் திமிரும், செல்வச் செருக்கும், நிற உயர்வும், ஏகாதிபத்திய இறுமாப்பும் கொண்டிருக்கிறது போல், இந்தியாவில் வைதீகர்கள், ஜாதி அகப்பாவமும் பிறப்பால் கர்வமும் வைதீகத் திமிரும் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவின் முன்னேற்றத்தை இத் தேசத்திலுள்ள வைதீகர்கள் பல வழிகளில் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தேசாபி விருத்திக்கான காரியங்கள்—சமூக சீர்திருத்த சம்பந்தமான விஷயங்கள் ஏதேனும் எங்கேனும் ஆரம்பிக்கப்பட்டால், "ஜாதி போச்சுது, மதம் போச்சுது" என்று இவர்கள் வீண் கூக்குரல் போட்டு அசட்டுப் பிடிவாதம் செய்கிறார்கள். கவர்னர்ஜெனரல் லார்டு வில்லியம் பென்டிங் சதி என்னும் உடன் கட்டை யேறும் மஹா கொடிய வழக்கத்தை நிறுத்தியதற்கு, இந்தியர்கள் என்றும் சர்க்காருக்கு வந்தனம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்பொழுதும் வைதீகர்கள் போட்ட கூச்சல்கள் எல்லாம் விழலுக்கிறைத்த நீராயின.

ஸ்ரீமதி அம்மை முத்துலட்சுமியார் கொண்டுவந்த மசோதாவுக்கு, வைதீகர்கள் தங்களாலான மட்டும் விரோதமாய்ப் போராடியதுடன், கோவிலுக்குத் தாசிகள் அவசியம் வேண்டுமெனவும் வற்புறுத்தினார்கள். தாசிகள் வேண்டியது யாருக்கு? எதற்கு? ஏனோ? இதிலும் வைதீகர்களுக்கு அபஜெயமே கிடைத்தது. வைதீகர்களால் நாட்டுக்கு விளையும் கேடுகளில் எதைச் சொல்லுவது? எவ்வளவுதான் கூறுவது? சமத்துவத்தை நிலை நாட்டி, வைதீகர் கொடுமைகளை நாசப்படுத்தவே புத்தபிரான் முற்காலத்தில் அவதரித்தார் என்று சொல்லுவது குற்றமாகாது ஏசுநாதர், வைதீகர் தந்திரங்களை வெறுத்து அவைகளுக்கு விரோதமாகப் பேசியதால், அவர் மீது துவேஷங்கொண்டு சங்கடப்படுத்திச் சிலுவையில் அவரை அறைந்து கொன்றவர்கள் அக்காலத்து வைதீகர்கள் என்பதை மறந்து போகாதீர்கள். சமூக உயர்வு தாழ்வு சச்சரவுகளுக்கும் வேற்றுமைகளுக்கும் மதச் சண்டைகளுக்கும் எப்பொழுதும் வைதீகர்களே காரணமென்று சொல்லுவதை எவர் மறுக்கப் போகிறார்கள்?

உலகம் அடிக்கடி அதி தீவிரமாய் மாறிக்கொண்டே யிருக்கிறது. நிலையே மரணம்! அசைவே அபிவிருத்தி!! மாற்றமே வளர்ச்சி!!! காலத்திற்குத் தக்கபடி, போக்கை மாற்றித் தற்கால உலகத்திற்குத் தகுந்தபடி நடக்கும் தேசங்களே முன்னேறிக்கொண்டிருக்கின்றன. கால இயலைக் கவனித்து அனுசரித்து நடப்பதே ஒவ்வொருவருக்கும் கடமையாகும். உலக சரித்திரமே இதற்கு இப்பொழுது சாட்சியாக நம்முன் நிற்கிறது.

எத்தனையோ கெட்ட வேண்டாப் பழக்க வழக்கங்களும் கூடா ஒழுக்கங்களும் ஹிந்து சமூகத்தையே நாசமாக்கிக்கொண்டு வருகின்றன. அவைகளில் முக்கியமாகப் பால்ய விவாகமும் ஒன்று. கலவியே இன்னதென்றறியா அதி இளம் பெண்களுக்கும், பள்ளிக்கூடத்துச் சிறுர்களுக்கும், தாய் தந்தையர் மடிமீதிருந்து தவழ்ந்து விளையாடும் பாலர்களுக்கும், பால் மணம் அருத பச்சைப் பசுங் குழந்தைகளுக்குங்கூட இப்பொழுது கல்யாணம் செய்துவைக்கிறுர்கள்! உடல்வலி, மனேசக்தி பெருத சின்னஞ் சிறுமிகளுக்கும் சிறு சிறு பையன்களுக்கும் விவாகம் செய்வித்து, குடும்பக் கவலைகளே இன்னதென்று அறியா அவர்கள்மீது குடும்ப பாரத்தை ஏற்றுவதால், பலவித தீமைகள் உண்டாகின்றன என்பதை அறிவுடை மக்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றுர்கள். நம் நாட்டில் பால்ய விவாகத்தால் விதவைகள் பெருகிக்கொண் டிருக்கிறுர்கள். விபசாரம், சிசுவதை, கட்டாயச் சேர்க்கை முதலிய பெருங் கொடுங் கூடா ஒழுக்கக் கேடுகள் வளர்ந்துகொண்டே வருகின்றன. இத் துர்வழக்கம் பாரத நாட்டையே பாழ்படுத்திக் கொண்டிருக்கிறதை அறியாமல், ஜாதியின் பெயராலும், மதத்தின்—சாஸ்திரத்தின் பெயராலும், வழக்கத்தின் பெயராலும் பால்ய விவாகத்தைப் போற்றி அனுசரித்து வருவது என்ன கொடுமை! எவ்வளவு பேதமை.!!

இதைப்பற்றி நம் நாட்டில் பேசாத உண்மைப் பத்திரிகைகளே கிடையாது, இதைப்பற்றிப் பேசாத சீர்திருத்தக்காரர்

களே கிடையாது. எத்தனையோ மனிதர்கள் எவ்வளவோ எவ் விதமோ எண்ணுகிறார்கள், பேசுகிறார்கள், எழுதுகிறார்கள்? ஆனால் அவர்களுக்கு அவைகளைச் செய்ய ஆற்றல் வேண்டுமே? அஞ்சா நெஞ்சம் வேண்டுமே? இளமை மணக் கேடுகளை, நன்கு ஆராய்ந் துணர்ந்து, தேச நன்மையைக் கருதி அதைத் தடுக்கும்பொருட்டு இந்தியச் சட்டசபையில் திரு. ராவ்பகதூர் ஹரிவிலாச சாரதா அவர்கள் ஒரு மசோதாக் கொண்டுவந்தார். உடனே வைதீகர் களும், வைதீக வெறி, ஜாதிப் பேய்பிடித்தவர்களும், குறுகிய நோக்கங்கொண்ட சில படிப்பாளிகளும் வழக்கம்போல் கூக்குரல் போட ஆரம்பித்து, எத்தனையோ இலட்சக்கணக்கான கையொப் பங்கள் போட்டுத் தடை மனுக்கள் அனுப்பியும், எத்தனையோ விதமாய் எதிர்ப் பிரச்சாரம் செய்தும், எவ்வளவோ தந்திரங்கள் செய்தும், எவ்வளவோ தப்பான அபிப்பிராயங்களை உண்டுபண் ணியும், மே த. ராஜப்பிரதிநிதியினிடம் தூதுசென்றும் இம் மசோதாவுக்கு எவ்வளவு தீமைகள் செய்யமுடியுமோ அவ்வளவை யும் செய்தே தீர்த்தார்கள்.

இது இந்தியச் சட்டசபைக்கு விவாதத்திற்கு வந்தபொழுது, அதில் அங்கத்தினர்களாயிருந்த வைதீகர்கள், இம் மசோதாவைத் தோற்கடிக்கப் பெரும்பிரயாசை எடுத்துக்கொண்டார்கள். கடோ சியாக திரு. சாரதாவுக்குச சாதகமாகப் பரந்த நோக்கமும் பேரறி வும் சீர்திருத்த உணர்ச்சியும் பெற்றிருக்கும் 67 பேரும், பாதக மாக மனோவிசாலமற்ற குறுகிய நோக்கம் கொண்டிருக்கும் 14 பேரும் வாக்களித்தார்கள். இதை உற்று நோக்கினால் நாட்டில் இம் மசோதாவுக்கு உள்ள பேராதரவு நன்கு தெரிகிறது.

இச் சட்டத்தின்படி பையன்கள் 18 வயதிற்கு மேற்பட்டும், பெண்கள் 14 வயதிற்கு மேற்பட்டும் மணம் செய்துகொள்ள லாம். இந்தச் சட்டத்திற்கு மாறாக நடந்துகொள்பவர்களுக்கும், நடக்கும்படி செய்பவர்களுக்கும் ஒருமாதம் சிறைவாசமோ ரூ 1000 அபராதமோ அல்லது இரண்டும் சேர்ந்தோ தண்டனை யாக விதிக்கப்படும். 1930-ம் ௵ எப்ரல் ௴ முதல் உ முதல் இது அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

இம் மசோதா எவ்வளவோ ஆதரவுடன் சட்டமாகி விட்ட படியால் பாலிய விவாகத்திற்குச் சாவு மணி அடிக்கப்பட்டது. இப்பொழுது சீர்திருத்தக்காரர்கள் வெற்றிச் சங்கெடுத்து ஊதிக் கொண்டிருக்கிறார்கள். பிற்போக்கில் பிரியம்கொள்ளும் வைதீகர் களோ முக்காடிட்டு மூலையில் படுத்துக்கொண் டிருக்கிறார்கள். சீர்திருத்தமே இன்னதென் றறியா வைதீகர்களுக்கு இது நல்ல பாடமாகட்டும். இனிமேலாவது இவர்கள் இமமாதிரி விஷயங்களில் பிரவேசியா திருப்பார்களாக. இதனால் எத்தனையோ பெண்கள் இர ட்சிக்கப்படப் போகின்றார்கள். எத்தனையோ குடும்பங்கள் காக்கப் படப் போகின்றன. வரதட்சணைக் கொடுமை குறையப்போகி றது. விதவைகள் கொடுமை மறையப் போகின்றது. இந்திய சமூகத்திற்கே பெரும் நன்மை ஏற்படப்போகிறது. இந் நாட் டின் நிலை உயர்வதற்கு இன்னும் சமூகச் சீர்திருத்தச் சட்டங்கள் பல நிறைவேற்றப்படல் வேண்டும்.

இந்த மசோதா சம்பந்தமாக இந்தியச் சட்டசபையில் வாதிக் கப்பட்டபொழுது, சில பட்டம் பெற்ற தேசாபிமானிகள் ஜாதி மதவிஷயங்களில் எவ்வளவு அற்பமாய் நடந்துகொண்டார்கள்! தேசிய விஷயங்களில் சிங்கம்போற் கர்ஜிக்கும் பெரும் பெரும் பேர் பெற்ற சில தேசபக்தர்கள், சமய சமூக விஷயங்கள் வரும் பொழுதெல்லாம் பூனைமாதிரி ஓடிப் பதுங்கிக்கொள்கிறார்கள். "நான் வங்காளியல்ல, ஆனால் நான் இந்தியன்" என்ற யதீந்திரரது மணி வாசகத்தை இவர்கள் என்றுதான் கவனிப்பார்களோ? சமூக சீர்தி ருத்தங்களுக்கு எவ்வளவோ தீவிரமாய் வேலைசெய்துகொண் டிரு க்க வேண்டிய தேசாபிமானிகள், இம் மசோதா விஷயத்தில் எவ் வளவோ பிற்போக்காய் நடந்துகொண்டார்கள். இப்படிப்பட்ட தேச பக்தர்களின் மனப்போக்கை அறிந்துகொள்ள முடியவில்லை.

இம் மசோதாவை ஆதரித்த இந்தியச் சட்டசபை மெம்பர் களையும், இதைச் சட்டமாக்க அனுமதித்த இந்திய சர்க்காரை யும் மனதாரப் போற்றி, வாயார வாழ்த்தி அவர்களுக்கு வந் தனங்கள் செலுத்துகிறோம். சர்க்கார் மனப்பான்மை பலவிஷ

யங்களில் எப்படியோ இருந்தாலும், இம் மசோதா விஷயத்தில் தக்கவாறு நடந்துகொண்டதைப் பிரத்தியேகமாய்க் குறிப்பிடு கிறோம். பல பெரும் பெரும் எதிர்ப்புக்களையும் சென்ற ஒரு வருடமாகத் தைரியமாய் எதிர்த்துநின்று, ஒவ்வொன்றிற்கும் சரி யான சமாதானம் கூறி, இடைவிடாது வெகுவாய் உழைத்து, உழைத்து, இம் மசோதாவை நிறைவேற்றிவைத்துத், தேசத்துக் குத் தக்க தருணத்தில் தக்கவாறு தொண்டு செய்திருக்கும் ஸ்ரீமாந் ராவ் பஹதூர் ஹரிவிலாஸ சாரதா அவர்களுக்கு இந்தியா என் றுமே மறவாத எவ்வளவோ கடமைகளுக் குட்பட்டிருக்கிறது. அவருக்கு எல்லாப் பாக்கியங்களும் உண்டாவதாக.

## துறவி ஊ விஜயாவின் வீரம்.

இன்னொரு சங்கதி! பர்மாவில் இதென்ன அநியாயம்! இந்தி யாவின் அரசியற் கைதிகளுக்கெல்லாம் கஷ்டமா? யதீந்திர நாஸ், தியாகத்துடன் உயிர் நீத்ததைப்பற்றி எழுதிய மை, இனியும் உலர வில்லை; எழுதிய பேனாவை இனியும் கீழே வைக்கவில்லை; அவ ருக்காக அழுது வருந்திய மனம் இனியும் ஆறவில்லை; இப்பொழுது நாடெங்கும் யதீந்திர நாதர் பேச்சாயிருக்கிறது.

பொங்கி ஊ விஜயா என்னும் புத்த சந்நியாசி உண்ணா விரத மிருந்து உயிர் விட்டாரென்று கேட்டு அளப்பரிய துக்கமடைகி றோம். அவர் மேலான தேச பக்தர். ஜீவகாருண்ய மதமாம் புத்த மதத்தை அநுசரித்து, தாய் நாட்டின் விடுதலைச்சாக உழைத்து வந்தார். இராஜாங்க நிந்தனைக் குற்றம் ஏற்பட்டு, 21 மாதங்கள் கடுங் காவல் தண்டனையை அனுபவித்துவிட்டுச் சென்ற பிப்ரவரி மாதந்தான் விடுதலை அடைந்தார். இராஜாங்கத் துவேஷப் பிர சங்கம் செய்ததாக மறுபடியும் அவரைக் கைது செய்து விசாரித்து, அவருக்கு 6 வருடம் தீவாந்தர சிட்சை விதித்தனர். அப்பால் 6 வருடங்களை 3 வருடங்களாகக் குறைத்தனர். அவர் ஒரு பொங்கி ஆனபடியால், விசேஷ நாட்களில் காவி உடை உடுக்கவும், மாதத்தில் 2 நாட்கள் விரதமிருக்கவும் அனுமதி வேண்டுமெனக்

வது, அதற்குப் பதிலாக நீராவியையாவது, வாயுவைவிடக் குறைந்த பளுவுள்ள பிராண வாயுவையாவது அக் கூண்டுகளில் நிரப்பிப் பறக்கவிடுவதுண்டு. அப்படிப் பறக்கும் கூண்டுக்குப் பெலூன் (Balloon) என்று பெயர். இந்தப் பெலூனின் அடிப்புறத்தில் இயந்திரங்களை மாட்டி இஷ்டமானபடி நடத்தக்கூடியதாகச் செய்யப்பட்டால் அதுவே ஆகாய விமானமாகும். பொதுவாக வாயுவுக்கு அழுத்தும் சக்தியுண்டு. வாயு கீழ் நோக்கியும், மேல் நோக்கியும் பல பக்கங்களிலும் அழுத்தும் சக்திவாய்ந்தது. அந்த வாயு தன்னிலும் குறைந்த பளுவுள்ள புகை, நீராவி, பிராண வாயு, முதலியவற்றை மேல்நோக்கி யழுத்துவதால் அவை மேலே தள்ளப்படுகின்றன. இந்தப் பிராணவாயுவைப் பல தோற் பைகளில் நிரப்பி அந்த மீனைப்போன்ற உருளை வடிவத்திற்குள் போட்டு வைக்கிறார்கள். அந்தப் பிராணவாயு மேல்நோக்கித் தள்ளப்படும்போது அதையுள்ளடக்கிக் கொண்டுள்ள கப்பலும் மேலெழக் கூடியதாயிருக்கிறது. இலேசான பிராணவாயுவால் மிகப் பளுவான கப்பல் தூக்கப்படுவதற்கு ஓர் அளவும் உண்டு. ஆயிரம் கன அடியுள்ள பிராணவாயுவை விட அதே பரிமாணமுள்ள சாதாரண வாயு 75 பவுண் அதிகமான பளுவுடையது. இதனால் சாதாரண வாயுவினுடைய மேல்நோக்கி யழுத்தும் சக்திக்கு எவ்வளவுதூரம் உட்பட்டுச் சுயபலங்கெட்டுப் பிராணவாயு மேலே தள்ளப்படுமென்பது கவனிக்கத்தக்கது.

மற்றொரு விஷயம்: இரும்பு முதலிய உலோகங்கள் ஜலத்தில் அமிழக்கூடியவை யென்பது வெளிப்படையான விஷயம். அப்படியிருக்க மிகவும் கனத்த இரும்புக் கவசம் அல்லது செம்புக் கவசங்களினாலாகிய மரக்கலம் கடலில் மிதப்பது சர்வ சாதாரணமாயிருக்கிறது. இதற்குக் காரணமென்னவெனில், ஜலத்தில் மிதக்கும் வஸ்து ஜலத்தைவிடக் குறைந்த பளுவுடையதா யிருக்கவேண்டும். ஒரு கன அடியுள்ள பொருள் ஒரு கன அடியுள்ள ஜலத்தின் எடையைவிடக் குறைந்த எடையுடையதாயின் அது மிதக்கும். அதிக எடையுள்ளதாயின் மூழ்கிவிடும். இந்த இயற்[illegible]த்தை யனுசரித்துக் கவனிக்குமிடத்துக் கப்பலி[illegible]

வளவோ அவ்வளவு பரிமாணமுள்ள ஜலத்தின் எடையை விடக் கப்பலின் எடை குறைவாயிருப்பதனால் அது ஜலத்தின் மேல்நோக்கியழுத்தும் சக்தியினால் தள்ளப்பட்டுக் கடலில் மிதக்கின்றதென்பது தெளிவாகும்.

இந்த விதிதான் ஆகாயக் கப்பலுக்கும். ஆகாயக் கப்பலின் பரிமாணம் எவ்வளவோ அவ்வளவு பரிமாணமுள்ள வாயுவானது அக் கப்பலின் நிறையை விடக் குறைந்த நிறையுடையதாயிருக்கிறது. அதனால் கப்பல் சுயமாக வாயுமண்டலத்தில் எழும்ப முடிகிறதில்லை. ஆனால், அக் கப்பலுக்குள் அடைபட்டுக் கிடக்கும் பிராணவாயுவின் பரிமாணம் அக் கப்பலின் பரிமாணத்தைவிட அநேக மடங்கு அதிகமானதாலும், அப்பிராண வாயுவினவ்வளவு பரிமாணமுள்ள சாதாரண வாயுவின் எடையானது அக் கப்பலில் அடைபட்டிருக்கும் பிராண வாயுவின் எடையைவிடப் பன்மடங்கு அதிகமானதாலும், இன்னும் அக் கப்பலின் எடையைவிடக், கூடச் சற்று அதிக எடையுடையபடியாலும் அந்தச் சாதாரண வாயுவின் இயல்பான மேல்நோக்கி அழுத்தும் சக்தியினால் தன்னைவிடப் பன் மடங்கு குறைந்த எடையுள்ள (அடைபட்டிருக்கும்) பிராணவாயு மேலே தள்ளப்படுவதனால் அவ்வாயு தன்னையடைத்துக்கொண்டுள்ள கப்பலோடு அந்தரத்தெழும்புகிறது. ஒரு புல்லறிவாளனோடு சேர்ந்த நல்லறிவாளனும் உலகத்தாரால் புல்லறிவாளனாகவே பாவிக்கப்படுவதைப்போல ஆகாயக் கப்பலும், சாதாரண வாயுவைவிட இலேசான பிராணவாயுவைத் தனக்குள்ளடக்கிக் கொண்டிருக்கும் காரணத்தால், சாதாரண வாயுவைவிடக் குறைந்த பளுவுள்ளதைப் போல அந்தரத்தில் பறக்கின்றபடியால் இது காற்றைவிட இலேசானதென்று சொல்லப்படுகிறது. ஒரு கப்பலில் சுமார் 19 லக்ஷம் கன அடியுள்ள பிராணவாயு அடைபட்டிருக்கும். தோற்பைகளில் அடைபட்டிருக்கும் பிராணவாயு சிறுகச் சிறுக வெளிப்படக் கூடியதாயினும், மீண்டும் அப் பிராணவாயுவை யுண்டுபண்ணுவதற்கேற்ற சாதனம் அங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆகாயக் ...லுக்கு "ஜப்ளின்" என்று பெயர். ஜப்ளின் உயர எழும்புவ... வாயுவும் அதை வேண்டியபடி நடத்துவதற்கு இய

ந்திரமும் அவசியமென்று தெரிந்தது. ஜப்ளினை நடத்தும் இயந்
திரங்கள் கெட்டுவிட்டபோதிலும், அதற்குள்ளடைபட்டிருக்கும்
பிராணவாயுவிருக்கும் வரையில் அது திடீரென்று பூமியில் விழுந்து
விடமாட்டாது. ஒருசமயம் அந்தப் பிராணவாயுவெல்லாம் வெளிப்
பட்டு புதிய பிராணவாயுவை யுண்டாக்கும் சாதனமும் சீர்கெட்டு
விடுமாயின் அப்போதுதான் கப்பல் ஆபத்திலகப்பட்டதென்று
கருத நேரிடும்.

இந்த ஜப்ளினில் மற்றொரு வகையும் உண்டு. அதில் விட்டங்
களிரா. கீழ்ப்புறத்தில் இணைக்கப்படுகிற வீடு தோற்பையினின்
றுமே இணைக்கப்படுகின்றது. இதில் மிக்க ஆபத்துண்டு. எப்
படியெனில், தோற்பைகளில் வீடு இணைக்கப்படுவதால் சில சமயங்
களில் பாரம் தாங்கமுடியாமல் தோல் கிழிந்தாலும் கிழிந்துவிடு
மென்பதே. மேலும் கப்பலின் உட்புறத்தில் விட்டக் கப்பலிலுள்
ளதைப் போன்று பிராணவாயுவை யுண்டாக்கும் சாதனங்களில்
லாதபடியால், ஆங்குள்ள பிராணவாயு குறையக்குறைய இயந்திர
மும் சீர்கெட்டு விடுமாயின் கப்பல் திடீரென்று கீழே விழவேண்டிய
தேயாம். பைகளிலடைப்புண்டிருக்கும் பிராணவாயு வெளியேறு
மென்பதிலையமொன்றுமில்லை. சாதாரணமாகத் தோலில் கண்
ணிற்கசப்படாத பல்லாயிரம் சிறு சிறு துவாரங்களுண்டென்பது
மறுக்கமுடியாது. வாயுவோ எவ்வளவு சிறிய துவாரத்திலும்
நுழைந்து செல்லக்கூடியது. அதிலும் மிக நுட்பமாகிய பிராண
வாயு தோற்பைகளினின்றும் சிறுகச் சிறுக வெளியேறுமென்பதி
லாச்சரியமென்ன இருக்கிறது? மேலும் விட்டக் கப்பலில் 2000
மைல் தூரம் யாத்திரை செய்வதற்குரிய சாமக்கிரியைகள் ஏற்படுத்
தப்படுகின்றன. விட்டமல்லாத கப்பலில் அவ்வாறுசெய்ய விய
லாது. இதற்கு ஆங்காங்கு பிராணவாயுவைச் சம்பாதித்துக்
கொடுக்கும் ஸ்டேஷன்களிருக்கவேண்டும். ஆனால் விட்டக் கப்ப
லைக் கட்ட ஏராளமான பொருளும காலமும் வேண்டும். விட்ட
மற்ற கப்பலுக்கு அவ்விரண்டும் குறைவு; மேலும் சுலபம். அத

ளுலேயே ஜர்மானியர்களைத் தவிர மற்றெல்லாத் தேசத்தினரும் இவ் விரண்டாந்தரக் கப்பலையே கட்டிப் பயன்படுத்துகிறார்கள். ஜர்மானியருக்குமாத்திரம் விட்டக் கப்பலைக் கட்டி யுபயோகிப்ப தில் விருப்பமதிகம்.

## காற்றுப் படகு

இனிக் காற்றுப் படகைப்பற்றி யாராய்வாம். காற்றுப் பட கின் அமைப்பு வேறு. இதில் பிராணவாயு அடைக்கப்பட்டிராமை யால் இது காற்றைவிடப் பளுவானதென்று சொல்லப்படுகிறது. காற்றுப் படகு பெரும்பாலும் பறவையின் வடிவத்தை யொத்திருக் கும். பறவைக்கிருப்பது போலவே காற்றுப் படகுக்கும் இருபுறங் களில் இறகுகளும், பின்புறத்தில் சிறகுப் பட்டையைப்போலச் சுக்கானும் உண்டு. படகின் முன்புறத்தில் இயந்திரமும் அவ்வியந் திரத்தின் பின்புறத்தில் பிரயாணிகள் உட்காருமிடமும் உண்டு. இயந்திரத்தின் முன்புறத்தில் இரண்டு சிறகுகள் உண்டு. அவை ஒன்றோடொன்று உராய்ந்துகொள்ளாதபடி இடையே மரத்தூண் கள் அமைத்துக் கம்பிகளால் கட்டப்படுகின்றன. இயந்திரம் இய ங்கி அச் சிறகுகளை அசைப்பித்துப் படகை மேலே கிளப்புகின் றது. பின்புறத்திலுள்ள சுக்கான் படகை வேண்டிய பக்கம் திருப் புகின்றது. இறகுகள் நீண்ட சதுரமாயிராமல் ஒருபுறம் சற்று சாய்வாக விருக்கும். இவ் விறகுகளுக்கும் இயந்திரத்திற்கும் மிகு ந்த சம்மந்தம் உண்டென்பதை ஞாபகத்திலிருத்தவேண்டும். ஆகாயக் கப்பல் பறக்கும்போது அதை நடத்துபவன் சற்று ஓய்வு கொண்டபோதிலும் அதற்கு ஆபத்தில்லை. ஆனால் காற்றுப் படகை நடத்துபவன் ஓய்வுகொள்ளாமலிருப்பது மாத்திரமல்ல, மிகுந்தஜாக்கிரதையாகவும் நடத்தவேண்டும். படகை நடத்துபவன் மிகுந்த ஜாக்கிரதையாயும், புத்திசாலியாயு மிருந்தாலன்றி படகை ஆபத்துக்குள்ளாக்காமல் கொண்டுபோய்ச் சேர்க்கமுடியாது. ஏனெ னில், படகை நடத்துபவனே அப் படகின் உயிராக (ஆத்மா வாக) இருக்கிறான். காற்றைவிடப் பளுவான பொருள் காற்றில் பறந்து செல்லுவது சுலபமான காரியமல்ல. பறவை முதலிய

பிராணிகள் காற்றைவிடப் பளுவானவை யென்பது வெளிப்படை. அப்படி யிருந்தும் அவற்றில் சில ஆகாயத்தில் பறப்பதும், சில பறக்கமுடியாமலிருப்பதும் நாம் பார்க்கிறோம். பறக்கமுடியாத பக்ஷிகளுக்கு உடலைவிட இறகு சிறியது. பறக்கக்கூடிய வற்றிற்கு உடலைவிடச் சிறகு பெரியது. அதனால் பறவை துவக்கத்தில் தனது நீண்ட இறகை விரித்து அசைப்பதனால் ஆங்குள்ள வாயு சலனப்பட்டுப் பறவையை யெழுப்புகின்றது பறவை மீண்டும் மீண்டும் இறகுகளை மேல் கீழாக அசைப்பதனால் அவ்விறகுகள் வாயுவின் மேல்நோக்கி யழுத்தும் சக்தியினால் தள்ளப்பட்டுப் பறவை உயரத்தில் செல்ல முடிகின்றது. நிராதரவாக வானத்தில் பறக்கும் பறவை இறகைச் சிறிதும் அசைக்காமலாவது, தூக்கங்கொண்டாவது தன்னுடலை மறந்திருக்குமானால் அப்பறவையின் கதி யதோகதியே யல்லவா? அதுபோலவே காற்றுப் படகை நடத்துபவனும் தனது உடல் அப்படகே யெனக் கருதுதல் வேண்டும். இதனால் காற்றுப் படகை நடத்துவது எவ்வளவு கஷ்டமானதென்பது பெறப்படுகிறது. படகு கீழிறங்கும்போதும, அது பறக்கத் துவங்கும்போதும் அதன் அடிப்புறம் நிலத்தில் உறுய்ந்து கெட்டுப்போகாதபடி சிறு சக்கரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. காற்றுப் படகு சாதாரணமாக 32 அடி நீளமும், 5 அடி அகலமும் 6 அடி உயரமும் இருக்கும் இது மூன்றுமுதல் ஐந்து டன் பாரம் வரையில் சுமக்கும். பூமியினின்றும் 2 அல்லது 3 மைல் உயரம் வரையில் பறக்கும். மணிக்கு 100 முதல் 200 மைல்தூரம் வரையில் செல்லும். சில மாதங்களுக்கு முன்னர்ச் சென்னையிலும் மதுரையிலும் காற்றுப் படகுகள் வந்து உலாவியதைப் பலரும் பார்த்திருக்கக் கூடுமாதலின் அதைப்பற்றி விரிவாகக் கூறவேண்டியதில்லை யெனக் கருதுகின்றேன்.

காற்றுப் படகுகளில் பலவிதமுண்டு. அவை ஒருசிறகுப் படகு (Monoplane) இருசிறகுப் படகு (Biplane) முச்சிறகுப் படகு (Triplane) என்று சொல்லப்படுகின்றன. பாரம் எவ்வளவுக் கெவ்வளவு அதிகப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு இறகுகளும் அதிகப்படுமெனத் தெரிகிறது. ஆனல் இருசிறகுப் படகு

கள் மாத்திரம் குறைவென்று சொல்லப்படுகிறது. இவையன்றி ஜலத்திலும் செல்லும் தன்மை வாய்ந்தவை (Hydraplane) யிருக்கின்றன. இப்போது Glidarce (க்ளீடார்ஸ்) என்ற விசித்திரமான படகுகளும் செய்யப்படுகின்றனவாம். இவற்றிற்கு இயந்திரங்களில்லாமல் இறகுகளைப்போன்ற பாகங்களைமாத்திரம் இணைத்துவிட்டால் அதுவே சுழன்று படகை மேலே கிளப்பிக்கொண்டு பறக்கின்றதாம்! மனிதனுடைய பகுத்தறிவு செய்யும் வேலை அபாரமானது. இனி நாளடைவில் இறகுகளைப்போன்ற கவசத்தையணிந்துகொண்டு தனக்குத்தானே வானத்தில் பறவையைப்போலப் பறந்தாலும் பறக்கக்கூடுமென்று எண்ண வேண்டியிருக்கிறது.

காற்றுப் படகு இயங்குவதற்கு நீராவியே முக்கிய சாதனமாயிருக்கிறது. இதில் நீராவியை யுண்டுபண்ணுவதற்கு மோட்டாரில் உபயோகிப்பதுபோலப் பெட்ரோலையே உபயோகிக்கிறார்கள். காற்றுப் படகில் நீராவியைத் தயாரித்து பீப்பாய் போன்றதொரு பாத்திரத்தில் (Boiler) புகவிடுகிறார்கள். உட்புகுந்த நீராவி அப்பாத்திரத்தின் வாய்ப்புறத்தில் அமைக்கப்பட்டிருக்கும் காம்பைப் போன்ற உறுப்பை (Bulb) முன்னுக்குத் தள்ளுகிறது. அப்போது அந்தப் பல்போடு இணைந்திருக்கும் சக்கரம் சுழலத் தொடங்குகிறது. உடனே இறகுகள் வேலைசெய்யத் தொடங்கி பறக்கக் கூடியதாகிறது.

## முடிவுரை

சிறகில்லாத மனிதன் ஆகாயத்தில் பறப்பது எவ்வளவு ஆச்சரியம்? முற்காலத்தில் குபேரனும், இராவணனும், சீவகனுடைய தகப்பனும் விமானங்களில் பறந்ததாகக் காவியங்களாலறியக் கிடக்கின்றன. ஆனால் அம்மாதிரி விமானங்களைத் தயாரிக்கும் வழக்கம் நாளிதுவரையில் நம்நாட்டிலேற்பட்டிராமையால், அம்மொழிகள் பொய் மொழிகளென்றோ, அல்லது நூலாசிரியர்கள் தத்தம் கதா சந்தர்ப்பத்திற் கேற்றவாறு கற்பித்துக்கொண்ட கற்

பனை விஷயங்களென்றே கருதவேண்டியிருக்கிறது. ஏனெனில் உலகம் நாளுக்குநாள் பல வழிகளிலும் விருத்தியடைந்து வருவதே இயல்பு. அதிலும் இம்மாதிரி சிறகுகளில்லாமல் பறத்தல் முதலிய சாதனங்கள் எளிதில் மறந்துவிடக் கூடியவையல்ல. அக் காலத்தி லிருந்த குதிரைகளைக் கட்டிபோட்டும் வழக்கம் இக் காலத்திலிரு க்கும்போது விமானங்களில் பறக்கும் வழக்கம் மட்டிலும் எப்படி இல்லாமற் போய்விடும்? மேலும் ஜீவகாருண்யம் ஜீவகாருண்யம் என்று பறைசாற்றிவந்த இந்து சமூகம் ஜீவஹிம்ஸையாகிய குதிரை களைப் பயன்படுத்தும் வழக்கத்தை மாத்திரம் கைவிடாமல் ஜீவ ஹிம்ஸையற்ற விமான யாத்திரையை மாத்திரம் மறந்துவிட்ட தென்பது நம்பக்கூடிய விஷயமேயல்ல. அன்றியும் இராமாயணத் தில் இராமனுக்குத் பின்னோராவது, இராவணனுக்குப் பின்னோரா வது விமானத்தை யுபயோகித்ததாக வேனும் சிந்தாமணியில் சீவ கனின் தந்தையைத் தவிர அவன் பின் சந்ததியாரில் எவரேனும் மயிற்பொறியை யுபயோகித்ததாகவேனும் காணப்படாமையால் அக்காலத்து வானயாத்திரை கற்பனையேயாமென்று துணியலாம். நூலாசிரியர்கள் இவ்வாறு சமயத்திற்கேற்ப விஷயங்களைக் கற்பித் துக் கூறுவதியல்பேயாம். நைடதத்தில் அன்னம் பேசியதென் பதும், பாரதத்தில் அக்ஷய பாத்திரம் வற்றாதிருந் தது என்பது போன்றவையும், பிரபுலிங்க லீலையில் அல்லமன் உருவெளித் தோற்றமாயிருந்து வியவகாரம் புரிந்தானென்பதுவும், மணிமேகலையில் தூணிலிருந்த பாவை பேசிற்றென்பதும், கந்தபுரா ணத்தில் சூரபத்மனுடைய தலையை வெட்ட வெட்ட முளைத்துக் கொண்டே யிருந்தது என்பது போன்றவையும் ஆகிய வெல்லாம் கதாசந்தர்ப்பத்திற்கேற்ற கற்பனையா யிருப்பதுபோல இராமாயண காலத்து வானயாத்திரையும் கற்பனையேயாம்.

மனித அறிவு நாளுக்குநாள் வளர்ந்தோங்குமேயல்லாது குறு குதல் இயல்பாகமாட்டாது. இதைப்பற்றி "நாகரீகம்" என்னும் தலைப்பில் விரிவாகப் பிறிதொரு சமயம் பகருவாம். தற்போது ஆகாய விமானங்களால் அளவிடமுடியாத சௌகரியங்களேற்பட்டி ருக்கின்றன. அயல் நாடுகளை மணிக்கணக்கில் நாடுவதற்கு ஆகாய

விமானங்கள் பேருதவியா யிருக்கின்றன. நம் நாட்டில் விமானத் தொழில் ஏற்படாவிட்டாலும் விமானப் போக்குவரவு கூடியசீக்கிரம் ஏற்பட்டுவிடுமென்று நம்பலாம். மற்ற நாடுகளுக்கிருப்பன போன்ற அரசியல் சுதந்திரம் நமது நாட்டிற்கும் இருக்குமானால் மற்ற நாட்டினரைப்போலவே நமது நாட்டினரும் மேற்கூறிய விமான நிர்மாணக் கல்வியும், மற்றும் பல இயந்திர நிர்மாணக் கல்வியும் கற்கப் போதிய சௌகரியங்களுண்டாகும். ஆனால், தேவஸ்தான மசோதா, விவாகவயது நிர்ணய மசோதாபோன்ற சமூக சீர்திருத்தக் கொள்கைகளுக்கே முட்டுக் கட்டையாயிருந்த நமது நாட்டு வைதீகர்கள் தெய்வ சிருஷ்டிக் கெதிர் சிருஷ்டியாகிய இயந்திர நிர்மாணக் கல்விக்கு இடங்கொடுப்பார்களோ வெனில், நாகரீகம் முதிர்ந்து மேலோங்கிவரும் இக்காலத்தில் கண்மூடித்தனமான கொள்கையுடைய வைதீகர்களின் எதிர்ப்புச் சிறிதும் பயன்படாமல் அவ்விரண்டு மசோதாக்களும் சட்டமாகியதைப்போலவே இயந்திர நிர்மாண வேலையும் துவக்கப்பட்டு விடுமென்பதிலையமில்லை. இந்து சமூகம் கண்மூடிக் கொண்டிருக்கவில்லை. பல தேசங்களின் நிகழ்ச்சிகளையும் நன்கு அறிந்து உடனிருந்து அனுபவித்தும் வருகிறது. மற்ற தேசங்கள் சுதந்திரத்தோடு அனுபவிக்கும் இன்பத்தைத் தானும் அனுபவிக்க ஆசைப்படுகிறது. இதுவரையில் ஆட்டிவந்த வருணச்சிரமப் பேய்களும், மதபேதச் சைத்தான்களும், மூடக் கொள்கைப் பிசாசுகளும் இனி நாகரீகப் பூசாரிகளிடத்துத் தலைகாட்டா. இந்து சமூகத்தில் அக்கொள்கைகள் சிறுகச் சிறுக அழிந்து வருகின்றன. ஜன சமூகம் ஒன்று சேரப் பல வழிகளிலும் முயல்கின்றது. இனிஇந்தியர்கள் பிற நாட்டினரைப் போலச் சகல சௌகரியங்களையும் அடைவதற்கு அடிப்படையாக விருப்பது சுயாட்சியே. அது விரைவில் கைகூடும்படி இயற்கை துணைபுரிவதாக.

# ஆசிரியர் குறிப்புகள்

## "பாரதி"யின் தாமதம்

மிகுந்த பொருட்செலவில் அதிக கவனிப்பில் உயர்தரத்தில் பெரிய தோரணையில் ஆனால் மிகமிகக் குறைந்த சந்தாவில் அதுவும் ஒரு கிராமத்திலிருந்துகொண்டு நடத்துவதால், எத்தனையோ வசதிக் குறைவால் எதிர்பாராதபடி மிகுந்த தாமதம் ஏற்பட்டு "பாரதி"யைக் குறித்தகாலத்தில் வெளியிட முடியவில்லையே யென்று மிகவும் வருந்துகிறோம். "பாரதி"யை அதிக நஷ்டத்துடன் நடத்துகிறோமாயினும் அதை எதிர்பார்க்காமல் பத்திரிகையைக் காலாகாலத்தில் வெளியிடப் பெரும் பிரயாசை எடுத்துக்கொண்டிருக்கிறோமென்பதை இங்கே வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## அயல்நாட்டுச் சந்தாதாரர்களுக்கு

அயல் நாடுகளுக்கு வி. பி. வழக்கம் இல்லாததாலும் கடிதம் எழுதிப் பதில் தெரிந்துகொள்ளச் சுமார் 2 மாதங்கள் ஆகிறபடியாலும் அயல் நாடுகளிலிருக்கும் சந்தா அன்பர்கள் அனைவரும் தயவுசெய்து 1930-ம் வருஷத்திற்காகத் தங்கள் தங்கள் சந்தாக்களை உடனே அனுப்பி எமது பொதுநலத் தொண்டில் உற்சாகிக்க வேண்டுகிறோம். "பாரதி"யைப் பற்றி அயல் நாடுகளிலிருக்கும் எமது தமிழ்ச் சகோதரர்கள் அதிகமாக அபிமானம் கொண்டிருக்கிறபடியால், "பாரதி"யின் அபிவிருத்தியை முன்னிட்டு ஒவ்வொரு நண்பரும் அங்கு அநேக சந்தா நேயர்களைச் சேர்த்து அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## டாக்டர் பெசண்டு அம்மையார் ஜயந்தி

அன்னிபெசண்டு அம்மையாருக்கு 83-ம் வருடம் பிறந்துவிட்டது. அவருக்குச் சமீபத்தில் ஏற்பட்ட பிறந்ததின வைபவத்தை உலகத்தின் பல பாகங்களிலும் கொண்டாடினார்கள். அவர் அயல் நாட்டிற் பிறந்தவராயிருப்பினும், இந்தியாவையே தனது அபிமானத் தாய்நாடாகக்கொண்டு, சென்ற 25 வருடகாலமாய் அவர் இந்நாட்டிற்குத் தொண்டு செய்திருப்பதை ஒவ்வொரு இந்தியரும் போற்றுமலிருக்க முடியாது. சென்னை அரசியற் பேச்சுகளிலும் வாதங்களிலும் பத்திரிகைகளிலும் அச்சத்தை அகற்றுவதற்கு அடிகோலியவர்களில் அவரே முதல்வராவர். 1916-ம் வருஷத்தில் செய்த "Home Rule" (சுயாட்சிக்) கிளர்ச்சியின் மூலம் பொதுவாக இந்தியாவுக்கும் முக்கியமாய்த் தென்னாட்டுக்கும் எவ்வளவோ விழிப்பை அவர் உண்டாக்கிவிட்டார். அவர் செய்த தேசியக் கிளர்ச்சிக்காக அவர் ஒருமுறை பாதுகாப்பில் வைக்கப்பட்டார். "Theosophist" (பிர்மஞானி) "New India" (நியூ இந்தியா) "Commonweal" (காமன்வீல்) "Theosophy in India" (இந்தியாவில் பிர்மஞானம்) முதலிய இன்னும் சில பத்திரிகைகள்மூலம் தேசத்திற்கு நல்ல தொண்டுசெய்து இந்தியப் பத்திராதிப உலகில் சிறந்தவர்களில் ஒருவராக இவர் விளங்குகிறார். இவர் பல புஸ்தகங்களையும் எழுதி உபகாரம் செய்திருக்கிறார் அரசியல், கல்வி, சமூகச் சீர்திருத்தம், மதம், தொழிலாளர் இயக்கம் முதலியவைகளில் நன்கு உழைத்துக்கொண்டிருக்கிறார். அவர் சில கல்லூரிகளையும் சில உயர்தரக் கலாசாலைகளையும் ஏற்படுத்தி யிருக்கிறார். அவர் காசியில் ஸ்தாபித்த ஸென்ட்ரல் ஹிந்து காலேஜ (Central Hindu College) இப்பொழுது காசி ஹிந்து சர்வகலாசாலைக்கு உயிராக விளங்குகிறது. அவருக்கு வயோதிக பருவம் ஆகியும் இன்னும் அவர் வாலிபனைப் போலவே அநேக இயக்கங்களில் ஈடுபட்டுப் பலவித வேலைகளை ஊக்கத்துடன் செய்துவருகிறார். முஸ்லிம் லீக்குக்கும் (Muslim League) காங்கிரஸுக்கும் நேசத்தை உண்டாக்கிய பெருமை அம்மையாருக்கே உரியதாகும். எழுத்தா

லும், வாக்காலும் இன்னும் எவ்வளவோ உழைத்துக் கொண்டிருக்கிறார். அவருடைய சலியாா உயரிய உழைப்பிற்காக இந்தியா அவருக்கு என்றும் மிகமிகக் கடமைப்பட்டிருக்கிறது. அவருடைய அபார வேலைகளை அதிகமாய் அறியவேண்டுமானால், சென்னை அடையாற்றிற்குச் சென்று ஒருநாள் அங்கு சாவதானமாய்த் தங்கி விஷயங்களை ஊன்றிக் கவனித்துப் பார்த்தால் நன்குவிளங்கும்.

அன்னை பெசண்டு அம்மையார் இன்னும் அநேக ஆண்டுகள் அரோக திடகாத்திரத்துடன் வாழ்ந்து இந்தியாவுக்கு இன்னும் அநேக துறைகளில் அதிகமாய்த் தொண்டு செய்வதற்கு ஆண்டவன் அருள்புரிவாராக.

## மகேச குமார சர்மா

மகேச குமார சர்மா என்ற மறை பெயருடன் பல புஸ்தகங்களை எழுதித் தமிழ் உலகத்திற்கு உதவிய திருவாளர் மா. குப்புஸ்வாமி அய்யரவர்கள் காலஞ்சென்று விட்டாரென்று அறிய மிக மிகத் துயரமடைகிறோம். "இராமகிருஷ்ண விஜயம்" "விவேகானந்த விஜயம்" என்னும் நூற்களை இலகுவான இனிய நடையில் எழுதியவர் இவரே. பேர்போன பங்கிம் சந்திரசாட்டர்ஜீயின் "ஆனந்த மடம் என்ற நாவலை வங்காளியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்தவர் இவரே. பாரிஸால் தேசபக்தர் அஸ்வினிகுமார தத்தர் ஆக்கிய "பக்தியோகம்" என்ற நூலையும் வங்காளியினின்றும் தமிழ்ப்படுத்தியவர் இவரே. இவர் அடிக்கடி பல பத்திரிகைகளுக்கும் விஷயதானம் செய்வதுண்டு.

சிங்கப்பூர் பிரதம போலீஸ் கோர்ட்டில் துவிபாஷி உத்தியோகம் தாங்கிக்கொண்டிருந்தார். தமிழ், தெலுங்கு, வங்காளி, ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய இந்தப் பஞ்ச பாஷைகளிலும் இவருக்கு நல்ல பயிற்சியுண்டு. இவரது பல பாஷைகளின் அறிவைத் தமிழ்

மொழியின் வளர்ச்சியின் பொருட்டு அர்ப்பணம் செய்திருப்பது இங்கே குறிப்பிடத் தக்கது. ஒரு நல்ல பாஷாபிமானியின் பிரிவால் தமிழ் நாட்டிற்கு ஒரு பெரிய நஷ்டமே. அவருடைய ஆத்மாவிற்குச் சாந்தி உண்டாவதாக.

## இராஜப் பிரதிநிதியின் அறிக்கை

கல்விக்கும், கலைகளுக்கும், செல்வத்திற்கும், வீரத்திற்கும், தீரத்திற்கும், அறத்திற்கும், ஆத்ம ஞானத்திற்கும், ஆதிகாலத்திலிருந்து உலகத்திலேயே பேர்போன தேசங்களில் முக்கியமானது இந்தியாவே. இன்னும் எத்தனையோ வகையான சிறப்புகளுக்கெல்லாம் இருப்பிடமாக இருந்த இந்தியா இன்று அடிமையாகி அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறது. பண்டை மகோன்னத பெருமைகளை இழந்து தவிக்கும் இந் நாட்டை உலக மக்கள் பேராச்சரியத்துடனும் அனுதாபத்துடனும் இப்பொழுதுதான் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள்.

எத்தினத்தில் இங்கிலாந்து தேசத்தின் மகாராணியான எலிஜபெத் அவர்கள் கிழக்கு இந்தியக் கம்பெனிக்கு (East India Company) வியாபார சாசனம் கொடுத்தார்களோ அத் தினத்திலேயே (31-12-1600 கி. பி.) இந்தியாவின் அடிமைத்தனத்திற்குக் கர்ப்பம் உண்டாகிவிட்டது. கிழக்கு இந்தியக் கம்பெனியார், என்று இந்தியாவில் அடிவைத்தார்களோ அன்றுமுதல் இந்தியா அடிமையாக ஆரம்பித்துவிட்டது. சம்பாதிக்கும் வியாபாரிகளாய் இங்குற்ற ஆங்கிலேயர்கள் இப்பொழுது தேசத்தை ஆண்டுகொண்டிருக்கிறார்கள் என்பது சுயமரியாதையுடைய ஒவ்வொரு இந்தியருக்கும் எவ்வளவோ வருத்தமாயிருக்கும்! தப்பித்தவறி வந்தவன் தலைவனான கதைமாதிரியாகவும் ஒண்டவந்த பிடாரி ஊர் ஆண்ட கதைபோலவும் இது இருக்கிறது. மதவெறியாலும், ஜாதி வித்தியாசத்தாலும் இன்னும் பலவித பிளவுகளாலும் தேசம் மிகமிகப் பலவீனமாயிருந்தபொழுது, ஆங்கில வியாபாரிகள், சில ...ர்களுடன் ராஜதந்திரமாய்ச் சேர்ந்துகொண்டு சில சிற்றரசர்

களுக்கு விரோதமாய் யுத்தம்செய்து மெல்ல மெல்ல இந்தியாவைக் கைப்பற்றிக்கொண்டார்கள்.

இந்நாள்வரை இந்தியா ஆங்கில ஆட்சியால் வறுமையுற்றது, இங்கிலாந்து செழிமையுற்றது. இந்திய மக்கள் பட்டினியாலும் பஞ்சத்தாலும் கொள்ளை நோய்களாலும் கோடிக் கணக்காக அழிந்தார்கள்; இங்கிலாந்தில் எத்தனையோ கோடி ஜனங்களுக்குப் பிழைப்புக் கிடைத்தது. இங்கு நாட்டுக் கைத்தொழில்களும் வாணிபமும் சிறுத்தன; அங்கு அவைகள் அதிகமாக அபிவிருத்தி அடைந்தன. இந்தியாவில் கலைகளும் கல்வியும் அருகின; இங்கிலாந்தில் அவைகள் பெருகின. இத்தேச செல்வத்தை வடிகட்டின சக்கைதான் இந்தியாவில் நின்றது; வடிகட்டின சாரம் இங்கிலாந்திற்குச் சென்று இங்கிலீஷ்காரர்களைக் கொழுக்கச் செய்தது, செய்துகொண்டிருக்கிறது. இங்கிலாந்தின் செல்வத்திற்கும் செல்வாக்கிற்கும் காரணம் இந்தியாவின் செல்வமே என்பதை எவர் எவ்விதத்தில் மறுக்கப் போகிறார்கள்? சுருங்கச் சொல்லுமிடத்து இந்தியா எல்லா வழிகளிலும் அடிமையாகி விட்டது.

இந்தியாவை அடிமைத்தனத்திலிருந்து அகற்றுவதற்காக நமது தலைவர்கள் 1885-ம் வருடம் டிசம்பர் மீ 25 உ இந்திய தேசிய மகாசபையை ஸ்தாபித்தார்கள். அதனுடைய அரிய கிளர்ச்சிகளால்தான் இந்தியாவிற்கு இதுவரைக்குக் கிடைத்திருக்கும் சீர்திருத்தங்கள் எல்லாம்.

சுதந்திரமின்றியும் சமத்துவமின்றியும் இந்நாள்வரை இந்தியர்கள் பட்டபாட்டை படும்பாட்டை எவ்வாறு விவரிப்பது? இந்தியர்கள் ஆளப்படுபவர்களாம்; ஆங்கிலேயர்கள் ஆள்பவர்களாம். இந்தியர்கள் இந் நிமிஷம்வரை அந்நிய ஆட்சியின் கீழ் அனுபவிக்கும் இன்னல்களைச் சொல்லிமுடியாது. சுதந்திரமின்றிப் பற்பல சீர்திருத்தங்கள் பெயரளவில் கிடைத்தும் பயனென்ன?

1919-ம் ஞூல் கிடைத்த மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர் திருத்தங்கள் போதுமானவைகளல்லவென்றும், அவை அதிருப்தியானவைகளென்றும் கிளர்ச்சி செய்ததின் பயனாகவே இத் தேசத்தில் தேசியம் மிக வேகத்தில் வளர ஆரம்பித்தது. மாண்ட்போர்டு சீர்திருத்தங்கள் 10 வருடங்களுக்கே கொடுக்கப்பட்டன. அக் காலம் சமீபத்தில் முடியப்போகிறபடியால், புதிய சீர்திருத்தங்களை எவ்வாறு ஏற்படுத்துவது என்பதைப்பற்றி விசாரிக்கச் சர் சைமனைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. இந்தியர் ஒருவரையேனும் இதில் அங்கத்தினராகச் சேர்க்காது இந்தியர்களது மனதிற்குக் கசப்பாக வெள்ளையர்களையே முற்றிலும் அங்கத்தினர்களாக இங்கிலாந்தில் நியமித்தார்கள். ஆகையால் இந்தியர்களுக்கு விரோதமாக ஏற்பட்ட சைமன் கமிஷன் இந்தியாவுக்கு வந்தவுடன் "சைமனே திரும்பிப்போ" என்று கருப்புக் கொடிகளுடன் பகிஷ்கரிக்கப்பட்டது. சைமன் கமிஷனைத் தக்கவாறு பகிஷ்காரம் செய்தபடியால், இந் நாட்டின் நிலையை ஆங்கிலேயர்கள் சற்றுக் கவனிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இன்னும் சைமன் கமிஷன் அறிக்கை வெளிவரவில்லை.

பலவித அபிப்பிராயங் கொண்ட தலைவர்களையெல்லாம் சேர்த்து சர்வ கட்சி மகாநாடு ஒன்றுகூட்டி இந்தியாவுக்குச் சுயாட்சித் திட்டமொன்றைச் சர்வஜன சம்மதமாய்த் தயாரிக்கவேண்டும் என்ற இந்தியாவின் அவசிய வேண்டுகோளை உல்லங்கனம் செய்து மறுத்து இங்கிலாந்தில் ராயல் கமிஷனை நியமித்த பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இப்பொழுது தனது நிலையை உணர்ந்து, இந்தியரை மதித்துத் தனது பிடிவாதப் போக்கை மாற்றிச் சமீபகாலத்திற்கு முன்பு இந்திய ராஜப் பிரதிநிதியை இங்கிலாந்திற்கு அழைத்து அவருடனும் பல கட்சித் தலைவர்களுடனும் இந்திய விஷயங்களைப் பற்றிப் பேசிக் கலந்து ஆலோசித்து அறிந்ததின் பயனாக இராஜப் பிரதிநிதியின் மூலமாக ஒரு அறிக்கையை இந்தியாவிற்கு அனுப்பியிருக்கிறார்கள்.

பாஞ்சாலப் படுவதைக்காகவும் கிலாபத் அநீதிக்காகவும் இந்தியாவே மனங் கொதித்துக்கொண்டிருக்கையில் மாண்டேகு-செம்ஸ்போர்டுச் சீர்திருத்தங்கள் 1919-ம் வருஷத்தில் வழங்கப்பட்டன. வெறுப்புற்ற சைமன் கமிஷனைப் பகிஷ்கரித்ததின் மூலமாகவும் இந்திய மாதாவின் உண்மைப் புதல்வர் பாஞ்சால சிங்கம் லாலா லஜபதிராயை இந்தியா பறிகொடுத்ததின் மூலமாகவும் கலியுகத் ததீசி யதீந்திரநாத் தாஸ் தனது உயிரையே இந்தியாவின் சுதந்திரத்திற்காகக் களப்பலியாய்க் கொடுத்ததின் மூலமாகவும் பிரிட்டிஷ் அரசாங்கம் தனது ஏகாதிபத்திய இறுமாப்பைச் சற்றுத் தாழ்த்தி இந்தியாவின் கோரிக்கைகளை இப்பொழுதுதான் கவனிக்க முன்வந்திருக்கிறது. இதில் இந்தியரனைவருக்கும் சந்தோஷமே. சர்வ கட்சி மகாநாடு கூட்டுவது இன்னும் அதிக சந்தோஷமே. இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு ஆட்சி அந்தஸ்து கொடுப்பதைப்பற்றி யோசிக்கவேண்டும் என்றுதான் இராஜப் பிரதிநிதி அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். இந்தியாவுக்குச் சுயாட்சி கிடைப்பது ஆச்சர்யமல்ல. ஆனால் இந்தியாவின் இரத்தத்தை உறிஞ்சிச் சுகித்துக் கொண்டிருக்கும் ஆங்கிலேயர் எப்படித்தான் இந்தியாவிற்குக் குடியேற்ற நாட்டு ஆட்சி அந்தஸ்தைக் கொடுக்க முன்வந்திருக்கிறார்களோ என்று ஆச்சரியப்படவேண்டியதிருக்கிறது.

இந்தியாவிற்குக் குடியேற்ற நாட்டுச் சுயாட்சி கொடுப்பதற்கென்று இராஜப் பிரதிநிதி தனது அறிக்கையில் வியக்தமாய்க் கூறவில்லையெனினும் பல தலைவர்கள் சந்தோஷத்துடன் இராஜப் பிரதிநிதியின் அறிக்கையை வரவேற்றுப் பலவிதமாய் வியாக்கியானம் செய்கிறார்கள். பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தியர் விஷயத்தில் இப்பொழுதேனும் முன்வந்ததையும் அதற்குக் காரணபூதர்களான முதன் மந்திரி ஸ்ரீ ராம்சே மாக்டொனல்டு இந்தியா மந்திரி ஸ்ரீ வெட்ஜ்வுட்பென் இராஜப்பிரதிநிதி லார்டு இர்வின் ஆகிய மூவரையும் இந்தியா போற்றாமலிருக்க முடியாது. இப்பொழுதே இந்தியாவிற்குச் சுயாட்சி வேண்டும் என்ற கட்சிக்காரர் இருக்கிறார்கள். அவர்களது அபார தேசாபிமானத்திற்காக எமது

அன்பான வணக்கம். சர்க்காரின் திருவாயிலிருந்து எதுவந்தாலும் அதைத் துதிக்கும் சர்க்கார் தாசர்களைப்பற்றி ஒன்றும் சொல்லத் தேவையில்லை.

(1) இந் நாட்டிலே இப்பொழுது தாண்டவமாடிக்கொண்டிருக்கும் அடக்குமுறை ஒழியவேண்டுமென்றும் (2) அரசியல் கைதிகளை விடுதலைசெய்ய வேண்டுமென்றும் (3) ஜனப் பிரதிநிதி சபைகளுக்கும் அவற்றிற்கு முதன்மையாயிருக்கும் காங்கிரஸிற்கும் சர்வகட்சி மகாநாட்டில் அதிகமான பிரதிநிதித்துவம் வேண்டுமென்றும் (4) குடியேற்ற நாட்டு ஆட்சி அந்தஸ்தை அளிப்பதாக வாக்குறுதி கொடுத்து சர்வ கட்சி மகாநாட்டிற்கு அழைப்புக்கள் அனுப்ப வேண்டுமென்றும் இல்லாவிடில் இராஜப் பிரதிநிதியின் அறிக்கையை ஒப்புக்கொள்ள முடியாதென்றும் தீர்மானித்து மகாத்மா காந்தி முதலிய தலைவர்கள் இராஜப் பிரதிநிதியின் அறிக்கைக்குப் பதில் அனுப்பியிருக்கிறார்கள். முடிவை இந்தியா தேசமே கூர்மையாய்க் கவனித்துக்கொண்டிருக்கிறது.

நாம் யார்? நமக்குச் சுதந்திரம் கொடுக்க ஆங்கிலேயர் யார்? நம்முடைய நாட்டிலே நம்மை அடக்கி ஆள்வதற்கு ஆங்கிலேயர் யார்? என்ற தத்துவம் இப்பொழுது பேசுவது வாய் வீரமேயாகும். நமது மூதாதையர்கள் தேசாபிமானமின்றி எப்படியோ சமயசமூகச் சச்சரவுகளில் சிக்கி உழன்றதால் தேசமே இப்பொழுது அடிமையாய்க் கிடக்கிறது. நாம் எப்படியோ சிக்கிக்கொண்டோம். காலதேச வர்த்தமானத்திற்குத் தகுந்தவிதமாய் நடந்து நாம் சுதந்திரம் அடையவேண்டும். இராஜப் பிரதிநிதியின் அறிக்கையைக் கவனித்து எல்லாத் தலைவர்களும் தேசபக்தியுடன் வேலை செய்து இந்தியாவை விடுதலைசெய்ய வேண்டியது இந்தியத் தலைவர்களின் முக்கிய முதற்கடமையாகும்.

இந் நாட்டு மக்களில் 100-க்கு 6 பேர் கூட வாசிக்கவில்லை. பாமர ஜனங்களுக்கு நாட்டின் நிலையைப்பற்றி என்ன தெரியும்? அவர்கள் பட்டினியால் வாடிக் கல்வியின்றித் திண்டாடிக்கொண்

டிருக்கும்பொழுது நாட்டுக்குச் சுதந்திரம் வேண்டுமென்பதை எப்படி அறிவார்கள்? இந்தியப் பொது மக்கள் எதற்கும், தலைவர்கள் தலைவர்கள் என்றே தலைவர்களை நம்பிக்கொண் டிருக்கிறார்கள். பொது ஜனங்கள் நம்பிக்கையுடன் தங்கள் தலைவர்களைப் பின்பற்றிக்கொண்டிருக்க வேஷத் தலைவர்களிற் பலர் ஜனத்திரளின் அறியாமையையே தங்கள் சுயநலத்திற்கு அனுகூலமாக உபயோகப்படுத்தி தேசாபிவிருத்தியைக் கெடுத்துவிட்டார்களென்று மகா தைரியத்துடன் கூறுகிறோம். போலித் தலைவர்களால்தான் இந்தியா பாழடைந்துகொண்டு வருகிறது என்பதில் கொஞ்சமேனும் சந்தேகமேயில்லை. ஆங்கில ஆட்சியின்கீழ் "படமுடியாது இனித்துயரம் படியாது பட்டதெல்லாம் போதும்" என்று இந்திய மக்கள் இப்பொழுதுதான் அதி வேகமாய் உணர்ந்துகொண் டிருக்கிறார்கள்.

இந்தியாவிலிருக்கும் எல்லாக் கட்சித் தலைவர்களே! இந்தியா அடிமைப்பட்டுக் கிடப்பதை நீங்கள் அறியவில்லையா? உங்களுக்குச் சுதந்திர உணர்ச்சி துள்ளிக் கொதித்துக் கொண்டிருக்கவில்லையா? தலைவர்களாகிய நீங்கள் அவஸியம் ஆலோசித்துச் செய்யவேண்டிய சந்தர்ப்பம் வந்திருக்கிறது. இந்தியாவிற்குச் சுயாட்சி அவஸியம் வேண்டியிருப்பதால், உங்கள் விதண்டா வாதங்களை ஆரம்பிக்காது, பிடிவாதங்களை விட்டுக் கொடுத்துக், கட்சி வாதங்களை ஒழித்து எல்லாத் தலைவர்களும் ஐக்கியமடைந்து இந்தியாவிற்குச் சுயராஜ்யம் வேண்டுமென்று உறுதியுடன் கேளுங்கள். உங்களுடைய ஒற்றுமையான ஒரே ஒரு கோரிக்கையை பிரிட்டிஷார் ஒருக்காலும் மறுக்கமாட்டார்கள். இந்தியாவுக்கு இப்பொழுது சரியான சந்தர்ப்பம் வந்திருக்கிறது. இச் சமயத்தில் தேசத்தைக் காட்டிக் கொடுக்காது தேசத்தைக் காப்பாற்றுங்கள். இந்தியர் அனைவரும் சகோதரர்கள் என்று எண்ணி சுயராஜ்யம் எல்லா இந்தியருக்கும் வேண்டுமென்பதில் சற்றும் அபிப்பிராய பேதமின்றி, எல்லாத் தலைவர்களும் ஒற்றுமையுடன் முன் வந்து இந்தியாவிற்குச் சுயாட்சி பெற்று இந்தியாவை எல்லா வழிகளிலும் சௌரப்படுத்துங்கள்.

குறுகிய நோக்கங் கொண்டு தேசத் துரோகம் செய்யாதீர்கள். தேசத் துரோகத்திற்குப் பிராயச்சித்தம் கிடையாது. இந்தியாவிற்குக் குடியேற்ற நாட்டுச் சுயாட்சி கிடைப்பதற்கு வேண்டியே சர்வகட்சி மகாநாட்டிற்குச் செல்லுங்கள். சர்வகட்சி மகாநாட்டில் சுதந்திரமும் சமத்துவமும் சகோதரத்துவமும் உங்கள் ஒவ்வொரு பேச்சிலும் செய்கையிலும் மணக்கட்டும்.

ஆண்டவனே, இந்தியா நெடுங்காலம் அடிமையில் கஷ்டப்பட்டுவிட்டது. இனிப் பொறுக்க முடியாது. இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைப்பதில் அருள்பாலிக்க வேண்டுகிறோம்.

## ஆப்கன் நாட்டில் நாதர்கான்

ஆப்கனிஸ்தானம் முரட்டு ஜாதியார்களால் நிறைந்த தேசம். கொள்ளைகளுக்கும் கொலைகளுக்கும் பேர்போன நாடு. நெடுங்காலம் சமாதானத்துடன் ஆட்சி செலுத்திய அமீர் ஒருவரைக் கூடச் சரித்திரத்தில் காணோம். மாஜி அமீர் அமானுல்லா அவர்களின் தகப்பனார் அமீர் ஹபிபுல்லா கொல்லப்பட்டார். பின்பே அமானுல்லா அவர்களுக்கு அமீர் ஸ்தானம் கிடைத்தது. அவர் ஆப்கனிஸ்தானத்தின் மீது அதிக அன்பு கொண்டு அதை அதிகமாக அபிவிருத்தி செய்ய எண்ணி அநேகம் புத்தம் புதிய சீர்திருத்தங்களைப் புகுத்த [illegible]ம்பித்த வுடனே உள் நாட்டுக் குழப்பங்களும் சண்டைகளும் உண்டாகியது. தண்ணீர் தூக்கியின் மகனான கள்வர் தலைவன் பாச்சா சாக்கோ அமீர் ஆனான். இதைக்கொண்டு ஆப்கானியர்களின் நிலைமை ஊகிக்கலாம். விரிந்த மனமும் பரந்த நோக்கமும் உயர்ந்த சீர்திருத்த உணர்ச்சியும் கொண்ட அமீர் அமானுல்லா அவர்கள் தனது பட்டமிழந்து நாடிழந்து [illegible]சமயம் இட்டலி தேசத்தில் வசிக்கிறார்.

அல்லோல கல்லோலமாய்க் கிடந்த ஆப்கனிஸ்தானத்தை மீட்க, வீரத்துடன் முன் வந்து பல கஷ்டங்களுக் கிடையில் கடும் போர்கள் புரிந்து பாச்சா சாக்கோவை வென்றதற்காக வீரர் நாதர்கானை நாம் போற்றுகிறோம்; வாழ்த்துகிறோம்; எனினும், எப்

பொடிகளிற் சிறந்தது!



# பட்டணம் பொடி

அவைகளிற் சிறந்ததும் அனைவரும் விரும்புவதும்
அகிலம் புகழ்வதும்
காரம், மணம், குணம் நிறைந்ததும்

## அப்பாதுரைப் பொடியே!

ஒருமுறை பரீக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

**ஆ. அப்பாதுரை முதலியார் & சன்**

பொடி வியாபாரம்
தபால் பெட்டி நெ. 189
**55, ஆச்சாரப்பன் தெரு. ஜி. டி., மதராஸ்.**


## அரிய வெளியீடுகள்.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| தமிழர் யார்? | 0 | 8 | வேலைக்காரி ("ஜீவா") | 1 | 8 |
| ஆரியர் தமிழர் கலப்பு | 0 | 8 | வேடதாரி ("ஜீவா") | 1 | 4 |
| மிழ் : பழமையும் புதுமையும் | 0 | 8 | நடன சுந்தரி ("திரை ஒலி" ஆசிரியர்) | 1 | 0 |
| தமிழர் சமயம் எது? | 0 | 8 | நாடகக்கலை மலர் (226 பக்கங்கள்) | 2 | 0 |
| ஆரிய வேதங்கள் | 0 | 10 | இராவண காவியம் | 6 | 0 |
| மரணத்தின் பின்? | 0 | 8 | இந்தியாவில்—சோஷலிஸம் | 0 | 12 |
| பெண்ணே பெரியவள்—ஏன்? | 0 | 8 | கவிஞனின் காதல் | 0 | 12 |
| ந்துவெளித் தமிழர் | 0 | 8 | கவிஞர் விழ | 0 | 6 |
| மிழ்க் கடவுளுக்கு ஆரியப் பாடலா? | 0 | 4 | தாழ்வு மனப்பான்மை-முல்லை | | |
| ம்பு வணக்கம் | 0 | 4 | முத்தையா | 0 | 12 |
| க அறிவியல் நூல் பகுதி-1 | 0 | 8 | அண்ணாவும் இராவண காவியமும் | | |
| ் ஆராய்ச்சி | 0 | 6 | (C. N. A.) | 0 | 2 |
| கள் உலகம் | 0 | 12 | இந்துமதம் தமிழர் மதமா? | 0 | 8 |
| ன் எப்படித் தோன்றினான்? | 0 | 8 | தமிழரின் மறுமலர்ச்சி (C. N. A.) | 0 | 8 |
| வினாக்களும் விடைகளும் | 1 | 0 | எது இசை? (பாரதி தாசன்) | 0 | 6 |
| —லக்ஷ்மி | 0 | 6 | புரட்சிப் பெண் (குயிலன்) | 0 | 8 |
| ம் சைவமும் | 0 | 8 | பாவத்தின் விதை (டால்ஸ்டாய்) | 0 | 5 |
| ன் வித்தியாதரனா? | 0 | 6 | தமிழ் விளக்கம் (கேள்வியும்-பதிலும்) | 0 | 6 |
| -உயர்வுக்கு உதவியவர் யார் | 0 | 8 | நாடக உலகில் | 0 | 8 |
| தெய்வக் கொள்கை | 0 | 4 | தேன் கூடு (கவிதைகள்) | 0 | 2 |
| மிழகமே (C. N. A.) | 0 | 8 | நாஸ்திகர் யார்? ஆஸ்திகம் எது? | 0 | 6 |

**...ழ் நிலையம், 75, வரதா முத்தியப்பன் தெரு, சென்னை**

REGD. No. M 5018

# ASSOCIATION PUBLISHING HOUSE

EDUCATIONAL PUBLISHERS.

94/95, NEW STREET, MANNADY,

MADRAS

## புதுமுறை சங்க வாசகம்

BY P. Veeraraghavan

Editor. "Aramba Kalvi"

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் .... | .... | 0 | 4 | 0 |
| இரண்டாம் ,, .... | .... | 0 | 5 | 0 |
| மூன்றாம் ,, .... | .... | 0 | 7 | 0 |
| நான்காம் ,, .... | .... | 0 | 8 | 0 |
| ஐந்தாம் ,, .... | .... | 0 | 9 | 0 |

## தேச பரிபாலனம்

By D. Sivasankara Rao B.A., L.T.,

| | | | | |
|---|---|---|---|---|
| நான்காம் வகுப்பு .... | .... | 0 | 7 | 0 |
| ஐந்தாம் வகுப்பு .... | .... | 0 | 8 | 0 |

## இயற்கைப்பாடமும் தோட்ட வேலையும்

By M. Vivekanandha B.Sc., L.T.,

| | | | | |
|---|---|---|---|---|
| நான்காம் வகுப்பு .... | .... | 0 | 7 | 0 |
| ஐந்தாம் ,, .... | .... | 0 | 8 | 0 |

## Non-detailed Books:

By S. S. Arunagirinathar

| | | | | |
|---|---|---|---|---|
| பாலர் நல்ல கதைகள் 4-ம் வகுப்பு | .... | 0 | 5 | 0 |
| பாலர் கதா போதினி 5-ம் ,, | .... | 0 | 5 | 0 |
| தென்னிந்திய பெருமக்கள் .... | .... | 0 | 10 | 0 |

## FOR HIGH SCHOOLS

## Tamil Grammar & Composition

G. Chandramowleeswaran B.O.L.

London Mission High School, Salem

அனுமானமுறை இலக்கணம்

| | | | | |
|---|---|---|---|---|
| உரை நடை ஆக்கமும் 1வது பாரம் | .... | 0 | 8 | 0 |
| ஷை 2வது ,, | .... | 0 | 9 | 0 |
| ஷை 3வது ,, | .... | 0 | 10 | 0 |

P. Veeraraghavan

| | | | |
|---|---|---|---|
| ஐவர் அருஞ்செயல் | .... | 0 | 10 |

English

Mother India English Reader (Primer-I) 0 4

The Modern Printers, Madras